Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 16/50
மார்ச். 31- ஏப். 06, 2005

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S WEEKLY முரசு 608



## புலிகள் முஸ்லிம்களை ஏமாற்றுகிறார்களா?
அபூஹனீபா பேட்டி

## கிழக்குக் குழப்பங்கள்
ஓர் அஸ்தமனத்தின் உதயம்


மக்களின் பாராட்டு எனக்கு விருது
- விஜய்

எனது இரசிகர்கள் இனி நற்பணியாளர்களே!
- அஜித்

## டெனிஸ் உலகின் காதல் சுவாரசியங்கள்

## குவலயம் போற்ற வாழ்வோம்

# ஆன்மீகம்



இறைவனைப் பிரார்த்தனை செய்யும் ஒவ்வொரு அடியாரும் உடலும், உள்ளமும் தூய்மையுடையவையாக இருக்க தங்களை முதலில் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஆசாரசீலராய் முடியுமானவரை தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும். அறம் பிசகாது நெறி தவறாது கூடுமானவரை நன்மையே செய்யாவிடினும் கூட தீமை செய்யாது வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

மனிதன் ஆறறிவு கொண்ட அற்புதப் பிறவி பெற்றவன். ஐந்தறிவு பெற்ற மிருக நிலைக்கு படி இறங்கலாமா? கூடாது.

அன்றாட வாழ்க்கைக்கு அவசியம் உழைப்பு. அதனை நேர்மையான முறையில் முயன்று பொருளீட்டி வையம் புகழ வள்ளுவன் குறளமுதத்துக்கொப்ப வாழ முயற்சிக்க வேண்டும். முயன்றால் முடியாதது ஒன்றுமே இல்லை.

நாம் மனிதப் பிறவி எடுத்து வாழும் சூழ்நிலையில் எத்தகைய இடர்கள் வந்தாலும் கூட மனந் தளராது திடமாக அதனை எதிர்கொண்டு கடவுள் திருவருளைக் கரங் கூப்பிப் பெற்று நல்ல குணவானாகக் குவலயம் போற்ற வாழ்வதே மனிதனுக்கு அழகு.

*-சிவஸ்ரீ அ.அரசரெத்தினம், சேனையூர் - 06.*

## மனந் திரும்புவோம்

இது கடைசிக் காலம். இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளமாக வேதம் கூறுகின்ற அனைத்துக் காரியங்களும் எமது காலத்தில் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன. வேதம் எம்மை எச்சரிக்கிறது. சமீபத்திய சுனாமி அனர்த்தம் எம்மை எச்சரிக்கிறது. இப்போதாவது மனந் திரும்பி இயேசு கிறிஸ்துவை எமது சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டு தேவ இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோமாக!

"காலம் நிறைவேறிற்று; தேவனுடைய இராஜ்யம் சமீபமாயிற்று; மனந் திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என இயேசு கிறிஸ்து பிரசங்கித்தார். (மாற்கு 1:15) அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிட்டப்படவும் இல்லை என பரிசுத்த வேதாகமம் கூறுகிறது (அப் 4:12) நாம் உலகத்திலிருந்தாலும் உலகத்தாரல்ல. (யோவான் 17:14,16) மனந் திரும்புவோம். இந்த மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி, எம்மை இரட்சித்துக்கொள்வோம் (அப். 2:40).

**போதகர் வேதமுத்து ஜோசப், மொறட்டுவ.**

## இறை மன்னிப்பு

உமது பாவத்திற்காக மன்னிப்புக் கோருக! காலையும் மாலையும் உமதிறைவனைப் புகழ்ந்து துதி செய்வீராக;

(40:55)

உங்கள் இறைவனின் மன்னிப்பையும் வான் புவி போன்று அகண்ட சுவனத்தையும் அடைவதிற் போட்டி போடுங்கள். அல்லாஹ்வையும் அவனுடைய றஸூலையும் நம்பியவர்கட்கு தயார் செய்யப்பட்டது அந்த சுவனம். அது அல்லாஹ்வின் அருள். அவன் விரும்பியவர்க்கு அதைக் கொடுப்பான். அல்லாஹ் மகத்தான அருளுடையவன்.

(57:21)

தமக்குத் தாமே தீங்கிழைத்துக்கொண்ட அடியார்களே, அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழந்துவிட வேண்டாம். அல்லாஹ் எல்லாப் பாவங்களையும் மன்னிப்பான். நிச்சயமாக அவனே மன்னிப்பவன்.

(39:59)

"இறைவா, என்னை மன்னித்து கிருபை செய்வாயாக! கிருபை செய்வோரில் நீயே மிகச் சிறந்தவன்" என்று சொல்க.

(23:118)

**செல்வி செய்யது புஹாரி ஸஹானா, வாழைச்சேனை -05.**

## கவிதைப் போட்டி இல.605



### வாழ்வில்

இருள் சூழ்ந்த இவள்
வாழ்வில்
ஒரு விடியலின்
பார்வை தேடி
இரு விழி மலரக்
காத்திருக்கிறாள்!
காலமெல்லாம்
கண்ணீருடன்.

*த. லோஜனா,*
*கொழும்பு -06.*

### பரிசுக்குரிய கவிதை

## பெண்ணியம்

(ஆதிக்கக்) கம்பிகளுக்கு கண்
இல்லை.
கம்பிகளுக்கு இதயமில்லை.
கம்பிகளுக்கு உணர்வில்லை.
தகர்த்தெறிய உடைத்தெறிய
பெண்ணே... உன்னிடம்
(நம்பிக்)கைகள் உண்டு!!!!

*த. சஞ்சீவன்*
*திருகோணமலை.*

### ஏக்கப் பார்வை

எதற்காக ஏக்கப்
பார்வை?
என்ன உன்
எதிர்பார்ப்பு?
அன்பு, நீதி, மனிதம்,
இவற்றின் மரணச்
செய்தி
இன்னுமா
கிடைக்கவில்லை
உனக்கு?

*குப்பிளான் சதீஸ்,*
*யாழ்ப்பாணம்.*


**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### கண் துடைப்பா?

விசாரணைக்கெனப் போன - என்
அன்புக் கணவர் இப்படி - நடு
வீதியில் சூடு பட்டுக் கிடக்கிறாரே!
'கண்காணிப்பை'யும் காணோம்;
'கண்துடைப்பு' அறிக்கையையும்
காணோம்.

*-வெலிமடை, எம். ராமமூர்த்தி*

## கவிதைப் போட்டி இல.608



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 06.04.2005.*

கவிதைப் போட்டி இல.608
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### ஏக்கம்

பாதை தெரியாத
நிலையில்!
யாரும் பாராதம்
நிலையில்!
இருள் சூழ்ந்த
நொடியில்
உன் விலாசம்
அறிந்து வீடு தேடி
வந்தேனே!
என்னை ஊண் ஏதும்
இல்லாத சிறு
குட்டன்
என எண்ணி
அவமதித்தாள் உன்
தாய்.

*அனித்தா*
*பழனியாண்டி, ஹாலி*

### பதற்றம்

சொந்தங்களைச்
சுத்திகரிப்புச்
செய்த
சுனாமி வருகிறதா?
இல்லை இனச் சுத்திரகரிப்பு
செய்ய
மனித வேங்கை வருகிறதா?

*சங்கம ஹிஷாம்,*
*திருகோணமலை.*

### பெண்கள்

இந்தச் சிறை
எப்போது திறக்கப்படும்
நாங்களும்
உரிமையோடு வாழ...

*எஸ்.பி. பாலமுருகன்.*

### விளக்கம்

சீதனமென்னும்
சிறைக்குள்
இவள் போன்ற
நிலாக்களெல்லாம்
நசுங்கி நசுங்கி
நட்சத்திரங்களாகி
விடுவதை
விளக்கி
வைக்கும்
விவரணச்
சித்திரமோ
இது?

*க. கமால்தீன்,*
*ஏறாவூர் - 03*

### ஏமாற்றம்

வெளிறிப்போன வெட்கம்
வேப்பிலையாய் கசக்கிறது
நித்தம்
வித்திட்டவன் யாரவனென்று
துடிக்கிறது பாவை இன்று.

*எஸ். சுதாகர், கொழும்பு - 11.*

### காத்திருப்பு

வீடிழந்தேன்;
வீதிவழி வந்தேன்.
தேடுகிறேன் என்
துணைவனை.
காத்திருந்து காத்திருந்து
கண்ணும் நோகுதே!

*ஏ.எஸ்.எம். ரவூப், கொழும்பு –15.*

# உங்கள் பக்கம்

## பாதிக்கப்படாதோருக்கு கூடாரமும் நிவாரணமும்?

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசினால் கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இக் கூடாரங்கள் வெளிநாடுகளிலிருந்து உதவியாகக் கிடைத்தவை.

கொழும்பு - மட்டக்குளி விஸ்ட் வைக் மைதானத்தில் 100க்கு மேற்பட்ட கூடாரங்களில் பாதிக்கப்பட்டவர்களும் பாதிக்கப்படாதவர்களும் இருக்கின்றனர். இக் கூடாரங்களில் உள்ளவர்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. நீர் வசதி எல்லாம் தாராளமாகச் செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பிரச்சினை. உண்மையிலே பாதிக்கப்படாதவர்களும் இக் கூடாரங்களில் இருக்கின்றனர். இது பற்றி நம்பத் தக்க தகவல்கள் கிடைத்துள்ளன.

ஒரு சிலர் தமது சொந்த வீடுகளை வாடகைக்குக் கொடுத்துவிட்டு இக் கூடாரங்களில் தஞ்சம் என்று இருக்கின்றனர். எனவே இப் போலி ஆசாமிகளை அகற்ற வேண்டும். தேடிப் பிடித்துத் தண்டனை கொடுக்க வேண்டும். இப் போலிகளால் உண்மையானவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே அரசாங்கம் இது விஷயத்தில் கூடிய கவனம் செலுத்தி உஷாராக வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**இவ்வண்ணம்.**
**ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு -15.**

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -4-514282
தொலை நகல் (Fax):–4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk




# வாசக(ர்) சாலை

### வீர நடை போடும் வீர முரசே!

வீர முரசே! உன்னைக் கண்டால்
என் உதட்டில் சிரிப்பு.
ஒரு கிழமை உன்னைக் காணாவிட்டால்
என் மனதில் பெரும் தவிப்பு.
வெள்ளி தோறும் என் மடியில்
தவழும் உனக்கு எப்படி நன்றி
சொல்வதென்று எனக்குத் தெரியாது.
உன்னை வார்த்தைகளால் வர்ணிக்கவும்
முடியாது.
உனக்கு நீயே நிகர்.
உன் சேவை மேலும் ஓங்கி
வளர என் கோடி கோடி வாழ்த்துகள்.
Thank you Very Much முரசே!

*வவுணதீவு, தேவராஜா ராசாத்தி,*
*லெபனான்.*

### ஓ போடுகிறோம்!

தினமுரசே!..
நீ!... நீதான்!!
எவரெவரெல்லாம்
முழுப் பூசணிக்காயை
ஒரு சோற்றுக்குள்ளே
மறைத்தார்களோ!
அவர்களது
கொடிய விஷங்களை
உலக சந்தியில்
அப்படியே
கொட்டிவிடுகிறாய்!
அப்போதுதான்
நல்லது எது தீயது
எதுவென
எம்மால் கண்டறிய
முடிகிறது.
இப்படித் தொடரும்
உன்னருமைப்
பணிக்கு
நாங்கள் 'ஓ'
போடுகிறோம்.

*அ.கா.மு. றிஸ்வின்,*
*மூதூர் - 01.*

என் இனிய தினமுரசே!

உன் உடலில் நீ கொண்டு வரும் அத்தனை ஆக்கமும் வரவேற்கத் தக்கது. அதிலும் பாப்பா முரசு, தேன் கிண்ணம் என்பன எனக்குப் பிடிக்கும். மாணவர்கள் அனுப்பும் ஆக்கங்களைப் பிரசுரித்து அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு நன்றி. முரசே உன் பணி சிறக்க என் வாழ்த்துக்கள்.

*அன்புள்ள வாசகி, போ.டிவ்னா,*
*யாழ்ப்பாணம்.*

உள்ளம் கொள்ளை கொண்ட முரசே.... உன் வரவை எண்ணி.. தவமிருக்கிறேன்.

என்றும் உனக்காய் நானடி... உயிருடன் உயிராக... உன்னில் நான் கலந்திருக்க... ஆசை கொள்கிறேன்...படிகள் பல கடந்து பருவங்கள் பல அடைந்தும்... பலமான மக்கள் கொண்டு வளர்ந்தவள்.. . யாரும் எட்டாத சிகரம் தொட்டவள் நீ... உனக்காகத் தோள் கொடுக்க ஆயிரம்.... ஆயிரம்.... வாசகர்கள் உண்டு. ஆண்டுக்காண்டு... ஆதாரமாய் உன் பக்கம் நல்ல கலைஞர்கள் பெற்றாய் நீயே... முரசு.. உன் வளர்ச்சிக்காய் உரமான... பேனா பிடித்த கரங்கள் கோடி... உன்னை எட்ட முடியாமல் வீழ்ந்தவர்கள் பலர்... அத்தனைக்கும் மத்தியில் நீயே என்றும் அசையாது இருக்க மக்கள் ஆசிகள் உனக்கு என்றும் உண்டு.

*பா.மு. றபாய்தீன், கிண்ணியா.*

# தேசியப் பிரச்சினைகளில் இணக்கப்பாடு வேண்டும்

## -ஆளும் கூட்டமைப்புப் பங்காளிகளுக்கு வேண்டுகோள்

இலங்கையின் பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முதன்மைப்படுத்தி, ஏனைய பிரச்சினைகளுக்கு ஐக்கியப்பட்டுத் தீர்வு காண, ஆளும் கூட்டமைப்பிலுள்ள முதன்மைக் கட்சியான சுதந்திரக் கட்சியும் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.யும் முன்வர வேண்டுமென்று அரசியல் ஆய்வாளரான ரொஷான் எதிரிசிங்க தெரிவித்தார். நாட்டு மக்களின் ஐக்கியத்தைச் சீர்குலைத்து, தேசத்தின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பதற்காக இரு தரப்புத் தீயச க்திகளும் முயன்று வரும் இவ்வேளையில், தேசிய மற்றும் முற்போக்குச் சக்திகளின் ஐக்கியம் அவசியமென்றும் அவர் குறிப்பிட்டார். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தா பனத்தின் மூன்றிலொரு பங்கினை இந்தியா வின் பாரத் கம்பனிக்கு விற்க அரசாங்கம் முனைவதாகவும் இவ்வாறான முக்கிய நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்படு வதைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை யெனவும் ஜே.வி.பி. குளுரைத்துள்ளது. 1995ஆம் ஆண்டிலேயே இந்த மறுசீரமைப்புத் திட்டம் முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவை வட்டாரங்கள் கூறுகின்றன. சர்வதேசச் சந்தையில் பெற்றோலின் விலை உயர்ந் திருப்பதாகவும், கடந்த பெப்ரவரி மாதத்தில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 72 ரூபாவுக்கு விற்க வேண்டியளவுக்கு சர்வதேச சந்தையில் விலை உயர்வு ஏற்பட்டதாகவும், இதனால் லீற்றர் ஒன்றுக்கு எட்டு ரூபா வீதம் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடை வதாகவும் அதன் தலைவர் ஜாலிய மெதகொட தெரிவிக்கிறார். கடந்த வருடம் 1600 கோடி ரூபா நட்டமேற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். இதனாலேயே மறுசீரமைப்புச் செய்ய வேண்டியுள்ளதாகவும் சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. உண்மையில் சாதாரண மக்களைப் பாதிக்காதவாறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் வேண்டும். அதேவேளை தேசத்தின் பொருளாதாரம் சீர்குலையாமலும் பார்க்க வேண்டும். எமது வளங்களைப் பாதுகாக்கும் அதேவேளை ஏற்படும் நட்டங்களை மக்கள் மீது சுமத்தாமல் பார்க்கவும் வேண்டும். எனவே ஆட்சியின் பங்காளிகளான இரு தரப்பினரும் ஐக்கியப்பட்டு இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்றும் அவர் கூறினார். இனவாத சக்திகளுக்கெதிராக ஐக்கியப்பட்டுப் போராடுங்கள். போராடுவதற்காக ஐக்கியப் படுங்கள். ஐக்கியமும் விட்டுக்கொடுப் புடனான போராட்டமும் அவசியமானதே. எனவே இரு தரப்பினரும் இன்னமும் இரு வாரங்களுக்குள் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென எடுத்த முடிவு பாராட்டத் தக்கதேயென்றும் அவர் சொன்னார்.





கொழும்பு, பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் புதிய மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா 25.03.2005ஆம் திகதி கல்லூரி அதிபர் திருமதி.கைலாசநாதன் தலைமையில் நடைபெற்றது. எண்பது இலட்ச ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லினைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் நாட்டி வைத்தார். சிறப்பு விருந்தினராக மனோ கணேசன் எம்.பி.யும் கலந்துகொண்டார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மனோ கணேசன் எம்.பி. ஆகியோர் சம்பிரதாயபூர்வமாக அழைத்து வரப்படுவதை மேலேயுள்ள படத்திலும் அமைச்சர் குத்துவிளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைப்பதைக் கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

## 'கல்ப் டைம்ஸ்' செய்தி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விமான மூலம் செல்லும் பயணிகளிடமும் வரி அறவிடும் முறையைப் புலிகள் ஆரம் பித்துள்ளனரென்று 'கல்ப் நியூஸ்' என்னும் வளைகுடா சஞ்சிகை தெரிவித்துள்ளது. ஏ-9 பாதையால் செல்லும் பயணிகளிடம் புலிகள் வரி அறவிடுகின்றனரெனத் தெரிவித்த 'கல்ப் டைம்ஸ்', வரி அறவீட்டி லிருந்து தப்புவதற்காக வசதி படைத்த பயணிகள் விமான மூலம் செல்கின்றனரென்றும் தெரிவித்துள்ளது. வரி அறவீடுகள் விஸ்தரிக்கப்படுகின்றனவென்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## ஐந்து புலிகள் பலி

மட்டக்களப்பின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தராவிக்குளமென்ற இடத்தில் கடந்த 26ஆம் திகதி பிரபா அணியைச் சேர்ந்த நால்வர் சுட்டுக் கொல்லப் பட்டனரென்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. கருணா தரப்பினரைக் கொல்வதற்கென அனுப்பிவைக்கப்பட்ட இவர்கள் மீது கருணா அணியினர் மறைந் திருந்து தாக்குதல் நடத்தினரென்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. தராவிக் குளத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த புலி உறுப்பினரொரு வரும் அன்றைய தினம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## கனடியப் பாராளுமன்றத்தில் இலங்கையின் 'சிறுவர் போராளிகள்'

இலங்கையில் புலிகள், வயது குறைந்த பிள்ளைகளைத் தமது படையணிகளில் சேர்த்துக்கொள்ளும் விவகாரம் சம்பந்தமாகக் கடந்த 23ஆம் திகதி கனடிய சமஷ்டிப் பாராளுமன்றத்தில் ஆராயப்பட்டது. புலிகள் பிள்ளைகளைக் கடத்துவதைத் தடுத்து நிறுத்தும் வழிவகைகள் பற்றியும் பிள்ளைகளின் பாதுகாப்புக்குக் கனடிய நிதியுதவி வழங்குவது பற்றியும் இங்கு விவாதிக்கப்பட்டது. மனித உரிமைகள் மற்றும் சர்வதேச உதவிகள் தொடர்பான கனடியப் பாராளுமன்றத்தின் உப கமிட்டி கொடுத்த அழுத்தத்தின் பேரில் மேற்படி விடயம் ஆராய்வுக்கென எடுத்துக்கொள்ளப்பட்டது. இலங்கையில் சிறுவர்களின் மனித உரிமைகள் புலிகளால் மீறப்படுவதாக சர்வதேச சமூகத்தால் பிரச்சினைகள் கிளப்பப்பட்டதோடு ஐ.நா.பாதுகாப்புச் சபையிலும் இது பற்றிக் கலந்துரையாடப் பட்டதாலும் இப் பிரச்சினை பற்றிக் கனடியப் பாராளுமன்றம் ஆராய்ந்ததாக மேற்படி உப கமிட்டியின் தலைவரான டேவிற் கில்கர் எம்.பி. விடுத்த அறிக்கையில் தெரிவித்தார். 2002ஆம் ஆண்டு அரசும் புலிகளும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்தும் வயது குறைந்த பிள்ளைகளைப் பெருமளவில் புலிகள் கடத்திச் சென்றுள்ளனரென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. யுத்த நிறுத்த காலத்தில் 3,516 பிள்ளை களைப் புலிகள் கடத்திச் சென்று தமது படையணிகளில் சேர்த்திருப்பதாக யுனிசெப் தெரிவித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## நோர்வே மீது குற்றச்சாட்டு

நோர்வே புலிகளுக்குப் பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகக் கண்டனம் தெரிவித்து 'நோர்வே அரங்கம்' எனும் அமைப்பு அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீட்டர்சனுக்குக் கடிதமொன்றினை அனுப்பி வைத்துள்ளது. அண்மையில் உருவாக் கப்பட்ட இந்த அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகமென்ற புலிகளின் முகவரமைப்பு நோர்வேயில் சுதந்திரமாக நிதி திரட்டலில் ஈடுபடுவதைத் தடை செய்யுமாறும் கோரி யுள்ளது. கள நிலைமைகளைப் பொறுத்த வரை இந்தக் கருத்துத் தவறானதாகவும் இருக்கலாம். ஆனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச நிலையைப் போக்க வேண்டியது நோர்வேயின் கடமையென்றும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசிடம் வாகனம் கேட்டு அலைகிறார் ஈழவேந்தன்

'நான் பாராளுமன்ற உறுப்பினராகி இவ் வருடம் ஏப்ரலில் ஓராண்டு பூர்த்தியாகின்ற போதும் எனது அடிப்படைத் தேவைகளில் ஒன்றான வாகனம் இதுவரை எனக்குத் தரப்படவில்லை' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி.யான எம்.கே.ஈழவேந்தன் பாராளுமன்ற, கிறிஸ்தவ விவகார அமைச்சர் மில்ரோய் பெர்னான் டோவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார். பாதுகாப்புக் காரணங்களுக்காக வும் தம்மைத் தெரிவு செய்த மக்களுக்குச் சேவையாற்றுவதற்காகவும் தமக்கு வாகனமொன்று தரப்பட வேண்டுமென்றும் அவர் அமைச்சரைக் கேட்டுள்ளார். சக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அவர்களின் வாகனத்தில் செல்ல 'லிப்ற்' கேட்பது தனக்கு அசௌகரியமாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள ஈழவேந்தன் 'அடுத்தவனின் அப்பத்தைத் தட்டிப் பறிக்காதே' என்று வேதாகமத்தில் சொல்லப்படும் அறிவுரை யையும் கிறிஸ்தவ அமைச்சரான மில்ரோய் பெர்னான்டோவுக்குச் சுட்டிக்காட்டி எழுதியுள்ளார். 'கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் தெரிந்தோ தெரியாமலோ எனக்கு இதுவரை வாகனம் வழங்காத தானது எனது அப்பத்தையும் தட்டிப் பறிப்பது போன்ற செயலாகும்' எனவும் குறிப்பிட் டுள்ளார்.

## 100 மீற்றர் விடயத்தில் ஜனாதிபதிக்கு வெற்றி

இந்தோனேசியத் தீவான சுமாத்ராவில் கடந்த 28ஆம் திகதி இரவு 11.00 மணியளவில் ஏற்பட்ட பூமியதிர்வினால் இந்து சமுத்திரக் கரையோர நாடுகள் பலவும் கடற்பேரலைகளால் பாதிக்கப்பட லாமென்று எழுந்த அச்சம், அரசாங்கமும் ஜனாதிபதியும் கடற்கரைப் பகுதியிலிருந்து நூறு மீற்றர்களுக்குள் குடியிருப்புகளோ கட்டடங்களோ நிர்மாணிக்கக் கூடாதென்று விடுத்த தடையுத்தரவை நியாயப்படுத்தி யுள்ளதென அரசாங்கப் பேச்சாளரொருவர் தெரிவித்தார். இந்தப் புவி நடுக்கம் ஏற்பட்டு மூன்று மணித்தியாலங்களில் தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, இலங்கை உட்படப் பல நாடுகள் ஆழிப் பேரலை களால் பாதிக்கப்படலாமென்ற அச்சம் தெரிவிக்கப்பட்டமையும் மக்கள் பாதுகாப்புத் தேடி ஓடியமையும் குறிப்பிடத் தக்கது. மார்ச் 28ஆம் திகதிய பூமியதிர்ச்சி சுமாத்ரா பகுதியில் கடலுக்குக் கீழ் முப்பது கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதால் கடல் அதிர்வுகள் ஏற்படவில்லையென்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். டிசம்பர் 26ஆம் திகதியும் சுமாத்ராவில் ஏற்பட்ட பூகம்பம் கடலுக்குக் கீழ் பத்து கிலோ மீற்றர் ஆழத்தில் நிகழ்ந்ததால் பல்வேறு இந்து சமுத்திர நாடுகளைச் சேர்ந்த சுமார் மூன்று இலட்சம் மக்கள் பலியானமை குறிப்பிடத் தக்கது. சுமாத்ராவை நில நடுக்க அபாயமுள்ள பகுதியாக விவரித்திருக்கும் விஞ்ஞானிகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்து சமுத்திர நாடுகளைக் கோரியுள்ளனர். எனவே இந்த நிலையில் அரசியல் நோக்கத்திற்காக நூறு மீற்றர் கட்டுப்பாட்டை எதிர்த்துவந்த நாடுகள் இனி அதனைக் கைவிடுவதே நல்லதென்றும் அப் பேச்சாளர் சொன்னார்.

## பொதுக் கட்டமைப்பு; மீண்டும் குட்டை குழம்புகிறது

வடக்கு, கிழக்கில் கடற் பேரலை களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண மற்றும் மீள் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள அரசும் புலிகளும் விரைவில் இணக்கத்துக்கு வந்து பொதுக் கட்டமைப்பொன்றினை ஏற்படுத்துவரென்று நோர்வே தெரிவித்த நம்பிக்கை மீண்டும் தோல்வியிலேயே முடிந்துள்ளது. நோர்வே மற்றும் புலிகளின் பிந்திய யோசனைகளுக்கு அரசு தெரிவித்த பதில், கடந்த 22ஆம் திகதி சுவிற்ஸர்லாந்தின் தலைநகரான பேர்னில் வைத்து தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் தூதுக் குழுவிடம் கையளிக்கப்பட்டது. இது குறித்த தமது மறுப்புக் கருத்துக் களுடனான அறிக்கையைத் தமிழ்ச் செல்வன் குழுவினர் வன்னியிலிருக்கும் பிரபாகரனுக்கு அனுப்பிவைத் துள்ளனர். வடக்கு, கிழக்கு கரை யோரப் பகுதிகளின் நிவாரண, மீள் கட்டுமாணப் பணிகளுக்கென 'ஆட் களையும் உபகரணங்களையும் கடல் மார்க்கமாகக் கொண்டுவர அனுமதிக்க வேண்டுமெனப் புலிகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித் திருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது. கடல் மார்க்கத்தைப் பயன் படுத்தப் புலிகளுக்கு அனுமதி வழங் கினால் அது நாட்டின் பந்தோபஸ் துக்குப் பயமுறுத்தலாக அமைய லாமென அரச அதிகாரியொருவர் தெரிவித்தார். சுனாமி தாக்கி நூறு நாட்கள் கடக்கின்ற நிலையிலும் இரு தரப்பினரும் ஒரு பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தும் இணக்கத்துக்கு வர முடியாமல் உள்ளனர்.

## யுனிசெப் உப்புக்கும் வரி

யுனிசெப் அமைப்பின் அனுசரணை யுடன் தயாரிக்கப்படும் ஆனையிறவு 'சூரிய உப்பு' 19 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. பக்கெட்டில் விலை 18 ரூபாவென அச்சிடப்பட்டுள்ள போதிலும் பக்கெட்டுக்கு ஒரு ரூபா வரி சேர்த்தே அறவிடப்படுகிறது. யுனிசெப் யாருக்கு இந்த வரியைச் செலுத்துகிறது என்ற கேள்வி மக்களால் கேட்கப்படுகிறது.

## சிப்பாய்க்குச் சிறை

யாழ்ப்பாணம், மடத்தடியிலுள்ள பிரதான வீதியில் இராணுவ ட்ரக் மோதி இருவர் பலியான சம்பவம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவச் சாரதியான சுமதிபால லியனகே என்பவருக்கு யாழ்.நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். 2003ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ஆம் திகதி இந்த விபத்து நடைபெற்றது. எதிரி தண்டிக்கப்பட்டுள்ளதால் பாதிக்கப்பட்டவர்கள் சிவில் வழக்குத் தாக்கல் செய்து நஷ்டஈடு பெற முடியு மென்று தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## புலி - படை மோதல் தணிந்தது

திருக்கோவில் மண்டானை தற் காலிக அகதி முகாமில் விசேட அதிரடிப்படையினருக்கும் புலிகளுக்கு மிடையில் ஏற்பட்ட மோதல் குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வினர் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த மோதலின்போது புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் மற்றும் மதன் என்ற புலி உறுப்பினர் ஆகியோர் காயமுற்று கல்முனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமுற்ற அதிரடிப்படை வீரர்கள் இருவர் திருக் கோவில் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டிருந்தனர். மண்டானை அகதி முகாமுக்குச் சென்ற ஏகலைவன் என்ற புலி உறுப்பினர், வயது குறைந்த இரு சிறுவர்களைக் கடத்திச் செல்ல முற்பட்டபோது படையினர் தலையிட்டு அதனைத் தடுத்ததாகவும் இதுபற்றிக் கேள்விப்பட்ட குயிலின்பன் தரப்பினருக்கும் படையினருக்கும் வாக்குவாதம் முற்றிக் கைகலப்பாக மாறியதாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்தன. புலிகள் கடத்த முயன்ற இரு சிறுவர்களின் வாக்குமூலங் களைத் திருக்கோவில் பொலிஸார் பதிவு செய்துள்ளனர்.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### மக்களின் எதிர்பார்ப்பு இயல்பு வாழ்க்கையே!

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி பதவியிறக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது. ஆட்சியதிகாரத்தில் இருக்கின்றபோது புலிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டதும், பேச்சுவார்த்தைக்கான பேச்சுவார்த்தைகளை கட்டம் கட்டமாக நகர்த்தியதும் குறிப்பிடத் தக்கவை. அப்போது ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், புலிகளின் கேள்விகளுக்கு ஒத்துப்போக முடியாத சட்டப் பிரச்சினைகள் என்பவற்றுக்கு முகங் கொடுக்க முடியாமல் பேச்சுவார்த்தைகள் இடைநடுவில் முறிந்து போயின. ஆட்சியதிகாரம் எனும் வண்டியை முனனேயோ அல்லது பின்னேயோ நகர்த்த முடியாமல் ஐக்கிய தேசியக் கட்சி தவித்துக்கொண்டிருந்த சிறிய இடைவெளியில் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தார். நாட்டினுடைய பாதுகாப்பு, மக்களின் பாதுகாப்பு, தேசிய இறைமை என்பன மிகவும் பாதாளத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சியால் தள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தன் நியாயத்தைத் தெரிவித்திருந்தார். அன்றிலிருந்து இன்று வரையான ஒரு வருட இடைவெளியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடக்கப்பட்டு சாதாரண பொதுக் கட்டமைப்பைக்கூட அமைத்துக்கொள்ள முடியாத சூழல் ஒரு புறமும், கிழக்கு மாகாணத்தில் சராசரி ஒரு நாளைக்கு ஒரு படுகொலை என்ற வகையில் பாதுகாப்பு அச்சுறுத்தலும் இன்றைக்கும் தொடர்கதையாகவே உள்ளது. ஒப்பீடு செய்கின்றபோது ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரம் கலைக்கப்படும் வரையான காலத்துக்கும் தற்போதைய நிலைக்கும் எவ்வித மாற்றங்களும் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, சில அரசியல் மாற்றங்கள் மட்டுமே நடந்துள்ளன. தவறான முறைத் தெரிவுகளில் தமிழர் கூட்டமைப்பும், ஜே.வி.பி. - சு.க.வின் அரசியல் கூட்டும், மு.கா.வின் பிளவுகளும் - எதையெல்லாம் கொடுக்க மறுத்ததோ, அவற்றையெல்லாம் கொடுக்கத் தயாராக இருப்பதாக சந்தர்ப்பவாத அரசியல் முகத்தோடு ஐக்கிய தேசியக் கட்சி மாறிவிட்டுள்ளதைக் குறிப்பிடலாம். இம்மாற்றங்களுக்கு ஊடகங்களின் பங்கும் பிரதானமானவை. ஊடக தர்மம், கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் இவையெல்லாவற்றையும் குழி தோண்டிப் புதைத்துப் பட்டவர்த்தனமாகவே தமது சார்புக் கொள்கைகளை வெளிப்படுத்தி, தமது முகக் கவசங்களைக் கிழித்து எறிந்துள்ளனர். ஆக, மாற்றங்களை விரும்பிய மக்களின் எண்ணங்கள் எத் தரப்பிடமிருந்தும் எதிரொலிக்கவில்லை. சமாதானம் வரும், படுகொலைகள் முடிவு பெறும், அழிந்து போன தேசம் மீண்டும் கட்டியெழுப்பப்படும் என்பன போன்ற இலங்கை மக்களின் இலட்சியக் கனவுகள் இன்னும் கனவுகளாகவே உள்ளன. மக்களுக்கும் அவர்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காலங்காலமாகத் தொடரும் இந்த மல்யுத்த ரணங்களை ஆற்றுவதற்கிடையே, சுனாமிப் பேரலையும் தனது பங்கு ஆக்கிரமிப்பை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது பகிரங்கமாகவே திணித்துப் போயுள்ளது. வடுக்களைச் சுமந்துகொண்டு எதுவும் தேவையில்லையென்று வாழ்வதற்கு முடியாது. ஏனெனில் சாதாரண வாழ்க்கைக்காகக்கூடப் போராட வேண்டிய கட்டாயம் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. ‘எதைக் கொண்டு வந்தோம் கொண்டு செல்ல’ என்கின்ற பகவத் கீதையின் வார்த்தை வாசிப்பதற்கு மட்டுமே. மனித வாழ்வைப் பொறுத்தவரை நிரந்தரமற்றது என்றாலும்கூட எதிர்பார்ப்புகளை, ஆவலை நிறையவே சுமத்திவிடுகிறது என்பதை மக்கள் நலனில் நிற்பவர்களால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# கிழக்குக் குழப்பங்கள் ஓர் அஸ்தமனத்தின் உதயம்

கிழக்குத் திசையில்தான் சூரியன் உதிக்கிறது. மேற்கில் அஸ்தமிப்பதும் தெரிந்ததுதான். இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார மையமாக மேற்கு மாகாணத்திலுள்ள கொழும்பு நகரமே திகழ்ந்து வந்ததாலும் ஆட்சியதிகாரமும் இங்கேயே குவிக்கப் பட்டதாலும் ஒற்றையாட்சிக்கு எதிரான போராட்டம் வடக்கில் முளைவிட்டு வளர்ந்து கிழக்குக்கும் பரவியது. மேற்கின் அதிகார மையத்தை அஸ்தமிக்கச் செய்வதற்காகத் தமிழ் இளைஞர்கள் நடத்திய ஆயுதப் போராட்டம் வடக்கிலும் கிழக்கிலும் உதயமானாலும், அந்தப் போராட்டப் போக்கில் கிழக்கு மாகாணம் இன்று படுகொலைகளால் குழம்பிப் போய் நிற்கிறது. ஜனநாயக வழிக்குத் திரும்பிவிட்ட முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள், மேற்கில் குவிந்துள்ள அதிகாரத்தை வடக்கு, கிழக்குக்கும் சமச்சீரற்ற முறையில் பகிர்ந்துகொள்வதற்காக ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளன. இருந்தும் இன்னமும் ஆயுதங்களை ஏந்தி நிற்கும் புலிகள் இயக்கம், என்ன நோக்கத்துக்காகச் சமாதான சூழலிலும் ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றதென்பது யாருக்கும் தெரியாததல்ல.

கிழக்கு மாகாணம் இன்று படுகொலைக் களமாக மாற்றப்பட்டிருக்கிறது. புலிகள் ‘போதிசத்துசப் புத்தர்களைப் போலத்’ தாம் படுகொலைகளே செய்ய வில்லையென்று அடித்துக் கூறுகிறார்கள். கருணா அணி கிழக்கில் செயற்படவில்லையென்று அதாவது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தளமமைத்துச் செயற்பட வில்லையென்று இராணுவப் பேச்சாளர் கூறுகிறார். இவை இரண்டுமே அப்பட்டமான பொய்களாகும். புலிகள் மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களை வேட்டையாடி வருவதும் புலிகளுக்கெதிராகக் கருணா அணி கிழக்கில் முகங்கொடுத்து வருவதும் ஒன்றும் அம்பலத்துக்கு வராத விடயங்களல்ல.

மட்டக்களப்பு - பொலநறுவை மாவட்டங்களின்

> **யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஏனைய தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களையக் கோரிய புலிகளிடம், நிராயுதபாணிகளான மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களைப் புலிகள் தாக்கக் கூடாதென்ற உத்தரவாதத்தை ஏன் ரணில் அரசு புலிகளிடமிருந்து பெறத் தவறியது? புலிகளின் தாக்குதலுக்கிலக்காகும் எவரும் அரசோ, படையினரோ பாதுகாப்பு வழங்காத பட்சத்தில் தமது பாதுகாப்பைத் தாமே தேடிக்கொள்வதில் தவறில்லை.**

எல்லைப் பகுதியிலுள்ள வெலிக்கந்தைக் காட்டுப் பகுதியிலுள்ள தீவுச்சேனை என்னும் பின்தங்கிய கிராமமொன்றின் மீது பிரபா அணிப் புலிகள் அண்மையில் தாக்குதல் நடத்தியதையடுத்து, அங்கு கருணா அணியினர் முகாமிட்டிருந்த விடயம் அம்பலத்துக்கு வந்தது. இத் தாக்குதலில் பிரபா அணிப் புலிகள் இருவர் கொல்லப்பட்டனரென்பதும் கருணா அணியைச் சேர்ந்த மங்களம் மாஸ்டர் என்பவர் உட்பட மூவர் காயமுற்றன ரென்பதும் ஏற்கெனவே வெளியான செய்திகள்தான். வாழைச்சேனை - ஹபரணைப் பாதையில் பொலநறுவை மாவட்டத்திலுள்ள செவளப்பிட்டிய என்ற இடத்திலிருந்து பத்துக் கிலோ மீற்றர்கள் வடக்கில் அமைந்திருப்பதே இந்தத் தீவுச்சேனை என்ற மிகவும் பின்தங்கிய கிராமமாகும். இத் தீவுச்சேனையைச் சுற்றியோ அண்மித்தோ இராணுவ முகாம்களோ காவலரண்களோ இல்லையென்பது குறிப்பிடத் தக்கது. தீவுச்சேனை என்ற பெயரில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசமும் அருகே அதே பெயரில் முஸ்லிம்கள் வாழும் பகுதியும் உண்டு. இங்கு வாழும் மக்கள் பாரம்பரிய ஆதிவாசிகளின் வழித்தோன்றல்களென்று கூறப்படுகிறது. மீன்பிடி, சேனைப் பயிர்ச்செய்கை, மிருக வளர்ப்பு ஆகியவை இம் மக்களின் ஜீவனோபாயத் தொழிலாகும். பிரபா அணிப் புலிகளின் தாக்குதல்களுக்குள்ளான தீவுச் சேனையில் 78 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது. பக்கத்திலுள்ள கரப்பொல என்ற கிராமத்திலும் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். தீவுச்சேனையிலிருந்து மூன்று கிலோ மீற்றர்கள் தூரத்துக்கு அப்பால் முதுகல என்ற காட்டுப் பகுதிக் கிராமம் இருக்கிறது. தீவுச்சேனையிலிருந்து வடக்காகப் பத்துக் கிலோ மீற்றர்கள் அப்பால் கெவுலியாமடு என்ற முஸ்லிம் மக்கள் வாழும் கிராமம் உள்ளது. போதிய போக்குவரத்து வசதிகளும் வெளியுலகத் தொடர்புகளும் இல்லாத இந்தக் கிராமங்கள் வடமத்திய மாகாணத்தின் எல்லைப் பகுதியான பொலநறுவையின் காட்டுப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன. அசிரிகம போன்ற சிங்கள மக்கள் வாழும் பகுதிகளும் இங்கே உள்ளன.

கடந்த வருடம் மார்ச் மாத ஆரம்பத்தில் உருவான பிரபா - கருணா மோதலின் தொடர் நிகழ்வாகவே இப்போதைய தாக்குதல்கள் கிழக்கு மாகாணத்தின் எல்லைகளைத் தாண்டிப் பொலநறுவைக்குள்ளும் ஊடுருவியுள்ளன. கருணாவின் கிளர்ச்சியால் கிழக்கு மாகாணம் பிரபா அணிப் புலிகளின் கைகளிலிருந்து பறிபோய்விட்டதென்றே கூற வேண்டும். கருணா தனக்குக் கீழிருந்த சுமார் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வர்களைக் கொண்ட படையணிகளைக் கலைத்துவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்ப முனைந்தபோதுதான் பிரபா அணிப் புலிகளின் தாக்குதல் நடைபெற்றதென்பது குறிப்பிடத் தக்கது. புலிகள் இயக்கத்துக்குள் என்றுமே உட்கட்சி ஜனநாயம் நிலவியதில்லை. ‘சூரியதேவன்’ என்று வர்ணிக்கப்படும் பிரபாகரனுக்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப் பிரமாணம் செய்பவர்களே புலி இயக்கத்துக்குள் சேர்த்துக்கொள்ளப்படுவர். தனிநபர் வழிபாடு அந்த இயக்கத்தின் மூல மந்திரமும் மூடு மந்திரமுமாகும்.

பிரபா - கருணா முரண்பாடு அம்பலத்துக்கு வந்ததையடுத்து அதனை உண்மையென ஏற்ற பிரபா அணிப் புலிகள், அதனை உள் விவகாரமெனக் கூறித் தாங்களே அதனைக் கையாள்வதாக நோர்வேக்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவித்தனர். ஆனால், யுத்த நிறுத்த ஒப்பந்த ஷரத்துக்களையும் மீறி வன்னியிலிருந்து ஆயுதங்களுடன் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கூடாக மட்டக்களப்பின் வெருகல் ஆற்றுப் பகுதியைக் கடந்த பிரபா அணிப் புலிகள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான கருணா தரப்பினர் கொல்லப்பட்டனர். இது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் அரசும் கூட மௌனம் சாதித்தன. படையணிகளைக் கலைத்துவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்ப விரும்பிய கருணா அணி மீது நடத்திய தாக்குதல் யுத்த நிறுத்த மீறல் இல்லையா? மனித உரிமை மீறல் இல்லையா?

கருணா அணியைத் துணைப் படையென்று சொல்ல முடியாது. கடந்த வருடம் மார்ச் மாதம் வரை புலிகளெனவே அவர்களும் அழைக்கப்பட்டனர். அரசாங்கத்துடன் புலிகள் வெளிநாடுகளில் நடத்திய பேச்சுவார்த்தைகளில் கருணாவும் ஒருவராகப் பங்குபற்றியவர். கருணா விசுவாசிகளை கிழக்கில் சிறைக் கூடங்களுக்குள்ளும் வீதிகளிலும் வீடுகளிலும் வேட்டையாடியது மட்டுமல்ல, கொழும்பு வரை சென்று அவர்களைப் பிரபாப் புலிகள் வேட்டையாடத் தொடங்கிய பின்னர், எஞ்சியவர்கள் தமது பாதுகாப்பைத் தேடுவதைத் தவறென யாரும் கூற முடியாது.

பிரபா அணிப் புலிகளிடம் சரணடைந்த கருணாவின் முக்கியஸ்தர்களான ஜிம் கெலி தாத்தா உட்படப் பலர் கொல்லப்பட்டுவிட்டனர். கருணாவோடு கொழும்புக்கு தப்பி வந்த நிலாவினி உட்பட நான்கு பெண் போராளிகளும் கிழக்குக்கு அழைக்கப்பட்ட பின்னர் காணாமலே போய்விட்டார்கள். இந்த நிலையில் புலிகளின் மரண அச்சுறுத்தலுக்கு உள்ளான கருணா தரப்பினர் பாதுகாப்பாகக் காட்டுப் பகுதிக்குள் முகாமிட்டமை தவறல்ல. அவர்களுக்கு இராணுவம் பாதுகாப்பு வழங்கவில்லையென்பது அவர்கள் தங்கியிருந்த பகுதிகளில் இராணுவ முகாம்களோ காவலரண்களோ இல்லையென்பதன் மூலம் உறுதியாகிறது. உண்மையில் பிரபாப் புலிகளால் தேடியழிக்கப்படும் கருணா தரப்பினருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவர்களுக்குப் படையினர் பாதுகாப்பு வழங்க வேண்டும். அதுதான் சரியானது. ஆனால் சமாதானமென்ற மாயமானை நம்பி அரசும் படையினரும் புலிகளுக்குப் பின்னால் போய்க்கொண்டிருக்கின்றனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஏனைய தமிழ்க் குழுக்களின் ஆயுதங்களைக் களையக் கோரிய புலிகளிடம், நிராயுதபாணிகளான மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களைப் புலிகள் தாக்கக் கூடாதென்ற உத்தரவாதத்தை ஏன் ரணில் அரசு புலிகளிடமிருந்து பெறத் தவறியது? புலிகளின் தாக்குதலுக்கிலக்காகும் எவரும் அரசோ, படையினரோ பாதுகாப்பு வழங்காத பட்சத்தில் தமது பாதுகாப்பைத் தாமே தேடிக்கொள்வதில் தவறில்லை. ‘சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி’ என்பது போல ஜனநாயக வழிக்குத் திரும்ப விரும்பிய கருணாவை, வலுக் கட்டாயமாகச் சீண்டியது பிரபா அணியினரே. கருணாவின் வெளியேற்றத்தோடு புலிகளின் ஆதிக்கம் வங்குரோத்தாகிவிட்டது. மீண்டும் கிழக்கைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாமென்ற நம்பிக்கையில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைச் சுட்டுத் தள்ளுவதில் புலிகள் ஈடுபட்டுள்ளனர். கடந்த ஒரு மாத காலத்துக்குள் பிரபா அணிப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. பெப்ரவரி இருபதாம் திகதி முதல் இன்று வரை ஈ.பி.ஆர்.எல்.எப்.பைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் பிரபா அணியினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனரென்று ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் மட்டக்களப்புப் பிராந்தியப் பொறுப்பாளர் இரா.துரைரத்தினம் தெரிவித்துள்ளார். சுமார் பத்துக்கு மேற்பட்ட முன்னாள் புளொட் உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொலைகளெல்லாம் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கையை விரித்தாலும், யார் அந்த இனந்தெரியதவர்களென்பதைச் சாதாரண மக்களால் கூட இனங்கண்டுகொள்ள முடியும்.

போகிற போக்கைப் பார்த்தால், ஏட்டிக்குப் போட்டியான இத் தொடர் படுகொலைகள் இப்போதைக்கு முடிவுக்கு வருமென எதிர்பார்க்க முடியாது. தற்காப்புத் தாக்குதல்களில் கருணா அணியும், கிழக்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக மாற்று இயக்கங்களை அழித்துத் தனது மேலாதிக்கத்தை நிலை நாட்டப் புலிகளும் முயன்று வருவது வெளிச்சமானது. பெப்ரவரி ஏழாம் திகதி புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் நாமல்கமவிலும் புலிகளின் மட்டக்களப்பு மகளிர்துறைப் பொறுப்பாளர் குவேனி 22ஆம் திகதி அக்கரைப்பற்றிலும் சுடப்பட்ட சம்பவங்கள் மட்டுந்தான் அரசாங்கத்தின் கண்களைக் குத்தியுள்ளன. இச் சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்காக ஜனாதிபதி விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. இரு மேல் நீதிமன்ற நீதிபதிகள் விசாரணை நடத்துகிறார்கள். படையினர் மீது குற்றம் சுமத்தும் புலிகள் இந்த விசாணைக் குழுவின் முன் தோன்றிச் சாட்சி சொல்ல வரப்போவதுமில்லை. ஆதாரங்களைச் சமர்ப்பிக்கப் போவதுமில்லை. துப்பாக்கிகளில் மட்டும் நம்பிக்கை வைத்திருக்கும் புலிகள் துப்பாக்கிக் குழல்களின் மூலமே பேசுவார்கள். ஆனால் கிழக்கு வாழ் மக்கள் யமன்களிடமிருந்து நீதியை எதிர்பார்க்க முடியாதென்பதை நன்கு அறிந்து வைத்துள்ளனர். ஏற்கெனவே வன்னியிலிருந்து அனுப்பப்பட்ட நியூட்டன் என்ற புலனாய்வுப் புலியின் கீழ் 25 பேரைக் கொண்ட புலிகள் பிஸ்டல் குழுவொன்று வன்னியிலிருந்து வந்து கிழக்கில் ‘மண்டையில் போடும்’ வேலையில் ஈடுபட்டிருக்கிறது. மார்ச் 17ஆம் திகதி மேலும் நாற்பது பேரைக் கொண்ட புலனாய்வு மற்றும் பிஸ்டல் குழுவொன்று ஓமந்தையூடாகக் கிழக்குக்கு வந்து சேர்ந்துள்ளது. எனவே ‘அந்தி வானத்துச் சிவப்புப் போல’ கிழக்கும் சிவந்த இரத்த மயமாகவே தொடர்ந்துமிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். துப்பாக்கிகளால் கிழக்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாமெனப் புலிகள் நினைத்தால் அது வெறும் பகற்கனவாகவே முடியும். கிழக்கில் கட்டுமீறிப் போகும் படுகொலைகள், கீழ்வானத்தில் புலிகளின் அஸ்தமனத்துக்கான ஓர் உதயமென அடித்துச் சொல்ல முடியும். ■

# அரசும் புலிகளும் பயணிக்கும் பொதுக் கட்டமைப்புச் சவாரி

சுனாமிப் பேரலைகள் தென்கிழக்காசியாவைத் தாக்கி மூன்று மாதங்கள் முடிந்துவிட்ட நிலையிலும் கூட அந்த அழிவுகளிலிருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பாக விவாதங்களும் திட்டங்களும் இன்னும் தொடர்கின்றன. சுனாமியின் பேரழிவுகளை ஓரிரு மாதங்களுக்குள் இயல்பு நிலைக்குத் திருப்பிவிட முடியுமென்பது முடியாத காரியம். ஆனால், மீள் கட்டுமாணப் பணிகளை இந்த இடைவெளிக்குள் ஆரம்பித்திருக்க முடியுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இந்த யதார்த்தத்தில் இருந்து பாதிக்கப்பட்ட நாடுகள் அல்லது நாடுகளின் அரசுகள் எவ்வகையான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளன என்பது கேள்விக்குரியதாகும். இலங்கையைப் பொறுத்தவரை சுனாமிப் பேரழிவில் பெரும் பாதிப்புக்குள்ளான வடக்குக் கிழக்குக் கரையோரப் பகுதிகள் மீள் கட்டுமாணத்தை நோக்கி ஒரு அங்குல முன்னேற்றத்தைக் கூடக் காணவில்லை. தெற்கைப் பொறுத்தவரை காலி, அம்பாந்தோட்டை, களுத்துறை, மாத்தறை மற்றும் இப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் குறிப்பிட்டளவு மீள் கட்டுமாணப் பணிகளை ஆரம்பித்து அவை செவ்வனே நடைபெற்றுவருவதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இதே நிலை வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளில் ஏன் முன்னெடுக்கப்படவில்லை என்பதுதான் இப்போதுள்ள பல மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வியாகும். இதற்காகக் கூறப்படும் காரணங்கள் ஏற்புடையதாகவில்லை. வெளிநாடுகளின் நிதியுதவி கிடைக்குமென்பதனாலேயோ புலிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டுவர முடியுமென்கின்ற காரணத்திற்னாலேயோ அரசியல் அரங்கில் தம் மீது எதிர்பார்ப்புகளை சதா காலமும் ஏற்படுத்த முடியுமென்பதனாலேயோதான், தற்போது அதிகாரத்தில் இருக்கும் அரசு தமது நடவடிக்கைகளைப் பிற்போடுவதாகக் கருத இடமுண்டு. வடக்கு - கிழக்குப் பகுதிகளை மீள் கட்டுமாணம் செய்வதற்குப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் சர்வதேச சமூகத்தின் ஆலோசனையை அரசாங்கமும் புலிகளும் திறந்த மனதோடு ஏற்றுக்கொண்டதாகவோ அர்ப்பணிப்போடு மக்களுக்குப் பணியாற்ற முன்வருவதாகவோ தெரியவில்லை. அரசு மீது புலிகளுக்கும் புலிகள் மீது அரசுக்கும் உள்ள சந்தேகங்களும் நம்பிக்கையீனங்களும்தான் பொதுக் கட்டமைப்பை அமைப்பதில் இழுபறி நிலையைத் தோற்றுவித்துள்ளது. பொதுக் கட்டமைப்புத் தொடர்பான ஆலோசனையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக ஐரோப்பிய சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு நிதி, புலிகளின் ஜனநாயகச் செயற்பாடு, கூடவே அதிகாரப் பங்கீடு ஆகிய இராஜதந்திர வார்த்தைப் பிரயோகங்களை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றது. இவ்விரு வகையான அணுகுமுறைகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வகையான நன்மையையும் தரப்போவதில்லை.

இந்த இடைப்பட்ட காலத்தில் புலிகளின் சார்பு அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுனாமியால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் தகரக் கொட்டைகைகளையும், கிடுகுக் கொட்டகைகளையும் அமைத்துக் கொடுத்திருக்கிறது.

> **தென்னிலங்கையில் நடைபெறுகின்ற மீள் கட்டுமாணப் பணிகளுக்கு நேரடி உதவிகளையும், ஆலோசனைகளையும் சர்வதேச நாடுகளும், தொண்டு நிறுவனங்களும் தாராளமாக வழங்கி வருகின்றன. வட - கிழக்கைப் பொறுத்தவரை இணக்கப்பாடுகளுக்கான நடைமுறை அம்சங்கள் தாராளமாக உள்ளபோதும், புலிகளின் ஜனநாயக மறுப்பு, கருத்துச் சுதந்திரம் இல்லாமை, விட்டுக்கொடுப்பு இன்மை, உண்மைத் தன்மை இல்லாமை என்பவை முரண்பாடுகளையே வளர்க்கச் செய்கின்றன.**

இவ்வேலைத்திட்டத்துக்காகப் புலம்பெயர்ந்த எம் நாட்டவர்களிடம் பெருந்தொகையான பணத்தை பாதிக்கப்பட்ட மக்களின் பெயரால் புலிகள் அறவிட்டும் வருகின்றனர். அப் பணத்திலிருந்து கணிசமான தொகையை இவ்வகையான கூடார அமைப்புகளுக்குச் செலவிட்டபோதும் புலம் பெயர்ந்த நாடுகளில் பாரிய வீடமைப்புத் திட்டங்களை அமைத்துக் கொடுப்பதாகப் பரப்புரை செய்கின்றனர். இலங்கை அரசாங்கத்தின் உதவிகள் எதுவுமின்றி தாம் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் அக்கறையுள்ளவர்கள் என்கின்ற மாயையைத் தோற்றுவித்து வருகின்றனர். மறுபக்கத்தில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களைத் தூண்டிவிடுவது மற்றொரு பணியாக உள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சமையல் பாத்திரங்களுக்காக 2,500 ரூபாயும் மாதாந்த கொடுப்பனவாக 5,000 ரூபாவும் உணவு முத்திரைக்காக 375 ரூபாவும் அரசாங்க அதிபர்களூடாக வழங்கி வருகிறது. தவிரவும் பாதிப்புகள் தொடர்பாக விவரங்களைத் திரட்டுகின்ற பணியையும் செய்து வருகிறது.





தெற்கில் புனரமைப்புப் பணிகள்

அரசும் புலிகளும் இவ்வாறு இரண்டு வகையான அணுகுமுறைகளைக் கொண்டிருப்பது இத் தரப்புகளின் சுத்த சுயநலத்தைத் தவிர, வேறு எதையும் புலப்படுத்துவதாயில்லை. ஏனெனில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாகப் புலிகளும் அரசாங்க அதிகாரிகளூடாக அரசாங்கமும் இப்போது செய்கின்ற பணியை இன்னும் விரிவாக, நிரந்தர அம்சங்களைக் கொண்டதாக தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்துவதாக மாற்றிக்கொள்வது அடுத்த கட்டத் தேவையாக உள்ளது. இந்த நிரந்தரக் கட்டமைப்புப் பணியையே பொதுக் கட்டமைப்பு என்கின்ற அர்த்தமற்ற வார்த்தைப் பிரயோகத்தினால் இழுத்தடிப்புச் செய்தும், அரசியல் இலாபங்களுக்காகத் திட்டமிட்டும், நிரந்தரமான மீள் கட்டுமாண வேலைகளைப் பிற்போட்டும் வருகின்றது. அரசும் புலிகளும் தெரிவித்து வரும் கருத்துக்களை அலசி ஆராய்கின்றபோது வெளிநாட்டு நிதியுதவிகளை தமது பலம், பலவீனத்துக்கமையப் பங்கீட்டுக்கொண்டு பகிர்ந்தளிக்கும் அதேவேளை, இப்போது வழங்கப்படுகின்ற உதவிகள், எதிர்கால அரசியலில் வாக்குகளாக மாற வேண்டும் என்ற சுத்த சுயநலமே தவிர, மக்கள் நலம் அற்றதாகும். இதற்கிடையே உதவி வழங்குவதாக உறுதி வழங்கிய வெளிநாடுகள் அனைத்தும் தமது உதவிகளை வழங்கவில்லை என்றும், வெளிநாட்டு உதவிகளை அரசாங்கம் சுருட்டிக்கொண்டுள்ளதென்றும் முரண்பாடான விமர்சனங்களும் எழத் தொடங்கியுள்ளன.

தென்னிலங்கையில் சுனாமியால் ஏற்பட்ட பேரழிவுகளை ஏக முடிவுகளோடு எவரும் பொறுப்பேற்கவில்லை. அதிகாரத்திலிருக்கும் அரசு, அதற்குள் இருக்கும் முரண்பாடுகள், எதிர்க்கட்சியில் இருக்கும் விமர்சனங்கள், ஏனைய கட்சிகளின் பிரதிவாதங்கள் என்பவை வானுயரக் கிளம்பியபோதும், மீள் கட்டுமாணம் தொடர்பில் இவர்களுக்கிடையே ஏற்பட்ட இணக்கப்பாடு, விட்டுக்கொடுப்பு என்பன பிரதானமாகின. இவை ஒன்றும் அரசியல் இலாபம் கருதிய நடவடிக்கைகள் அல்ல என்று கூறிவிட முடியாதவை. பிரதான தென்னிலங்கை அரசியல் சக்திகளான சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஏனைய சிறு சிறு கட்சிகளும், தமது அரசியல் இருப்பைக் கருத்தில் கொண்டு, இதே மக்களிடமே தமது அரசியல் வேலைத்திட்டம் உள்ளதென்பதை புரிந்துள்ளமையால், தமது சக்திக்குட்பட்ட வகையில் அரசினதும் வெளிநாடுகளினதும் உதவிகளைப் பெற்று தமக்கு வாக்களிக்கின்ற - தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுக்குப் பணியாற்றி வருகின்றன.
முரண்பாடுகளுக்குள்ளும் இணக்கப்பாடு இருப்பதை இங்கே ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இந்த யதார்த்தத்தைப் பாராட்டுகின்ற விதமாகவே தென்னிலங்கையில் நடைபெறுகின்ற மீள் கட்டுமாணப் பணிகளுக்கு நேரடி உதவிகளையும், ஆலோசனைகளையும் சர்வதேச நாடுகளும், தொண்டு நிறுவனங்களும் தாராளமாக வழங்கி வருகின்றன. வட - கிழக்கைப் பொறுத்தவரை இணக்கப்பாடுகளுக்கான நடைமுறை அம்சங்கள் தாராளமாக உள்ளபோதும், புலிகளின் ஜனநாயக மறுப்பு, கருத்துச் சுதந்திரம் இல்லாமை, வீட்டுக்கொடுப்பு இன்மை, உண்மைத் தன்மை இல்லாமை என்பவை முரண்பாடுகளையே வளர்க்கச் செய்கின்றன.

பொதுக் கட்டமைப்பு என்றாலும் நிரந்தரத் தீர்வு என்றாலும் கிடைக்கப் போகும் நன்மைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கானதாக - பாதிப்புற்ற

அலசுவது

**- மதியூகி -**

சொத்துக்களுக்கானதாக - அழிந்து போன எம் தேசியத்திற்கானதாக அமைய வேண்டும் என்று எண்ணுவார்களேயானால் இறுதித் தீர்வும் சரி, பொதுக் கட்டமைப்பும் சரி, எப்போதோ உருவாகியிருக்கும். மாறாக இயக்க நலன், அதிகார வெறி, வறட்டுப் பிடிவாதம், யதார்த்தமற்ற அணுகுமுறை, பேச்சுவார்த்தைகள் மீதுள்ள அவநம்பிக்கை, யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாத நடைமுறைகள் என்பனவே தடைபோட்டு நிற்கின்றன. மாறி வரும் உலகப் போக்கில் மாற்றங்களுக்கு உட்பட வேண்டிய அம்சங்களை மாற விடாது மறுப்பதானது, அமைதியான, சுதந்திரமான சூழலை ஏற்படுத்துவதற்கு மாறாக வன்முறைகளும் படுகொலைகளும் மலிந்து போன நிச்சயமற்ற சூழலையே உருவாக்கும். எனவே இலங்கை மக்கள் எதிர்பார்க்கும் பசுமை உலகத்துக்குள் பயணிப்பதற்குத் தடையாக இருக்கும் மேற்குறிப்பிட்ட அம்சங்களைத் தகர்க்க வேண்டியது அரசுக்கும் புலிகளுக்கும் எதிரே இருக்கும் பாரிய சவாலாகும்.

---

## அதிரடி அய்யாத்துரை



**ரெலி**கொம்காரருக்கு அதிகப்படியான வருமானம் தேடித் தாற மாவட்டம் எண்டால் அது யாழ்ப்பாணந்தானுங்கோ. ஆனால் சனத்துக்குப் போதிய ரெலிபோன் லைனுகள் கிடைக்குதில்லையாம். அப்பிளிக்கேஷன் போட்டவைக்கு அஞ்சு பச்சைத் தாள் 'பெக்கேஜ்' தான் இருக்குதெண்டு அங்க அதிகாரம் செய்யிறவர் சொல்லுறாராம். அஞ்சு லட்சம் பேர் அப்பிளிக்கேஷன் பண்ணியிருக்கினமாம். உப்பிடிப் பெரிய கேள்வியெண்டால் அதிகாரத்தில இருக்கிறவையிட்டப் பேசிச் செய்யலாமெல்லோ எண்டு கேட்டால், கூடுதல் வருமானம் வருகுதெண்டு காட்டினால் அதில போனஸ் கிடைக்குமெண்ட புரசிச்ஜராம். அதாலதான் மேல சொன்ன 'பெக்கேஜை' சிபார்சு பண்ணினராம். என்ன செய்யிறது? எப்பிடியோ போன் எடுக்க வேணுமெண்டிட்டு சனம் தலையை ஆட்டுதுகளாம், அங்க அதிகாரம் செய்யிறவர் வாரத்தில மூண்டு நாள்தான் சனத்தைச் சந்திக்கிறாராம். அமைச்சரா இருக்கிறவை மாதிரி தானும் நடக்கிறாராம். கேள்வி கூடுதல் எண்டால் சிறப்புச் சேவை செய்யுங்கோ எண்டு சனம் கேக்குதுகள்.

**ஒரு** வேலையில இருக்கிறவர் இன்னொரு வேலைக்காகப் படிக்கிறது நல்லதுதானுங்கோ. ஆனால், அது இருக்கிற வேலையை விமர்ச்சிக்கிறதா இருக்குதெண்டால் அது எப்பிடிச் சரியாகும். குடாநாட்டில கச்சேரி நடத்திற ஊழியர்கள் பிரைவேட்டா கோஸ் படிக்கிறதுக்காக வேலை நாளில மேசையில இருக்கிறதில அக்கறை காட்டினமில்லையாம். பொதுவா கவர்மெண்டோடை சம்பந்தப்பட்ட தெண்டாலே நேர வீணடிப்புத்தான் எண்டால், அதுக்கு இதுவும் ஒரு காரணமாகுமோ! கிடைச்ச வேலையை ஒழுங்காச் செய்யத் தெரியாதவை கிடைக்குமெண்டு நம்பிற வேலையை எப்படிச் செய்யப் போகினமாம். சனங் கட்டிற வரியில சம்பளம் வாங்கிறியள் எண்டதை மறந்து போடாதேங்கோ..... ப்ளீஸ்.

**யோர்** நடக்குதோ இல்லையோ எண்டு கண்காணிக்க வந்தவை இப்ப சொல்லியிருக்கிற விஷயத்தைக் கேக்கேக்க புல்லரிக்குதுங்கோ. தங்கட செயற்பாடுகளில ரெண்டெழுத்தாருக்கோ, அதிகாரத் தரப்பாருக்கோ நம்பிக்கை இல்லையெண்டால் புதிய திருத்தங்களை செய்துகொள்ள முடியுமெண்டெல்லே சொல்லியிருக்கினம். பாத்தியளோ; கண்காணிக்க வந்தவை தங்கட பொலிசினை எப்பிடிக் கரெக்ட் பண்ணினமெண்டு? உங்கட சிரைப்புப் போதும். பெட்டியைக் கட்டுங்கோ எண்டு யாரெண்டாலும் சொல்லிப்போட்டால் அது அவமானம் எண்டிட்டு, தாங்கள் எப்பிடி நடக்க வேணுமெண்டு ஒரு 'கையிட்' தாங்கோ எண்ட கணக்கா திருத்தம் செய்யலாமெண்டினம், தனக்குத் தனக்கு எண்டால் சுளகும் படக்குப் படக்கு எண்டுமாம். படுகொலை நடக்கேக்கயும், பதற்றம் நிலவேக்கயும், உந்த ஒப்பந்தத்தில திருத்தம் தேவையெண்டு மனித உரிமைவாதிகள் கேக்கேக்க, நுனி நாக்கு இங்கிலீசில மீனுக்கு வாலையும் பாம்புக்குத் தலையையும் காட்டிக்கொண்டு பேசினவை, இப்ப மாற்றம் செய்ய முடியுமெண்டு சொல்லினம்.

**கடந்த** வாரம் துரையப்பா விளையாட்டரங்கில நடந்த வைபவத்தில படைத் தரப்பினரும் பிரசன்னமாகி இருந்திச்சினம். அவைக்கு நன்றி தெரிவிக்கிறதுக்கு அரச அதிகாரி அவையின்ர மொழியிலேயே பேசினவராம். படைத் தரப்புக்கு நீண்ட வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தில ஒரு மீட்டிங்கில நன்றி தெரிவிக்கப்பட்டதால ஏகத்துக்கும் சந்தோசமாம்.

ஆனால் உது தேசத் துரோகம் எண்ட மாதிரி அதிகாரியை பெடியள் தரவளி, விமர்சிச்சவையாம் உவர் ஏன் அவையின்ர மொழியில பேசினவர் எண்டு. எங்கட பாஷையிலயே பேசியிருக்கலாமெல்லோ எண்டதுதான் பிரச்சினையாம். எங்கட விவேகத்தப் பாத்தியளோ! அப்ப கொழும்பில வந்து குடாநாட்டுக்குத் தேவையான அரச கருமங்களைப் பெற்றுக்கொண்டு போறவை தாய் மொழியிலேயோ பேசுகினம். சகோதர மொழி பேசித்தானே சனத்துக்குச் சேவகம் செய்ய முடியுது எண்டு தன்ர முதிர்ச்சியை எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் சில வில்லங்கமானதுகள் அரச அதிகாரியை தங்கட விமர்சனத்துக்கு உட்படுத்தினவையாம். 'வேறு மொழி பேசக் கூடாதெண்டால் ஏன் மொழி பெயர்ப்புக்கு எல்லாம் ஆள் வச்சுக்கொண்டு திரியினம்' எண்டு சனம் கேக்குதாம்.

**மீன்பாடும்** நகரில சுடப்பட்டவையள் ஒண்டில ரெண்டெழுத்தாருக்குப் பிடிக்காதவையா இருப்பினம், அல்லது அவையின்ர ஆக்களா இருப்பினம். இப்ப என்னடாவெண்டால் அப்பாவிச் சனத்தையும் சுடுகினம். அதிலையும் அவைக்கு சப்போட்; இவைக்கு சப்போட் எண்ட நியாயங்களையும் சொல்லினம். உப்பிடிப் பாத்தால் ஒரு தமிழனும் மிஞ்சப் போறதில்லைப் போல. மாறி மாறிச் சுட்டு எல்லாத் தமிழரும் செத்தாப் பிறகு இவ்வளவு காலமும் எந்தப் பூமியைப் பாதுகாக்கிறதுக்காக எண்டு சண்டை நடந்துதோ அதை யாருடைய கேள்வியும் இல்லாமப் பறி கொடுக்க வேண்டியதுதான். பிறகு உப்பிடி ஒரு வரலாறு நடந்தது எண்ட ஞாபகத்துக்காக வடக்குக் கிழக்கை ஆசியாவிலயே பெரிய சுடலையாப் பதிவு செய்ய வேண்டியதுதான். ஒவ்வொரு கொலைக்கும் நியாயம் தேடுறவை இருக்கும் வரைக்கும் இதுதான் இறுதி முடிவு எண்டினம், கொலைகளை வெறுக்கிறவை.

**ரெண்டெழுத்தாருக்குப்** பிடிக்காது எண்டதுக்காக அண்டை நாட்டு அதிகாரத் தரப்பை வாயில வந்தபடியெல்லாம் விமர்சிக்கிறார், அதுதானுங்கோ கூத்தமைப்பு பா.உ. பிரேமமான சந்திரனார். போன வாரம் மட்ராசில தலைமறைவு கோலமாகத் திரிஞ்சதை நண்பர் ஒருவர் கண்டிருக்கிறார். "என்னப்பா! நீர் இந்தப் பக்கமே தலை வைக்க மாட்டீர் எண்டெல்லே நினைச்சன்" எண்டு அவர் கேட்டதுக்கு "உந்த வீராப்பு எல்லாம் கடலுக்கு அந்தக் கரையிலதான். இங்கால காட்ட முடியுமோ! ரெண்டெழுத்தாருக்காக கொள்கையை மாத்தினனான்.....ஆனால் என்னையே மாத்த முடியுமோ? அவை தேடித் தேடிச் சுடேக்க அடைக்கலந் தந்த அண்டை நாட்டை மறக்க முடியுமோ?" எண்டு எதிர்க் கேள்வி கேட்டவராம். கேள்வி கேட்ட நண்பர் சொக்காகிப் போயிட்டாராம். உதுதான் பொலிற்றிக்ஸ்.

# புலிகள் முஸ்லிம்களை ஏமாற்றுகிறார்களா?

## அபூஹனீபா பேட்டி

ஜனாப் எஸ்.எச்.அபூஹனீபா தமிழர் உரிமைப் போராட்டத்தில் பங்குகொண்ட முஸ்லிம் பிரமுகர். கிழக்குத் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் நன்கு பிரபலமானவர். ஏறாவூர் வர்த்தகர் சங்கத் தலைவர். ஏறாவூர் நகர சபையின் தவிசாளராகவும் இருந்தவர். புலிகளின் பிரமுகர் பாலகுமாரின் நீண்டகால நண்பர். கிழக்கிலே தமிழ் - முஸ்லிம் சமூக நல்லுறவுக்காக முன்னின்று உழைப்பவர். அவர் சமகால நிகழ்வுகள் சம்பந்தமாகவும் சமீபத்தில் புலி முக்கியஸ்தர்கள் பாலகுமார் மற்றும் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டமை பற்றியும் கலந்துரையாடினோம்.



ஜனாப் எஸ்.எச்.அபூஹனீபா

**கேள்வி :-** தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈரோஸ் இயக்கத்தின் சார்பில் நீங்களும் பாலகுமாரும் பங்கு கொண்டவர்கள். இப்பொழுது புலி முக்கியஸ்தராகவுள்ள பாலகுமாரை நீண்ட காலத்திற்குப் பின்னர் சந்தித்துள்ளீர்கள். என்ன விடயங்கள் பற்றிப் பேசினீர்கள்?

**பதில் :-** நான் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்டதே தமிழ் - முஸ்லிம் சமூக நல்லுறவை வலுப்படுத்துவதற்காகத்தான் என்பதை முதலில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

நண்பர் பாலகுமாரை நீண்ட காலத்திற்குப் பின்னர் நேரடியாகச் சந்தித்தது இதுவே முதன்முறையென்றாலும், இதற்கு முன்னர் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு இங்கு நடக்கும் பல விடயங்களை அவரிடம் முறையிட்டுள்ளேன். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் பிரதேசவாரியாக ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்குத் தமிழ் - முஸ்லிம் முக்கியஸ்தர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழ் மக்கள் சார்பில் புலிகளே இந்தக் குழுக்களில் பிரதான இடம் வகித்தார்கள்.

அந்தக் கூட்டங்களிலே புலிகள் பல வாக்குறுதிகளைத் தந்தார்கள். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அவர்களால் செய்கை பண்ணப்படும் முஸ்லிம்களின் வயல் நிலங்களை உரியவர்களிடம் கையளித்தல், மீன்பிடிக்க, விவசாயம் செய்ய, வியாபாரம் செய்ய அனுமதித்தல், அகதிகளாக 20 வருட காலத்திற்கு மேலாக அல்லற்படும் முஸ்லிம்களை மீளக் குடியேற அனுமதித்தல் - இவை பற்றிப் பல தடவைகள் பேசியிருந்தோம். வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை.

முஸ்லிம்களின் காணிகளில் களவாகப் பயிர் செய்வதைத் தடுப்போம் என்றார்கள், தங்களால் செய்கை பண்ணப்பட்ட முஸ்லிம்களின் காணிகளுக்குக் குத்தகை தருவதாகப் புலிகள் கூறினார்கள். ஏக்கருக்கு ஆயிரம் ரூபா வீதம் தருவதாகவும் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் ஏமாற்றிவிட்டார்கள். இந்த வாக்குறுதிகளையெல்லாம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையிலேயே அளித்தார்கள்.

அடுத்தடுத்த குழுக் கூட்டங்களில் நாங்கள் இந்த விடயங்களைக் கண்காணிப்புக் குழுவின் முன்னே கொண்டுவருவோம் என்பதால் புலிகள் கூட்டங்களுக்கு வருவதையே நிறுத்திக்கொண்டனர்.

எனினும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் அதிகாரிகள் அனைவரையும் தவிர்த்து தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரையும் சந்தித்துச் சமாளிக்க முயன்றனர். இதனை முஸ்லிம் தரப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

பின்னர் வெறும் வாக்குறுதிகளோடு மட்டும் இந்தக் குழுச் சந்திப்புக்கள் இடம் பெற்றதால் காலப்போக்கில் குழுச் சந்திப்புக்கள் தடைப்பட்டுப் போயின.

நீண்ட காலத்திற்குப் பின்னர் கௌசல்யன் அவராகவே எம்மோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு, தமிழ் - முஸ்லிம் உறவைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இனிமேல் சகல செயற்பாடுகளிலும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்றார் கௌசல்யன்.

இதன்படி முஸ்லிம் பிரதிநிதிகள் கௌசல்யனோடு சென்று கதைத்தோம். ஆனாலும் அவர் தந்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அவரது கதையை நம்பி எமது வயற் பிரதேசங்களைப் பார்வையிட நாம் சென்றபொழுது, புலிகள் அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லைக்குள் எங்களை ஒரு அடி கூட அனுமதிக்கவில்லை. புலிகள் பேச்சுவார்த்தைக் குழுவிலுள்ள எங்களையே உள்ளே நுழைய அனுமதிக்கவில்லையென்றால் தமது தொழில்களுக்குச் செல்லும் சாதாரண முஸ்லிம்களை எப்படி அனுமதிக்கப் போகிறார்கள்?

குறிப்பிட்ட புலிகளின் சென்றியில் வைத்தே இந்த நிலைமை பற்றிக் கதைப்பதற்கு கௌசல்யனைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோம். ஆனால் முடியாமல் போய்விட்டது. பின்னர் பிரதேசத் தளபதியொருவர் வந்து கதைத்தார். அதுவும் பயனற்றுப் போனது. பின்னர் கௌசல்யன், "நான் வன்னிக்குப் போய் சரியான தீர்வுகளோடு வருவேன். அதன் பிறகு எல்லாப் பிரச்சினைகளையும் இலேசாகத் தீர்த்துக்கொள்ளலாம்" என்றார். ஆனால் வன்னி சென்று திரும்பும்போது அவர் கொல்லப்பட்டுவிட்டார்.

இப்படித்தான் முஸ்லிம்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் ஆண்டாண்டு காலமாக இழுபட்டுக்கொண்டே வருகின்றன. இவை பற்றித்தான் நண்பர் பாலகுமாரிடமும் தமிழ்ச்செல்வனிடமும் எடுத்துச் சொன்னோம்.

குறிப்பாக, கடந்த காலத்தில் இடம்பெற்ற பல சம்பவங்கள், தமிழ் ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பாக இருட்டடிப்புச் செய்யும் விடயங்கள், தமிழ் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், இயக்க முக்கியஸ்தர்கள் அளிக்கும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையால் மக்களிடம் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தேன்.

தாண்டியடியில் கௌசல்யனின் இறுதிக் கிரியை இடம்பெற்றபோதும், கொக்கட்டிச்சோலையில் முஸ்லிம் பிரமுகர்களைச் சந்தித்தபோதும் பாலகுமார், தமிழ்ச்செல்வன் ஆகியோரிடம் நேரடியாக இந்த விடயங்களை எடுத்துச்சொல்லும் வாய்ப்புக் கிட்டியது.

நேர்காணல் :- ஹுசைன் பின் ஹமீத்

(தொடரும்.....)


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3,500 | ரூ.1,750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,400 | ரூ.2,200 | ரூ.1,100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,100 | ரூ.1,550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1,050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றும் வண்ணம் 'Manager Thinamurasu' என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத் தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk


## எழுத்தாளர்களின் கவனத்திற்கு

**மலையகச் செய்திகள் எமக்கு அரசியல் சாயம் பூசி அனுப்பப்படுவதால் எமது தெரிவுக்குட்படுவதில்லை. எனவே சுதந்திரமாகவும், நியாயமாகவும் எவரையும் நேரடியாகக் குறிப்பிடாமலும் உண்மைச் செய்திகளை எழுதக் கூடியவர்கள் தாராளமாக எமக்கு எழுதலாம். செய்தியாகவோ / கட்டுரையாகவோ உங்கள் மன எண்ணங்களை எம்மோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

1. மலையகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முறைப்பாடுகளைச் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஏற்கெனவே கவிதை, சிறுகதை என்பவற்றுடன் முரசின் வளர்ச்சியில் ஒன்றித்திருப்பவர்களுக்கு எமது சிரம் தாழ்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**பி.கு.**

துணிந்து உண்மைச் செய்திகளை நேர்மையாக எமக்கு எழுதக் கூடிய பிராந்தியச் செய்தியாளர்களின் பங்களிப்பும் வரவேற்கப்படுகிறது. வடக்குக் கிழக்குச் செய்திகளை விடவும், மலையகச் செய்திகள் தொடர்பிலும் முரசு கூடிய கவனம் செலுத்தவுள்ளதால் ஒத்தாசை புரிந்து செயலாற்றத் துடிப்பான எழுத்தாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

நம்மால் முடிந்த சேவையை நம் சமூகத்திற்குச் செய்வோம். நமக்கு என்ன கிடைத்தது என்பதை விடவும் நாம் என்ன கிடைக்கச் செய்தோம் என்ற கேள்வியை நம்மை நோக்கி நாமே கேட்போம்.

நன்றி.

- ஆ - ர்

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....


முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்





**நல்லதே நினைப்போம்! நல்லதே செய்வோம்**
**46 வருடம் நிரூபிக்கும் மலையாள மாந்திரீகம்**

1. எனது 46 வருட அனுபவத்தைக் கொண்டு அனுதினமும் வரும் வாடிக்கையாளர்கள் என்னை நேரில் கலந்து ஆலோசனை பெற இங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.
2. வெளிநாட்டவர்களுக்கும் என்னிடம் தொலைபேசியில் கலந்து பேச வாய்ப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்து தொலைபேசிகளுக்கும் C.L.I. வசதியுள்ளது.
3. ஜாதக, ஜாதகிகள் எதிர்கால வாழ்வு, ஆய்வு கண்ணோட்டம் பற்றி நேரில் வியக்கத்தக்க முறையில் என்னால் அருள் ஞானத்தால் கூறமுடியும். நடந்தது, நடக்கப் போவது, நடக்க இருப்பது, திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, நினைப்பது எப்போது நடக்கும் என்பதற்கெல்லாம் நேரில் வந்தால் என் அருள் ஞான சித்தத்தால் தெட்டத் தெளிவான பதில் கிடைக்கும்.
4. உங்கள் தேவைகளுக்கு நேரில் மட்டும் எந்த நாட்களும் முன் அறிவித்தல் இன்றி வருகை தரலாம்.
5. ஆணித்தரமாக கைரேகை பார்த்து பலன் தரும் சேவையும் உண்டு

உலக மாந்திரீக சக்கரவர்த்தி பேராசிரியர் டாக்டர். தெய்விக ஞான குரு P.K. சாமி ஐயாவின் பிரதான அனுசரணையுடன் ஞாயிறுதோறும் சக்தி தொலைகாட்சியில் இரவு 7.00 மணிக்கு வேலன் தொடரை தொடர்ந்து பாருங்கள்

எனது P.K. Saamy Associate (Pvt) Ltd. ஒருங்கமைப்புடன் செயல்படும் நிறுவனத்தில் ஒரு அங்கமே எனது மலையான மாந்திரீக உச்சாடன பீட பிரிவு.

பேராசிரியர். டாக்டர். P.K. சாமி (J.D.G.A.N) J.P.
ஸ்ரீ துர்கா தேவி மாந்திரீக உச்சாடன பீடம்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு - 13.
தொலைபேசி இலக்கங்கள் :
(CLI) Nos. 2342463, 2342464, 2344832, 4613124, 4613133. Fax : 2344831

கடிதங்களுக்கு பதில் எழுத அவகாசம் கிடையாது. என்னிடம் மாந்திரீக பரிகாரத்தால் நன்மை பெற்ற வெளிநாட்டவர்கள், உள்நாட்டவர்கள், நற்சாட்சி கடிதங்களை அவர்களின் நலனுக்காக விளம்பரம் செய்வதில்லை.

# இன்னொருவர் பார்வையில்

**தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கடந்த பதினெட்டாம் திகதி கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்தின் பூரண வாசகம் இங்கே தமிழில் தரப்படுகிறது. இலங்கை இனப் பிரச்சினைக்கு நீதியான, நீடித்த தீர்வு காணச் சகல நாடுகளினதும் உதவியை வேண்டி இக் கடிதத்தை எழுதியதாகக் கூட்டணித் தலைவர் தெரிவித்துள்ளார். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் புலிகள் மதித்துச் செயற்படுவதில்லையென்பதை விலாவாரியாக விளக்கும் சங்கரி, அந்த இயக்கத்தை வழிக்குக் கொண்டுவருவதற்கு அழுத்தம் செலுத்துமாறும் கேட்டுள்ளார். வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் மிகக் கொடூரமான அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை ஆதாரபூர்வமாகத் துல்லியமாக அம்பலப்படுத்துகிறார் ஆனந்தசங்கரி.**

# "சமாதான விரோதிகளை வழிக்குக் கொண்டு வாருங்கள்!"

## -வெளிநாடுகளிடம் ஆனந்தசங்கரி வேண்டுகோள்!

இனப் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வொன்றினைக் காண்பதற்காக அரசாங்கத்தையும் புலிகளையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கூட்டிவரும் பொறுப்பை நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஏற்றுக்கொண்டபோது அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். ஏற்பாட்டாளராகத் தனது பங்களிப்பை ஆரம்பித்த சொல்ஹெய்ம், மத்தியஸ்தராக மாறி, இப்போது அந்த நிலையிலிருந்தும் விலகி, துயரப்படும் தமிழ் மக்கள் தொடர்பாக எவ்வித அக்கறையோ, கவனமோ இல்லாமல் புலிக்கு ஆதரவாகப் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார். அவரது பாத்திரம் இப்போது தமிழ் இலட்சியத்துக்கு மேலும் கூடுதலாக ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் நாசகாரமானதாக தென்படுகிறது.

இந்த நாட்டுக்கு இன்று சமாதானம்தான் வேண்டும். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் சமாதானத்துக்கு நாம் எந்த விலையையும் கொடுக்க முடியாது. அடிப்படை உரிமைகளையும் மனித ஜனநாயக உரிமைகளையும் புலிகளிடம் தாரைவார்த்துவிட்டுப் பெறும் சமாதானம் எமக்கு வேண்டாம். தமிழர்கள் எதை விரும்புகிறார்கள் என்றால், சுய மரியாதையுடன் தமது சகல உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் உருவாகும் சமாதானத்தையே விரும்புகிறார்கள். நாங்கள் தென்னிலங்கையில் வாழும் ஏனைய இன மக்களைப் போல் சகல உரிமைகளுடனும் வாழ்வதையே விரும்புகிறோம்.

துரதிர்ஷ்டவசமாகப் புலிகளின் அடக்குமுறையின் கீழ் அடிமைப்படுத்தப்பட்டு மௌனமாகக் கண்ணீர் வடிக்கும் தமிழ் மக்களை எவரும் கருத்திலெடுக்கவில்லை. தமிழர்களை, அவர்களின் விடுதலைப் போராளிகளெனக் கூறப்படுவோரிடமிருந்து மீட்பது அவசியமாகவுள்ளது. அவர்கள் நிரந்தர அடிமைகளாக்கப்படுவதற்கு முன் அதனைச் செய்ய வேண்டியுள்ளது. இந்த மாதிரி, தமிழர்கள் வேறு எந்த அரசாங்கத்தின் கீழும் துன்பப்படவில்லை. ஒரு கட்டத்தில் பிரதானமாகக் கல்வி, வேலை வாய்ப்பு, அபிவிருத்தி போன்றவற்றில் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இது முற்றுமுழுதாகப் பாரபட்சமாக இருந்ததென்றில்லை. ஓரளவு ஜனநாயக, மனித உரிமை மீறல்கள் இருந்தபோதும் தமிழர்கள் இவ்வுரிமைகளை அனுபவித்தார்கள். இன்று நடைபெறுபவற்றுடன் ஒப்பிடுகையில் கடந்தகால நிகழ்வுகள் மிக அற்பமானவையாகவே தெரிகின்றன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் படிப்படியாகப் புலிகளின் ஊடுருவல் மோசமடைந்தது. இதனை அரசு தனது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் அனுமதித்தமை மிகவும் தவறான வேலையாகும். புலிகள் ஏ9 பாதையில் பொருட்களுக்கு வரி விதிப்பதற்கு அனுமதித்ததும் மிகப் பெரிய தவறாகும். கடந்த காலங்களில் தமது எதிர்ப்பை ஜனநாயக வழிகளில் சுதந்திரமாக எந்த வகையிலும் காட்ட முடிந்தது. மக்களால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால்கள், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புக் கூட்டங்கள் போன்றவை யாருடைய நிர்ப்பந்தத்தின் கீழும் நடந்ததில்லை. அது வன்முறையற்றதாக அமைந்திருந்ததால், அஹிம்சை வழிப்பட்டதாக இருந்ததால் பொலிஸார் அதில் தலையிடவில்லை. எங்களுக்கெனச் சுதந்திரமான ஊடகங்கள் இருந்தன. எழுதுபவர்கள், எதிராகவோ சாதகமாகவோ தமது மனச்சாட்சிக்கேற்ப அவர்களால் எழுத முடிந்தது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராகவிருந்தபோது அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைப்பதற்கு விஜயம் செய்திருந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்போது அவருடைய கொள்கைகளைக் கண்டித்துப் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. அவருடைய விஜயத்தை எதிர்த்துப் பெரும் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் ஒரு அசம்பாவிதமும் நிகழாத வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அவரால் திறந்து வைக்க முடிந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றிய எவரும் அச்சுறுத்தப்படவில்லை. அடிப்படை உரிமைகளில் யாரும் தலையிடவுமில்லை.

இந்த வகையான சுதந்திர, ஜனநாயக உரிமைகளை நாங்கள் கடந்த காலத்தில் அனுபவித்தோம். புலிகளின் மூளைச் சலவை செய்யப்பட்ட அங்கத்தவர்கள், தமிழர்கள் சுதந்திரமாக வாழ்ந்ததையும் சிங்கள மக்களாலோ வேறு எவராலுமோ அடக்கி ஒடுக்கப்படவில்லை என்பதையும் நம்பமாட்டார்கள். அவர்களால் இதனைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது.


இன்று தமிழ்ப் பகுதிகளில் நடப்பவை பேரதிர்ச்சியை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. எமது மக்கள் சுதந்திரமாகப் பேசவோ, எழுதவோ முடியாது. புலிகளின் தலையீடியின்றி எதனையுமே செய்ய முடியாது. முறைப்படியானதாக அல்லாத சில சில்லறை அமைப்புக்கள், 'மக்கள் அமைப்புக்களின் ஒன்றியம்' என்ற பெயரில் புலிகளால் இயக்குவிக்கப்படுகின்றன. அவை புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அப்பாவிப் பாடசாலைப் பிள்ளைகள் பெருந்தொகையில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் புலிகளின் பின்னணி நிர்ப்பந்தத்தின் பேரில் பங்குபற்ற வைக்கப்படுகிறார்கள். நன்கு கல்வி கற்ற அரசியல் கட்சிகளின் தலைவர்களாலேயே, இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை விளங்கிக்கொள்ள முடியாது. அப்படியிருக்கும்போது இந்த அமைப்புக்களாலும் பாடசாலை மாணவர்களாலும் எவ்வாறு அதனை விளங்கிக் கொள்ள முடியும்? அரசாங்கத்துடன் பேசுவதானால் இடைக்கால நிர்வாக அதிகார சபையை மட்டும் புலிகள் முன் நிபந்தனையாக்குகிறார்கள்.

தமிழ் மக்கள் தற்போது புலிகளின் தயவில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில், அதாவது 1972 மே மாதத்தின் பின் தீவிர அரசியலில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் மீது அரசு குரூரத்தனமான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டதை நான் மறுக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் அப்பாவித் தமிழ் இளைஞர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் கொல்லப்பட்டனர். நீண்ட காலம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர். சித்திரவதைகளை அனுபவித்தனர். ஆனால் தடுத்து வைப்பதிலும் கொலைகளிலும் சித்திரவதைகளிலும் புலிகள் இன்று சகல சாதனைகளையும் முறியடித்துவிட்டனர். அண்மையில் வவுனியாவில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், இன்னுமொரு அமைப்பைச் சேர்ந்த இளைஞர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததை அறிந்து புலிகளின் முகாமுக்கு விசாரிக்கச் சென்றபோது அவர்களின் கழுத்தையே பிடித்து வெளியே தள்ளினர். யுத்த நிறுத்த ஒப்பந்தம், இத்தகைய நடவடிக்கைகளை அரசியல் நடவடிக்கையாக ஏற்றுக்கொள்ளவில்லை.

புலிகள் காரணமின்றி, ஈவிரக்கமற்ற முறையில் மாற்றுக் கட்சியினரைப் படுகொலை செய்ததனால், பெருந்தொகையான மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களில் வசதி படைத்தவர்கள், நாட்டை விட்டுத் தப்பியோடினார்கள். பெருந்தொகையானோர் அவர்களால் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்று வரை தெரியாது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னரும் மாற்றுக் குழுக்களைச் சேர்ந்த இளைஞர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் இராணுவப் புலனாய்வாளர்களென்றும் பழி சுமத்தப்பட்டனர். என்ன விதமான தகவல்களைப் புலிகளுக்கு எதிராக அவர்கள் கொடுத்திருக்க முடியும்? புலிகள் எவ்வளவு பேரும் எங்கு வேண்டுமானாலும் செல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் யாரும் செல்ல முடியாது. புலிகளின் இரும்புத் திரைக்குப் பின்னால் என்ன நடக்கிறதென்று யாருக்கும் தெரியாது. எந்தத் தகவலும் அங்கிருந்து கசிவதற்கு வாய்ப்பில்லை. எரிக் சொல்ஹெய்ம் போன்றவர்களுக்கு புலிகளுடன் பேசும்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சியில் அவர்கள் அமர்ந்திருந்து பேசும் இடத்தைத் தவிர, அவர் வேறு எந்தப் பகுதிக்கும் சென்று வர அனுமதி கிடையாது. எரிக் சொல்ஹெய்ம் சர்வதேச சமூகத்துக்கு இந்த இரும்புத் திரைகளுக்குப் பின் எல்லாம் சரியாக இருக்கிறதென்று தெரிவிப்பாரா? அவர் அங்குள்ள மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு உத்தரவாதமளிப்பாரா? என்னால் உறுதியாகக் கூற முடியும். அவரால் முடியாது.

21ஆம் நூற்றாண்டின் நவீன உலகில், ஐக்கிய நாடுகள் சபை இயங்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டு நீண்ட காலத்தின் பின், ஒரு சில நாடுகளைத் தவிர, சகல நாட்டு மக்களும் பூரண ஜனநாயக உரிமையுடன் வாழும் இவ்வேளையில், விடுதலையின் பெயரால் புலிகள் இங்கு தமிழ் மக்களை அடிமைகளாக்கி வைத்திருக்கும் நிலை நமது நாட்டிலே காணப்படுகிறது.

இரு பகுதியினருக்கும் இடையே யுத்த நிறுத்தம் கையெழுத்தாகி மூன்று வருடங்



"இன்று தமிழ்ப் பகுதிகளில் நடப்பவை பேரதிர்ச்சியை ஏற்படுத்துவனவாக அமைகின்றன. எமது மக்கள் சுதந்திரமாகப் பேசவோ, எழுதவோ முடியாது. புலிகளின் தலையீடியின்றி எதனையுமே செய்ய முடியாது."

களுக்குப் பின்னரும் எவ்வித மாற்றமும் இல்லை. வேடிக்கை என்னவென்றால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரச இயந்திரத்தின் செயற்பாடுகள் புலிகளின் பணிப்புரையின் பேரில் செயற்படுகின்றன. இவை முற்றுமுழுதாகப் புலிகளின் சுய தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்கின்றன. புலிகளின் பிரதேசங்களுக்கு மற்றவர்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

சில மாதங்களுக்கு முன்னர் இரண்டு படையினர், பாதை தவறிச் சென்றபோது புலிகளால் கைதுசெய்யப்பட்டு புலிகளின் நீதிமன்றத்தால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள். ஆனால் அரசின் தடுப்புக்காவலில் இருந்த புலிகளின் 10 அங்கத்தவர்களை விடுவித்தால்தான் அந்த இருவரையும் விடுவிப்பதாகப் புலிகள் பேரம் பேசினர். புலிகளால் கோரப்பட்டவர்களை அரசு விடுதலை செய்த பின்பே இருவரையும் புலிகள் விடுதலை செய்தனர். அவர்களுடைய நீதிமன்றம் இந்த 10 புலி சந்தேகநபர்களையும் விடுவித்தால்தான் இந்த இரு படையினரையும் விடுவிடுப்போம் என்று எவ்வாறு தீர்மானித்தது. அவர்களின் சட்டம் எவ்வாறு பண்டமாற்றாகச் செயற்பட்டது என்பதை எம்மால் அறிய முடியவில்லை. பெருந்தொகையான தமிழர்கள் இவ்வாறு சிறிய குற்றங்களுக்காக நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக மிக நீண்ட காலம் அநீதியான முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர்களை விடுவிப்பதற்கான சரத்துக்கள் எதுவும் எமது சட்டத்தில் இல்லை.

அவர்கள் இன்று அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மாத்திரமல்ல, இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் பரந்திருக்கின்றனர். ஒவ்வொரு தரப்பினரதும் கட்டுப்பாட்டில் உள்ளவற்றை மதித்து நடப்பதென்ற இன்னுமொரு சரத்து அங்கீகரிக்கப்பட்டது. மறுபக்கத்தில் அரசாங்கம் புலிகளிடம் எவருக்கெதிராகவும் ஆயுதம் பாவிக்கக் கூடாது என்ற உத்தரவாதத்தைப் பெற்றிருக்க வேண்டும். அரசாங்கம் அதனைப் பெறத் தவறிவிட்டது. இந்த உத்தரவாதத்தைப் பெறாததன் விளைவுதான் நூற்றுக் கணக்கான மாற்று அமைப்புகளின் அங்கத்தவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமானது. இன்று புலிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சகல இடங்களிலும் ஆதிக்கம் பெற்றிருப்பதால், புலிகளை ஆதரிக்காதவர்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. புலிகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எப்பிரதேசத்திற்கும் சென்று வர முடிந்தது. ஆனால் இன்று புலிகள் அதிகாரம் செலுத்துவதால் வடக்கு கிழக்கில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் கூடப் புலிகளை ஆதரிக்காதவர்கள் சென்று வர முடியாத நிலையே காணப்படுகிறது. புலிகள் சிறுவர்களை யுத்தத்திற்கு அணி திரட்டுவது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் கூடப் புலிகளின் இந்த நடவடிக்கையை எதிர்க்கவில்லை. சாதாரண மக்களும் பாடசாலைப் பிள்ளைகளும் புலிகளின் அச்சுறுத்தலின் கீழ் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்ற நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். புலிகளால் ஒழுங்குபடுத்தப்படும் ஆர்ப்பாட்டங்களும் ஹர்த்தால்களும் புலிகளின் அற்ப நலன்களுக்காகவும், தம்மை விளம்பரப்படுத்துவதற்காகவுமே மேற்கொள்ளப்படுகின்றன. புலிகள் படையினரை ஆத்திரமூட்டும் பல சந்தர்ப்பங்களில் அப்பாவி மக்களே பலியாகிறார்கள். ஓர் இராணுவ வாகனம் விபத்தில் சிக்கினால் சாதாரண மக்கள் இந்த இராணுவ வாகனத்தைத் தீயிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். புலிகள் இராணுவத்தை ஆத்திரமூட்டி இன வன்முறையைத் தூண்ட முயல்கிறார்கள்.

ஒவ்வொரு புலி அங்கத்தவரும் தலைவர்களாக நடந்துகொள்கிறார்கள். மக்கள் அவர்களுடைய உத்தரவுகளைக் கேள்விக்கிடமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் பயத்துடனும் பீதியுடனுமே வாழ்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக இலத்திரனியல் ஊடகங்களோ அச்சு ஊடகங்களோ புலிகளுக்கு எதிராக ஒரு வார்த்தை கூட எழுதுவதில்லை. பேசுவதில்லை. வெளிநாடுகளில் உள்ள தமிழ் ஊடகங்களும் புலிகளின் கட்டுப்பாட்டில்தான் இயங்குகின்றன.

புலிகள் சர்வாதிகாரத்தை நிலை நிறுத்த முயல்கிறார்கள். தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொள்வதில் புலிகள் அக்கறை செலுத்தவில்லை. புலிகளுக்கு எது தேவையோ அதையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வடக்கு - கிழக்கு முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகிறது. அவர்கள் அரச அதிகாரிகளுக்கு உத்தரவுகளை மேலிருந்து கீழ் வரை வழங்குகிறார்கள். அவர்கள் புலிகளின் உத்தரவுகளுக்குக் கீழ் படிந்து நடக்க வேண்டும். அமைச்சர் ஒருவரேனும் வடக்கு - கிழக்கில் அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குக் கூட விஜயம் செய்ய முடியாது. வடக்கு - கிழக்கு ஆளுநர் கூட யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யக் கூடாதென எச்சரிக்கை செய்யப்பட்டார். சகல சுனாமி நிவாரணங்களும் தம்மிடம் கையளிக்கப்பட வேண்டுமெனப் புலிகள் கேட்கின்றனர். 22 த.தே.கூ. பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஜனாதிபதியுடனோ அல்லது பிரதம மந்திரியுடனோ பேசி அவர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடக் கூட அனுமதிக்கவில்லை. இவர்களுடைய அகங்காரத்தினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்குரிய நியாயமான பங்கைப் பெற முடியவில்லை.

புலிகள் ஆர்ப்பாட்டங்களிலும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுகிறார்கள். அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் புலிகளின் கொடியை ஏற்றுவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள். பலர் விபத்துக்களில் உயிர் இழந்திருக்கிறார்கள். ஒரு இராணுவ வாகனம் ஒருவரை மோதினால் அதனை மூலதனமாக்கி மக்களை ஹர்த்தால், ஆர்ப்பாட்டங்கள் செய்யத் தூண்டிக் கற்களை எறிந்து, ஆத்திரமடையச் செய்கிறார்கள். பிள்ளைகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. அவர்கள் நினைத்ததை எந்த வழியிலும் சாதிக்க நினைக்கிறார்கள்.

சமஷ்டித் தீர்வே தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும். இந்தியாவின் மாதிரியோ அல்லது வேறு மாதிரிகளோ ஏற்புடையதாக அமையும். எங்களது அயல் நாடான இந்தியாவினாலும் சர்வதேச சமூகத்தினாலும் சகலரது அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வொன்றைக் கண்டறிய முடியுமென நான் நிச்சயமாக நம்புகிறேன். புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுதலை செய்யும் பொறுப்பு தற்போது சர்வதேச சமூகத்தின் கைகளிலேயே இருக்கிறது. ●

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

நான் சென்னை வருவதற்கு முன்னமேயே என் பாடல்களை வாங்கி கொலம்பியா ரிக்கார்டுகளில் பதிவு செய்தவர். இன்று என் புகழ்விளக்கு பிரகாசமாக எரிகிறதென்றால், அதற்கு எண்ணெய் வார்த்த புண்ணியவான்களில் அவரும் ஒருவர்.

என்று முடிவு கட்டினேன்.


விஸ்நாதன் - ராமமூர்த்தி, கே.வி.மகாதேவன் இவர்களது முக தரிசனமே கிட்டாத நிலையில், கோடம்பாக்கம் ஒரு தொலைதூரக் கனவாகவே ஆகிவிட்டது எனக்கு.

தந்தை மறைந்து போனார்; தாயோ பம்பாயில் நோய்ப்படுகையில் இருக்கிறாள். எனக்காக நானே அழுது கொள்ள

இசையமைத்திருந்த ஒரு பாடலை முழுவதும் எனக்குப் பாடிக்காண்பித்தார்.

பாட்டு வரிகள் என் செவியில் பாயப்பாய, மதுரைக்குப் பயணமாவதை ரத்துச் செய்து சென்னையிலேயே தங்கிவிடுவது என்று முடிவு கட்டினேன்.

ஆம்! ஒரு சினிமாப் பாட்டு என் திசையை மாற்றியது; என் எதிர்காலத்தை நிர்ணயித்தது. நான் தொடர்ந்து போராடுவதற்கான தெம்பையும் தெளிவையும் என்னுள் தோற்றுவித்தது. சோர்ந்து போன என் சுவாசப்பையில் பிராணவாயுவை நிரப்பி, எனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து என்னைப் புது மனிதனாக்கியது.



இருப்பினும், நாட்கள் தாம் நகர்ந்தனவேயன்றி, நான் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தேன்.

கிளப் ஹவுஸில் தங்கிக் கொண்டு இனியும் காலம் தள்ளுவது கஷ்டம் என்று ஆயிற்று.

நீண்ட இரவுகள் புரண்டு புரண்டு படுத்துத் தூக்கமின்றித் தவித்தேன். வயது ஓடிக் கொண்டிருக்கிறது; வாழ்வு வந்த பாடில்லை.

மதுரையில் T.V.S. அலுவலகத்தில் மிகப் பெரிய பதவியில் என் நண்பர் ஒருவர் இருந்தார். அவருக்கு வேலை கேட்டு ஒரு லெட்டர் எழுதினேன்.

அடுத்த வாரமே வந்து வேலையில் சேரச் சொல்லி அவர் பதில் எழுதியிருந்தார்.

மதராசுக்கு ஒரு பெரிய வணக்கத்தைப் போட்டுவிட்டு, மதுரைக்குப் போய்விடலாம்

வேண்டுமே தவிர, ஈரம் துடைப்பார் எவருமேயில்லை. இந்த லட்சணத்தில் சினிமாவை விடாமல் பிடித்துக்கொண்டு தொங்குவது, புத்திசாலித்தனமல்ல என்று புரிந்து கொண்டேன்.

கைவசம் இருந்த நீலப் பெட்டியையும், சிகப்பு ஜமுக்காளத்தையும் தூக்கிக் கொண்டு மறுநாள் மதுரைக்கு புறப்பட இருந்தேன்.

அப்போதுதான் திரு P.B.ஸ்ரீநிவாஸ் அறைக் கதவைத் தட்டினார்.

ஊரைவிட்டே நான் போவதாக இருக்கும் விஷயத்தை அவரிடம் சொல்லாமல், "சமீபத்தில் நீர் பாடின நல்ல பாட்டு ஏதாவது இருந்தா பாடிக் காட்டுங்க.." என்று சொன்னேன்.

அவர் சிறிது சிந்தித்துவிட்டு வெளியாக இருக்கும், 'சுமை தாங்கி' என்னும் படத்தில், கண்ணதாசன் எழுதி, விஸ்வநாதன் - ராமமூர்த்தி

'சுமைதாங்கி' படத்தில் பின்னாளில் இடம் பெற்று மிக மிகப் பிரபலமான அந்தப் பாடல், கண்ணதாசன் எனக்குச் செய்ம கீதோபதேசமாகவே அமைந்தது..


**'மயக்கமா? கலக்கமா?'**

எந்தத் துறையிலும் முட்டி மோதி முயற்சித்து முன்னுக்கு வரமாட்டாது, மனதொடிந்த எவரும் இந்தப் பாட்டை மந்திரம் போல் மனனம் செய்யலாம். அவ்வளவு அருமையான ஆழமான அர்த்தமான அதே நேரத்தில் மிகமிக எளிமையான பாடல் இது.

(தொடரும்.......)




**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....**




அந்நிய நாடுகளில் நாச வேலை செய்து அங்குள்ள ஆட்சிகளைக் கவிழ்க்கின்ற நோக்கம் இந்தியாவுக்கு இல்லாததால் வெளிநாடுகளில் உள்ள தம்முடைய தூதரகங்களில் தமது உளவுத்துறையினரைப் பணியிலீடுபடுத்தினாலும் பணியாற்றுகின்ற நாடுகளுக்கு எதிராக எந்தச் சதி வேலைகளிலும் அவர்கள் ஈடுபடவில்லை.

### இரண்டு நிலைகள்

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள், இரண்டு நிலைகளில் தங்களின் உளவுத்துறையை வைத்திருக்கின்றன. ஒரு நிலையில் உள்ள உளவுத்துறை தங்கள் நாடுகளில் நடைபெறும் காரியங்களை உளவு பார்க்கிறார்கள். இன்னொரு நிலையிலுள்ள உளவுத்துறையினர் வெளிநாடுகளுக்குச் சென்று உளவு பார்த்து அங்கிருந்து தகவல்களைச் சேகரித்து அனுப்புகிறார்கள். அமெரிக்காவில் உள்ள எப்.பி.ஐ., உள்நாட்டின் நிலையிலும், சி.ஐ.ஏ. வெளிநாட்டு நிலையிலும் உளவு பார்த்தலைச் செய்கின்றன. இந்தியாவில் உள்ள ஐ.பீ., வெளிநாட்டு உளவாளிகள் தமது நாட்டில் வைத்திருக்கின்ற நடமாட்டங்களைக் கண்காணிக்கிறது.

றோ (Research and Analysis Wing) என்றழைக்கப்படும் இந்தியாவின் உளவு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்கு கிடைக்கின்ற தகவல்களைச் சேகரித்து இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கின்றனர். தம்முடைய நடவடிக்கைகள் பற்றி அந்நிய அரசுகள் என்ன நினைக்கின்றன, நமக்குச் சாதகமாகவும் பாதகமாகவும் என்னென்ன காரியங்களில் ஈடுபடுகின்றன ஆகிய தகவல்களை எல்லாம் தமது அரசுக்கு இவர்கள் அனுப்பி வைக்கிறார்கள்.

வெளிநாடுகளில் சென்று தகவல் சேகரிப்பதன் முக்கிய அம்சமென்னவென்றால் பிறருக்குத் தெரியாதவாறு அல்லது பிறரின் கவனத்திற்கு வராதவாறு தகவல்களைச் சேகரிப்பதாகும். சாதாரண நடவடிக்கைகள் போலத் தோற்றமளிக்கின்றவைக்குப் பின்னேயுள்ள இரகசியங்களை நுண்ணறிவோடு ஆராய்ந்து கண்டுபிடிக்கின்ற திறமை படைத்தவர்களாக உளவாளிகள் இருப்பது அவசியம்.

இரண்டாவது உலகப் போர் ஆரம்பிப்பதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னதாகவே சுவிற்சர்லாந்தில் வாழ்ந்த பெர்த்தோல்டு ஜேக்கப் என்பவர் ஜெர்மன் விமானப் படையைப் பற்றிய துல்லியமான தகவல்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை வெளியிட்டார். அந்தப் புத்தகத்தில் விமானப் படையின் பல்வேறு பிரிவுகளுக்கும் தலைமை தாங்குபவர் யார், அவர்களுடைய தகுதி, வாழ்க்கைப் பின்னணி என்பன போன்ற விவரங்கள் அனைத்தும் அடங்கியிருந்தன.

அப்போது ஜெர்மனியில் ஆட்சி செய்து கொண்டிருந்த நாஜி அரசாங்கம் ஜேக்கப்பைக் கைது செய்து, இராணுவத் தகவல்களை வெளியிட்டதாகத் தேசத் துரோகக் குற்றஞ்சாட்டியது. ஜேக்கப் அதை மறுத்தார். ஏற்கெனவே பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றில் வெளியாகி இருந்த தகவல்களின் அடிப்படையிலேயே தன்னுடைய புத்தகம் உருவாக்கப்பட்டது என விளக்கம் அளித்தார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

# டெனிஸ் உலகின் காதல் சுவாரசியங்கள்


எந்தவொரு நாட்டிலும் விளையாட்டுத்துறை சார்ந்தகட்டும் அல்லது ஏனைய துறைகளாகட்டும், அங்குள்ள சுவையான தகவல்களை உலகின் முன்பாக வைப்பவர்கள் ஊடகவியலாளர்களும் புகைப்படக் கலைஞர்களுமேயாவர்.

இவற்றில் பல, வெறும் கிசுகிசுக்களாகி விடுவதுடன், குறிப்பாக விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரையில் இந்தக் கிசுகிசுக்களில் பெரும்பாலானவை விளையாட்டு வீரர்களிடையே ஏற்படுகின்ற வெளியுலகு அறியாத காதல் சம்பவங்களாகவே இருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் அற்றவையும் இல்லாமலில்லை என்ற போதிலும் காதலர்களாக இருக்கும் இருவருக்கிடையில் மாத்திரம் வரையறுக்கப்படுகின்ற தகவல்கள்கூட 24 மணித்தியாலங்கள் செல்லும் முன்பதாகவே ஏனைய அனைத்து விடயங்களையும்விட அதிவேகத்தில் உலகம் முழுவதும் பரவிவிடுகின்றன.

இதன் படி கடந்த வருடத்தில் சர்வதேச டெனிஸ் விளையாட்டுத் துறையில் நிகழ்ந்த சுவையான தகவல்கள் இங்கு பிரசுரமாகின்றன.

தற்போது தனது 24ஆவது வயதில் இருக்கும் பிரபல டெனிஸ் வீராங்கனையான மாட்டினா ஹின்கிஸ் சுவிற்சர்லாந்தில் உள்ள ஓர் உணவு விடுதியில் நிர்வாகியாக இருக்கும் ஒரு நபருடன் காதல் வயப்பட்டிருந்தார்.



எனினும், பின்னர் இந்தத் தொடர்பு அற்றுப் போனதால் இப்போது இவர் பலத்த மௌனம் சாதித்து வருகின்றார்.

இதனிடையே கடந்த ஒக்டோபர் மாதம் நிகழ்ந்த 'எடிடாஸ்' தயாரிப்புகளின் விளம்பர வைபவமொன்றில் கலந்துகொண்ட மாட்டினா, இங்கிலாந்து மற்றும் ஆசனல் கால்பந்தாட்ட அணியின் பாதுகாப்பு விளையாட்டு வீரரான கோல் கெம்பல் என்பவரைச் சந்தித்துள்ளார்.

கெம்பல் இதற்கு முன்பதாக விளையாடிய டொடன்ஹெமி குழுவிலுள்ள அவரது நண்பரான ரேமன் வெக்கா என்பவரது துணையுடன்தான் மாட்டினாவைச் சந்தித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அது முதற்கொண்டு 2004ஆம் வருடம் டிசம்பர் மாதத்தில் அமெரிக்காவில் இடம் பெற்ற விளையாட்டு விழாவொன்றின்போது மீண்டும் இவர்கள் இருவரும் பகிரங்கமாகச் சந்தித்துக்கொள்ளும் கால கட்டம் வரையில் இரவு விருந்துபசாரங்கள் பலவற்றில் மாட்டினாவும் கெம்பலும் கலந்துகொண்டுள்ளனர்.

முப்பது வயதுடைய கெம்பல், அவரது முன்னாள் காதலியான உள்ளக திட்டமிடல் நிபுணரான கெலி ஹோப்மன்னிடம் இருந்து பிரிந்தவராவார்.

கடந்த 2004ஆம் வருடத்தில் காதல் ஜோடி எனப் பலரால் அழைக்கப்பட்ட இருவர், அவுஸ்திரேலிய வீரர் லேடன் ஹெவிட்டியும் பெல்ஜியம் நாட்டு வீராங்கனை கிம்கிரி ஸ்டர்ஸும் ஆவர் எனினும் கடந்த வருடம் முடியும் முன்பதாக இவரகளும் எதிர்பாராத வகையில் பிரிந்துவிட்டனர்.

அது முதற்கொண்டு தனிமையில் வாழ்ந்து வந்த ஹெவிட்டி, அதே வருட இறுதியில் தனது காதல் உலகில் இன்னொருவரை இனங்கண்டு கொண்டார்.

இதன் பிரகாரம் ஹெவிட்டி, கடந்த டிசம்பர் மாதம் 25ஆம் திகதி சிட்னி துறைமுகத்தை அண்டிய ஒரு பகுதியில் இடம்பெற்ற நத்தார் தினக் கொண்டாட்டத்தின் போது ரெபேக்கா கட்ரைட் எனும் அழகியைச் சந்தித்துள்ளார்.

மிகக் குறுகிய நேர அறிமுகத்தின் பின்னர், இருவரும் கரங்களைக் கோர்த்துக்கொண்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் புகைப்படங்களுக்குக் காட்சியளித்தனர்.

இப்படி, குறுகிய நேர அவகாசத்தின்போது இவ்விருவரும் காதல் ஜோடிகளாக மாறியிருந்தாலும்கூட, ஹெவிட்டி மற்றும் கிளிஜ்ஸ்டர்ஸ் ஆகியோரது காதல் கதையும் இதே இடத்தில் வைத்துத்தான் ஆரம்பமானது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கடந்த பழைய வருடம் முடிந்து இந்த வருடம் புதிதாக ஆரம்பிக்கும்போது பிரபல அமெரிக்க டெனிஸ் வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் தாய்லாந்தில் தங்கியிருந்தார்.

புதிய வருடத்தின் ஆரம்பத்துடன் இன்னுமொரு பிரபல டெனிஸ் வீராங்கனையான மாரியா ஷரபோவாவுடன் வீனஸ், கண்காட்சி டெனிஸ் போட்டியொன்றில் கலந்துகொள்வதற்குத் தயாராக இருந்தார்.

வீனஸ் வில்லியம்ஸைப் பொறுத்தவரையில் அவர் டெனிஸ் விளையாட்டில் உலகில் எந்தப் பகுதியில் ஈடுபட்டாலும் அது ஒரு புதிய அனுபவமாகாது. இதனால், தாய்லாந்தில் வைத்து புதியதோர் அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதே அவரது நோக்கமாக இருந்தது.

இதனால் இவர் ஏனையவர்களைப் போலல்லாது, ஒரு யானை மீது சவாரி செய்து ஒரு புதிய அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதற்கு முன்பதாக இவ்வாறானதொரு அனுபவத்தை அனுபவித்திராத வீனஸ், கலிபோர்னியாவில் இவ்விதமான அனுபவத்தைத் தன்னால் ஒருபோதும் அனுபவிக்க இயலாது' எனக் கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் டெனிஸ் விளையாட்டுலகில் ராணியாகக் கருதப்பட்டு வந்த எனா கொர்னிகோவா தற்போது விளையாட்டுலகில் இருந்து ஒதுங்கி இருப்பதால் அநேகமானவரகள் இவரை மறந்திருக்கலாம்.

எனினும் அண்மையில் அவரது புகைப்படமொன்று ஒரு சஞ்சிகையில் பிரசுரமாகியிருந்தது. இதில் இவரது கைவிரலில் மோதிரம் ஒன்று காணப்பட்டதால் இவர் தொடர்பான தகவல்கள் சேகரிப்பதில் ஊடகங்கள் முழுமூச்சாக ஈடுபட்டன.

இருபத்துமூன்று வயதான எனாஸ் பானிய நாட்டு பொப்பிசைப் பாடகரான என்ரிக் க்லேஷியஸ் என்பவரைத் திருமணம் செய்துகொண்டுள்ளதாகக் கிசுகிசுக்கள் பரப்பப்பட்டன. இவர்கள் இருவரும் திருமணம் முடித்து விட்டதாக அமெரிக்க சஞ்சிகைகளில் தகவல்கள் வெளிவரத் தொடங்கிய பின்னர் அச் செய்திக்கு விரிவான பிரசாரங்கள் கிடைக்க ஆரம்பித்துவிட்டன.

. எனினும், சில தினங்கள் கழிந்த நிலையில், தாங்கள் இன்னமும் திருமணம் முடிக்கவில்லை என்றும் அவ்வாறானதொரு தீர்மானத்துக்கு தாங்கள் இதுவரை வரவில்லை என்றும் இவர்கள் ஒரு சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தனர்.

இதன்பின்னர் இவர்களைப் பற்றிய உண்மையான தகவல்களைச் சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்கள் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவை கை கூடவில்லை. இவ்விருவரும் சில மாதங்களாக பகிரங்கமாக நடமாடுவதைக்கூட தவிர்த்துக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

என்னதான் இருந்தாலும் இவ்வாறான செய்திகளைத் திரட்டுவதற்கென்றே ஊடகவியலாளர்கள் சிலர் இருப்பதால் இன்னும் சில தினங்களில் சுவாரசியமான தகவல்கள் வெளிவரலாம்.

-பாரூக்

# சங்கர மடத்துக் கிங்கரர்கள்

## 13

**அனுராதா** ரமணன் தொடர்ந்தும் பத்திரிகையாளர் குருமூர்த்தியைக் காரசாரமாகச் சாடினார். "குருமூர்த்தி கூறியது போலத்தான் நான் பேசினேன் என்பதற்கு அவரிடம் ஆதாரமெதுவும் இருக்கிறதா? அல்லது கசட் பதிவாவது வைத்திருக்கிறாரா? சமூகத்தின் பெரியவர்களென்று கற்பனைசெய்து யார் யாரையோ சாட்சிக்கு இழுக்கிறார். ஜெயேந்திரரால்தான் எனது பக்கவாத



"சீ... அதுவுமொரு பொண்ணா. அது கரக்டர் சரியில்லாத பொண்ணு. அதுதான் என்னைப்பத்தி இவ்வளவு அசிங்கமாகச் சொல்லியிருக்கு" என்று காவல்படைப் பொலிஸார் ஆரம்பத்தில் தொடர்ந்த விசாரணைகளின்போது அளித்த வாக்குமூலத்தில் ஜெயேந்திரர் கூறியிருந்தார். அனுராதா ரமணன் ஜெயேந்திரர் மீது தெரிவித்த சில்மிசக் குற்றச்சாட்டுப் பற்றி எஸ். பி. பிரேம்குமார் கேட்டபோதே ஜெயேந்திரர் இவ்வாறு கூறியிருந்தார். ஜெயேந்திரர் 38 நிமிட நேரம் அளித்த வாக்குமூலம் கசட்டில் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

நோய் குணமானதாக நான் கூறினேனென்று குருமூர்த்தி சொல்வது கடைந்தெடுத்த பொய். எனது பக்கவாத நோய் குணமாகியது எப்படியென்பது குறித்துப் பல வருடங்களுக்கு முன்பே பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

தொடர்ந்தும் குருமூர்த்தி சேட்டைகளில் ஈடுபடுவாரானால் அநாவசியமாக அவமானப்படப் போவது குருமூர்த்தியல்ல, ஜெயேந்திரர்தானென்பதை எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். ஜெயேந்திரர் சம்பந்தப்பட்ட பல்வேறு சில்மிஷங்கள் பற்றி என்னிடம் ஆதாரபூர்வமான விடயங்கள் இருக்கின்றன" என்று பொரிந்து தள்ளினார் அனுராதா ரமணன்.

கணவரை இழந்து இரண்டு பெண்பிள்ளைகளையும் பிரிந்து தன்னந்தனியாக வாழும் ஒரு தமிழ்ப் பெண், பாரம்பரியம், மரபு பற்றியெல்லாம் தம்பட்டமடிக்கும் தமிழ்ச் சமூகத்தில் படக்கூடிய அவஸ்தைகளையெல்லாம் நினைத்தபடியே 'நன்றி' என்றேன்.

அனுராதா ரமணனின் இரு பெண் பிள்ளைகளும் அமெரிக்காவில் தமது கணவன்மாரோடு வாழ்கிறார்கள். அனுராதா ரமணனின் விடயம் குறித்துப் பொலிஸார் ஜெயேந்திரரிடம் விசாரித்தபோது 'அது கரக்டர் சரியில்லாத பெண்' என்று சொன்னாராம் துறவிகள். அனுராதா ரமணனின் எச்சரிக்கைக்கெல்லாம் ஆடிப்போகக் கூடியவரல்லர் குருமூர்த்தியென்பதை அவர் ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளில் தனிப்படைப் பொலிஸார் மீது நடத்தும் வார்த்தைகளிலான தாக்குதல்கள் எடுத்துக்காட்டுகின்றன. சங்கரமட விவகாரங்களைக் கிளறிக் கிளறி விசாரணை நடத்தும் எஸ்.பி.பிரேம்குமாருக்கும் மேலதிக எஸ்.பி.சக்தி வேலுக்குமெதிராக வக்கீல் நோட்டிஸ் அனுப்பியவர் இந்தக் குருமூர்த்தி.

சங்கரராமன் கொலை தொடர்பாக ஜெயேந்திரரையும் சங்கரமடத்தையும் பாதுகாக்கும் நோக்கில் பொலிஸாருக்கும் அவர்கள் நடத்திய விசாரணைகளுக்குமெதிராக பத்திரிகைகளில் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் துளைத்தெடுத்ததால் குருமூர்த்தி மீது பொலிஸார் கோபமடைந்திருக்கலாம்.

புலன் விசாரணைகளைக் குழப்பும் நோக்கில் குருமூர்த்தி பத்திரிகைகளில் எழுதுகிறாரெனக் குற்றஞ்சாட்டுகிறது தனிப்படைப் பொலிஸ் பிரிவு. அனுராதா ரமணனைச் சீண்டியதுபோலப் பொலிஸாரையும் சீண்டிப் பார்த்ததால் இரு தடவைகள் இவர், தனிப்படைப் பொலிஸார் விசாரணை நடத்தும் காஞ்சிபுரம் காட்டு பங்களாவுக்கு மூன்று தடவைகள் அழைக்கப்பட்டு விசாரணக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

தன்னை முதல் தடவையாக விசாரணைக்கெனக் காட்டு பங்களாவுக்கு அழைத்தபோது, விசாரணை நிகழ்வுகளைத் தனது அனுமதியின்றி பொலிஸார் ஒளிப்பதிவு செய்துகொண்டனரென குருமூர்த்தி குற்றஞ்சாட்டினார். அந்த ஒளிப்பதிவு நாடாக்களைத் தன்னிடம் தர வேண்டுமென்றும் இல்லையேல் வழக்குத் தொடரப்போவதாகவும் எஸ்.பி.பிரேம்குமாரைக் குருமூர்த்தி மிரட்டியிருக்கிறார். இந்த மிரட்டலைக் கண்டுகொள்ளாதது போல் விட்டுவிட்டார் பிரேம்குமார். வக்கீல் நோட்டீஸ் அனுப்பியதோடு மௌனமாகி விட்டார் குருமூர்த்தி. எஸ்.பி.பிரேம்குமாரும் பொலிஸ் சேவையில் சேருவதற்கு முன்னர் தமிழகத் தினசரியொன்றில் மூன்று அல்லது நான்கு வருடங்கள் பணியாற்றியவரல்லவா? 'குருமூர்த்தியின் பருப்புத் தன்னிடம் அவியாது' என்ற பாணியில் பிரேம்குமார் செயற்பட்டிருக்கிறார். பிரேம்குமார் எழுப்பும் கேள்வியொன்று நியாயமானது. "விசாரணையின்போது நாம் மறைந்திருந்து ஒளிப்பதிவு செய்யவில்லை. அவரது வாக்குமூலம் நூற்றுக்கு நூறு உண்மையென்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே நாம் ஒளிப்பதிவு செய்தோம். குருமூர்த்தி வாக்குமூலமளிக்கும்போது மட்டுமல்ல, ஜெயேந்திரர், விஜயேந்திரர், சொர்ணமால்யா, சுந்தரேச ஐயர் உட்படப் பலரதும் விசாரணைகளின் போது அவர்கள் அளித்த வாக்குமூலங்களையும் நாம் பதிவு செய்து வைத்திருக்கிறோம். விசாரணை நடைபெற்றபோது ஒளிப்பதிவு செய்யக் கூடாது என்று ஏன் குருமூர்த்தி எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை" என்று பிரேம்குமார் எழுப்பும் கேள்வி நியாயமானதுதான். "செய்திகளுக்கும் கட்டுரைகளுக்கும் உருவேற்றிப் பரபரப்பாக்குவதில் சில பத்திரிகையாளர்கள் கைதேர்ந்தவர்கள்" என்றும் சொன்னார் பிரேம்குமார். ஒருவேளை அவர் தனது சொந்த அனுபவத்தைச் சொன்னாரோ தெரியவில்லை.

ஆனால் குருமூர்த்திக்கும் தனிப்படைப் பொலிஸாருக்குமிடையில் சர்ச்சை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, குருமூர்த்தி தலைமறைவாகி விட்டாரென்றும் அவரைப் பிடிக்கப் பொலிஸார் தேடுதல் நடத்துகின்றனரென்றும் பரபரப்பான தகவல்கள் காஞ்சிபுரத்தில் இறக்கை கட்டிப் பறந்தமை இங்கு குறிப்பிட்டுக் கூறக் கூடியதாகும்.

குருமூர்த்தி தன்னைப் பற்றியும் தன் எழுத்துக்கள் பற்றியும் கீழ்க் கண்டவாறு சொல்கிறார்

"நான் யாருக்கும் அஞ்சாத அடிப்படைக் கொள்கையைக் கொண்டவன். எதையுமே சட்டப்படி எதிர்கொள்வதில் பயமோ தயக்கமோ காட்டாதவன். என்னைப் பற்றியும் எனது கடந்த கால வரலாற்றையும் தெரிந்தவர்களுக்கு, இதெல்லாம் புரியும்" என்கிறார் பத்திரிகையாளர் குருமூர்த்தி. "தனக்குத் தானே நற்சாட்சிப் பத்திரம் வழங்குகிறார் குருமூர்த்தி" எனச் சாடுகிறார் எஸ்.பி.பிரேம்குமார். அத்துடன் பல்வேறு இந்து அமைப்புகளில் முக்கிய பொறுப்புகளிலிருக்கும் குருமூர்த்தி, நிச்சயமாக சங்கரமடத்தையும் சங்கராச்சாரியார்களையும் பாதுகாத்து எழுதத்தானே வேண்டுமெனவும் கூறுகிறார் பிரேம்குமார்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையில் சங்கரராமன் கொலை விசாரணை தொடர்பாக இவர் எழுதிய கட்டுரைகள் பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியிருந்தன. எதையும் வித்தியாசமான கோணத்தில் பார்ப்பவன் தானென்று கூறிக்கொள்ளும் குருமூர்த்தி, ஜெயேந்திரர் கைதைக் கண்டித்து எழுதியவைகள் உண்மையில் விசாரணைகளைத் திசைதிருப்பும் நோக்கிலமைந்தவையென்று பொலிஸார் கூறுவதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

சங்கரராமன் கொலை குறித்துப் பல கோணங்களில் விசாரணை செய்ய வேண்டுமென்பதே குருமூர்த்தியின் வாதமாகும். 'தனது உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் அதற்குச் சங்கரமடம்தான் பொறுப்பென்று சங்கரராமன் கடிதம் எழுதி வைத்தாரென்று பொலிஸ் சொல்கிறது. முன்கூட்டியே தனது எதிரிகளெனச் சங்கரராமனால் சுட்டிக்காட்டப்பட்ட சங்கரமடமோ அல்லது சங்கராச்சாரியார்களோ அவரைக் கொல்லுமளவுக்கு முட்டாள்களாக இருக்க மாட்டார்களென்பது குருமூர்த்தி அடித்துச் சொல்லும் வாதமாகும். இதனைத் தர்க்க ரீதியான வாதமென்று குறிப்பிட்ட குருமூர்த்தி, "சங்கரராமனுக்கும் காஞ்சிமடத்துக்கும் இடையில் வெளிப்படையான பகை இருப்பதை அறிந்துகொண்ட வேறு யாராவதுகூட அந்தக் கொலையைச் செய்துவிட்டுச் சுலபமாகத் தப்பிச் செல்ல நினைத்திருக்கலாம் அல்லவா?" என்றும் எழுதியிருந்தார். இந்தக் கோணத்தில் ஏன் பொலிஸ் விசாரணை நடத்தவில்லையென்றும் அவர் கேள்வியெழுப்பி இருந்தார்.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த சங்கரமடத்து எதிராளியொருவர் குருமூர்த்தியினால் தர்க்கரீதியான அபிப்பிராயமெனச் சொல்லப்படும் இதனை



தற்போதைய காஞ்சிப் பெரியவர் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளுக்கு முன்னர் காஞ்சிமடத்தின் சங்கராச்சாரியாராகத் திகழ்ந்தவர் ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள். 1894ஆம் ஆண்டு மே மாதம் இருபதாம் திகதி, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் நகரத்தில், நவாப் தோப்புக்கு அருகிலுள்ள அக்ரகாரத்தில் பிறந்தார். சுப்பிரமணிய சாஸ்திரிகள் - மகாலட்சமி தம்பதியருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவருக்கு வைக்கப்பட்ட இயற்பெயர் சுவாமிநாதன் என்பதாகும். பாடசாலை நாட்களில் பைபிளைக் கற்றவர். பன்னிரண்டு வயதில் நான்காம் வகுப்புப் படிக்கும்போது ஷேக்ஸ்பியர் எழுதிய 'கிங் ஜோன்' என்ற நாடகத்தில் இளவரசர் ஆர்தராக நடித்தார். தனது பதின்மூன்றாவது வயதில் காஞ்சிமடத்தின் பீடாதிபதியானார். 1907ஆம் ஆண்டு மாசி மாதம் இரண்டாம் திகதி பீடாதிபதியானார். ஆதிசங்கரரைப் போல் தண்டம், கமண்டலம், காசாயம், முண்டளம் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு சன்னியாசியானார். ஆங்கிலம், பிரஞ்சு ஆகியவற்றிலும் பாண்டித்தியம் பெற்ற இவர், சங்கீத ஞானமும் கைவரப்பெற்றவராவார். 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி மகாபெரியவர் சமாதியடைந்தார்.

முட்டாள்த்தனமான வாதமென்று சாடினார். அவர் கேட்கிறார்" "எனது படுக்கையறை வாசலில் இரு கதவுகள் இருக்கின்றன. அதாவது நடுவில் பூட்டக்கூடிய பாதி, பாதியாகச் செய்யப்பட்ட இரு கதவுகள். இரண்டு கதவுகளையும் ஒன்று சேர்த்துத்தான் அறையை மூட முடியும். குருமூர்த்தி சொல்வது போல வாதிடுவதென்றால், இரண்டு கதவுகளில் ஒன்றைத் திறக்கும்போது மற்றது மூடியிருக்கும். அப்படியானால் இரண்டு கதவுகளையும் திறக்கும்போது, இரு கதவுகளும் மூடியிருக்குமென்று வாதிட முடியுமல்லவா? இதனைத்தான் அழகு தமிழில் 'விதண்டாவாதமெனக் குறிப்பிடுகின்றனர்" எனக் கூறினார் அந்த நாஸ்திகர். நியாயமான விமர்சனம்தான்.

"கொலை வழக்கைப் புலனாய்வு செய்யும் பொலிஸார், திறந்த கண்ணோட்டத்துடன் பல்வேறு கோணங்களில் பிரச்சினைகளை அணுக வேண்டும். முக்கியமான கிறிமினல் குற்ற விசாரணைகளில் பொலிஸார் இதனைக் கடைப்பிடிக்க வேண்டும்" என்கிறார் குருமூர்த்தி. காஞ்சிபுரம் பொலிஸார் சங்கரராமன் கொலை வழக்கை ஒரே கோணத்தில் கொண்டுசென்று, தாங்கள் நடத்திய விசாரணைதான் சரியென்று நிரூபிக்க முனைகின்றனர். ஓர் எழுத்தாளனாக, சமூகத்தில் அக்கறையுள்ள ஒரு பிரஜையாக இந்தக் கருத்தை வெளியிடுவதற்கு எனக்குப் பூரண சுதந்திரமுண்டு என்றும் கூறுகிறார் குருமூர்த்தி. இக் கருத்துக்களனைத்தையும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் விலாவாரியாக விளக்கியுள்ளார் குருமூர்த்தி;

முதல் தடவையாகக் காஞ்சிபுரம் காட்டு பங்களாவுக்குத் தான் சென்றபோது தனக்கும் விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரிகளுக்குமிடையில் கடும் வாக்குவாதம் நிகழ்ந்ததென்று கூறிய குருமூர்த்தியிடம், "யார் அந்த அதிகாரிகள்" என்று கேட்டபோது "இப்போதைக்கு அது தேவையில்லாத விடயம்" எனப் பதிலளித்தார். குருமூர்த்தி தன்னை விசாரித்த பொலிஸ் அதிகாரிகளின் பெயரைச் சொல்ல விரும்பாவிட்டாலும் நிச்சயமாகப் பிரேம்குமாரும் சக்திவேலும் வேறு சில அதிகாரிகளும்தான் அவரை விசாரணைக்கு உட்படுத்தியிருப்பார்களென்பது சொல்ல வேண்டிய விடயமல்ல.


**காஞ்சிபுரத்திலிருந்து**
**அருண் கண்ணன்**



தான் சங்கரராமன் கொலை தொடர்பாகவும் சங்கரமடம் தொடர்பாகவும் பத்திரிகைகளில் எழுதிய விடயங்களைப் பற்றியே பொலிஸ் அதிகாரிகள் திரும்பத் திரும்ப விசாரித்தார்கள் என்கிறார் குருமூர்த்தி. கொலையுண்டவர் பற்றியோ கொலையாளிகள் பற்றியோ தனக்கு எதுவும் தெரியாதென்பது பொலிஸாருக்கு நன்கு தெரியுமென்பதால் அதுபற்றி எதுவும் விசாரிக்கவில்லையென்றும் கூறினார் குருமூர்த்தி. அதனால் இவை பற்றி எந்தக் கேள்வியும் என்னிடம் கேட்டகவில்லை என்றும் சொன்னார் குருமூர்த்தி.

(தொடரும்.....)



பாட்டினிலே சொல்லுவதும் அவள் சொல் லாகும்;
பயனன்றி உரைப்பானோ? பாராய் நெஞ்சே!
கேட்டது நீ பெற்றிடுவாய், ஐயமில்லை;
கேடில்லை, தெய்வமுண்டு, வெற்றியுண்டு.

– சுப்பிரமணிய பாரதியார்



# கத்தரிக்கோலும் குதிரையும்

பாப்பா முரசு சிறுகதை

தோப்பூரில் காசிராம், பலராம் என்ற இரண்டு தையற்காரர்கள் வசித்து வந்தார்கள்.

இருவரும் ஊர்மக்கள் எல்லாம் விரும்பும் வண்ணம் நவீன ஆடைகளைத் தைத்துக் கொடுத்து வந்தனர்.

காசிராம் ஊருக்குள்ளேயே தையல் கடைய்யை வைத்திருந்தார். பலராம் ஊருக்கு வெளியே நகர்ப் புறத்தில் தன் கடையை வைத்திருந்தார்.

ஒரு நாள் காசிராம், பலராமின் கடைக்கு வந்தார். தன் கடைக்கு வந்த நண்பரை இன்முகத்துடன் வரவேற்றார் பலராம்.

"நண்பரே! வேலையெல்லாம் எப்படி நடக் கின்றது?" என்று அக்கறையோடு விசாரித்தார் காசிராம்.

"ஓஹோ என்றில்லாமல் ஓரளவுக்கு ஓடிக்கொண்டி ருக்கிறது! ஓடுவது வரை ஓடட்டுமே!" என்று அடக்கமாக பதில் கூறினார் பலராம். அப்போது பலராம் துணிகளைக் கத்தரிக்கும் கத்தரிக்கோல் ஒன்றினைக் கையில் வைத்திருந்தார்.

அந்தக் கத்தரிக்கோல் பார்ப்போர்கள் கண்களை கவரும் விதத்தில் கவர்ச்சியாக இருந்தது. அந்தக் கத்தரிக்கோலை தான் எப்படியாவது வாங்கிவிட வேண்டும் என்று விரும்பினார் காசிராம்.

உடனே பலராமைப் பார்த்தார். "நண்பரே! உமது கையில் இருக்கின்ற கத்தரிக்கோல் மிகவும் நன்றாக இருக்கின்றதே! அதனை எனக்கு மூன்று நாட்கள் இரவலாகக் கொடுத்தீர்கள் என்றால் உதவியாக இருக்கும்! கத்தரிக்க வேண்டிய துணிகள் கடையில் ஏராளமாக இருக்கின்றன. இப்போதுள்ள சூழ்நிலையில் என்னால் புதுக் கத்தரிக்கோலை வாங்க முடியாது. நான் மூன்று நாட்களுக்குள் புதுக் கத்தரிக்கோலை வாங்கி விடுவேன். பின்னர் இரவலாக வாங்கிய கத்தரிக்கோலைக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

காசிராம் கத்திரிக்கோலை இரவலாகக் கேட்டதும் சிறிது நேரம் யோசனை செய்தார் பலராம்.


'நம் நண்பர் கேட்கின்றார். அவருக்கு நாம் இல்லையென்று சொல்ல முடியாது. நாம் கொடுக்கா விட்டால் அவர் மனமானது வேதனையடையும். எனவே அவருக்கு நாம் கத்தரிக்கோலைக் கொடுத்துவிட வேண்டியதுதான்' என்று முடிவு செய்தார்.

"நண்பரே! உம்மைத் தவிர வேறு யார் வந்து கேட்டாலும் நான் இந்தக் கத்தரிக்கோலை இரவலாகக் கொடுக்கமாட்டேன். உமக்கு மட்டும் தருகிறேன். நீர் நான்கைந்து நாட்கள் பொறுத்துக்கூட என்னிடம் திருப்பிக் கொடுத்தால் போதும்" என்றார் பலராம்.

காசிராம் மகிழ்ச்சியோடு அந்தக் கத்தரிக்கோலை வாங்கிக்கொண்டார். பின்னர் அங்கிருந்து விடைபெற்றுச் சென்றார். நாட்கள் ஒன்றன்பின் ஒன்றாக சென்று கொண்டிருந்தன.

பத்து நாட்களுக்கு மேல் ஆகியும் கூட காசிராம் பலராமின் கத்தரிக்கோலை திரும்பக் கொடுக்க வில்லை.

காசிராம் எப்போது தன் கடைக்கு வருவார் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.



பத்து நாட்களுக்கு மேலாகியும் அவர் வராமல் இருக்கவே, தானே சென்று பார்த்து வருவது என முடிவு செய்தார்.

உடனே தன் கடை வேலையாட்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வேகமாக காசிராமின் கடைக்கு வந்தார்.

அவரோ அந்த நேரத்தில் கடையைவிட்டு அவசரமாக எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தார்.

பலராமைக் கண்டதும் பார்த்தும் பார்க்காதது போல் நின்றுகொண்டார்.

இதனைக் கண்டதும் பலராம் ஆத்திரமடைந்தார். "நண்பரே! நீர் என்னிடம் இரவலாக வாங்கிய கத்தரிக்கோலை திருப்பிக் கொடுக்கவில்லையே! வேலை முடிந்ததும் கொடுத்து விடுவதாகக் கூறினீரே! இப்போது தான் உமக்கு வேலை முடிந்து பத்து நாட்களுக்கு மேல் ஆகிறதே! அந்தக் கத்தரிக்கோலை உடனே எனக்குத் திருப்பிக் கொடுத்து விடும்" என்றார்.

"நண்பரே! பெரிய கொடுமை ஒன்று நடந்து விட்டது. அதனை நான் உம்மிடம் எப்படிச் சொல்வது என்றுதான் தெரியவில்லை! எதற்கும் நீர் மனதைத் திடப்படுத்திக் கொள்ளும்! நான் சொல்வதைக் கேட்டு நீர் அதிர்ச்சியடையப் போகிறீர்" என்றார் காசிராம்.

"கத்தரிக்கோலைக் கேட்டால் நீர் ஏதேதோ கூறுகின்றீரே!" என்று வியப்போடு கேட்டார் பலராம்.

உடனே காசிராம், "நண்பரே! எல்லாம் கத்தரிக் கோலைப் பற்றிய செய்திதான். நீர் கொடுத்த கத்தரிக்கோல் நன்றாகக் கடிக்கிறதா என்பதை காதை பிடித்து சோதனை செய்து பார்த்தேன். அதன் பற்களை நான் பிடுங்கியபோது இறந்து விட்டது.

உன்னிடம் கேட்காமல் அதனை அடக்கம் பண்ணியது என்னுடைய தவறுதான். மன்னித்துக் கொள்" என்றார்.

பலராம் சூழ்ச்சிக்கார காசிராமின் தந்திரத்தை அறிந்து கொண்டார்.

நம்மிடம் உள்ள கத்தரிக்கோலை அபகரித்துக் கொள்ளவே இந்தக் காசிராம் நம்மை முட்டாளாக்குகிறார். இவருக்கு நாம் கண்டிப்பாகப் பதிலடி கொடுக்க வேண்டும்!' என்று முடிவு செய்தார். உடனே காசிராமைப் பார்த்தார்.

"நண்பரே! கத்தரிக்கோல் இறந்துவிட்டால் என்ன செய்ய முடியும்? அதன் ஆயுள் அவ்வளவுதான். நல்ல வேளையாக நீ அதனை அடக்கம் செய்து விட்டாயே அது போதும்! நான் வருகிறேன்" என்று கூறியபடி தன் கடைக்குத் திரும்பினார் பலராம்.

ஒரு சில நாட்களுக்குப் பின்னர் காசிராம் புதிதாக குதிரை ஒன்று வாங்கியிருப்பதை அறிந்தார் பலராம். உடனே அவர் மனதில் ஓர் எண்ணம் தோன்றியது.

வேகமாக காசிராமைப் பார்க்க வந்தார். "நண்பரே! நீர் எனக்கொரு உதவி செய்ய வேண்டும். அதன் பொருட்டே உம்மைத் தேடி வந்துள்ளேன்' என்றார்.

"அப்படியா? என்ன உதவி?" என்று கேட்டார். காசிராம்.

"நண்பரே! நான் நீண்ட தூர யாத்திரை செல்ல வேண்டும் என்று திட்டமிட்டுள்ளேன். நான் தனியாகச் செல்வதால் உனது குதிரையைக் கொடுத்தால் சற்று உதவியாக இருக்கும். நீ எனக்கு சும்மா கொடுக்க வேண்டாம். நான் யாத்திரை சென்று திரும்பி வர குறைந்தபட்சம் பத்து நாட்களாகும். அந்தப் பத்து நாட்களுக்கு, வாடகையாக நான் உனக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன். நீ இப்போது என்னோடு குதிரையை அனுப்பி வைத்தால் பத்து நாட்களுக்கு பின்னர் உன் குதிரையையும்

ஆயிரம் ரூபாயையும் உன்னிடம் ஒப்படைத்து விடுகிறேன்" என்றார் பலராம்.

'பத்து நாட்களுக்கு ஆயிரம் ரூபாயா?' என்று வாயைப் பிளந்தார் காசிராம்.

'வீட்டில் குதிரையை சும்மாதானே கட்டி வைத்திருப்போம்! இவரோடு குதிரையை அனுப்பினால் ஆயிரம் ரூபாய் கிடைக்கும். அதோடு பத்து நாட்களுக்கு குதிரைக்குக் கொடுக்க வேண்டிய உணவுச் செலவும் மிச்சமாகும்!' என்று மனதுள் நினைத்தார்.

உடனே தன் வீட்டிற்குச் சென்று குதிரையோடு திரும்பி வந்தார். குதிரையை பலராமிடம் ஒப்படைத்தார்.

பலராமும் அவரிடம் இருந்து விடைபெற்றபடி குதிரையை ஓட்டிச் சென்றார்.

குதிரையை வெளியூரில் இருக்கும் தன் நண்பர் ஒருவரின் பாதுகாப்பில் விட்டபடி தன் தையல் கடை வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார் பலராம்.

பலராம் யாத்திரைக்குச் செல்லாமல் கடையில்தான் வேலை செய்து கொண்டிருக்கின்றார் என்ற செய்தியை நண்பர் மூலமாக அறிந்தார் காசிராம்.

திடுக்கிட்டபடி பலராமைப் பார்க்க ஓடோடி வந்தார். "நண்பரே! நீர் யாத்திரைக்குச் செல்ல வில்லையா? என் குதிரை எங்கே?" என்று ஆத்திரத தோடு கேட்டார் காசிராம்.

"நண்பரே! உம் மனதைத் திடப்படுத்திக் கொள்ளும்! அந்தச் செய்தியை நான் உமக்கு எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை!" என்று கவலையுடன் கூறினார் பலராம்.

அதனைக் கேட்டதும் காசிராம் திடுக்கிட்டார். "என்ன நடந்தது? சீக்கிரமாகச் சொல்லுங்கள்!" என்று அவசரமாகக் கேட்டார்.

"நண்பரே அவசரப்படாதீர்கள் உங்களைப்போல் நானும் அவசரப்பட்டுத்தான் குதிரையைக் கொன்றுவிட்டேன்" என்றார் பலராம்.

"என்ன குதிரையைக் கொன்றுவிட்டாயா?" என்று அதிர்ச்சியுடன் கேட்டார் காசிராம்.

"ஆமாம்! நண்பரே! நன்றாகக் கடிக்கின்ற குதிரை மிகவும் வெகமாக ஓடும் என்று சொன்னாள் என் மனைவி. நான் குதிரையின் பல்லைப் பிடுங்க முடிவு செய்தேன். அவசரத்தில் பல்லைப் பிடுங்குவதற்குப் பதிலாக அதன் கொம்பைப் பிடுங்கி விட்டேன். அது உடனே இறந்துவிட்டது. இறந்த குதிரையை நானும் அடக்கம் செய்துவிட்டேன். இந்தச் செய்தியை நானே உம்மிடம் தெரிவிக்கலாம் என்று நினைத்திருந்தேன். அதற்குள் நீரே வந்துவிட்டீர்!" என்றார்.

இதனைக் கேட்ட கரிசிராம் ஆவேசமடைந்தார். "நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்? மரியாதையாக என் குதிரையைக் கொடுத்து விடு! குதிரைக்குக் கொம்பு இருக்கிறது என்று சொன்னால் எந்த முட்டாளும் நம்ப மாட்டான். நீ என் குதிரையை எங்கோ மறைத்து வைத்திருக்கின்றாய்! மரியாதையாக என் குதிரையை என்னிடம் ஒப்படைத்து விடு; இல்லையேல் நான் ஊர்த் தலைவரிடம் முறையிடுவேன்" என்றார்.

"நண்பரே! கத்தரிக்கோலுக்கு பல் இருக்கும் போது குதிரைக்குக் கொம்பு இருக்காதா என்ன? பல்லைப் பிடுங்கும் நேரம் கத்தரிக்கோலே இறக்கும் போது, கொம்பைப் பிடுங்கும் நேரம் குதிரை யும் ஏன் இறக்காது? எனக்கும் ஊர்த்தலைவரிடம் செல்லத் தெரியும்! அவரிடமே நாம் நியாயத்தைக் கேட்கலாம்" என்றார் பலராம்.

'இவரை நாம் முட்டாளாக்க நினைத்தோம். இவர் நம்மை முட்டாளாக்கி விட்டார். இவர் நம்மை ஊர் தலைவரிடம் இழுத்துச் சென்று விட்டால் பிரச்சினை பெரிதாகி விடும். நம் தவறு எல்லோர்க்கும் தெரிந்து தண்டமாக அபராதம் செலுத்தும் நிலை ஏற்பட்டுவிடும்!' என்று பயந்தார் காசிராம்.

உடனே தான் மறைத்து வைத்திருந்த கத்தரிக்கோலை எடுத்து பலராமிடம் ஒப்படைத்துவிட்டார்.

பலராமும் தான் மறைத்து வைத்திருந்த குதிரையை, காசிராமிடம் ஒப்படைத்து விட்டார்.

# ஆத்திசூடி

## இலவம் பஞ்சில் துயில்!

நீ உடல் வெப்பத்தைத் தணிக்கக் கூடிய இலவம் பஞ்சில் தயாரித்த மெத்தையில் நித்திரை செய்!

-ஔவையார்

நிரஞ்சலா, கண்டி.


# உங்கள் பொது அறிவு எப்படி?

1. விண்வெளியில் மிக நீண்ட நாட்கள் மிதந்தவர் யார்?
   பஜ் - ஆஸ்பிரிஸ்.
2. ரஷ்யா முதலில் விண்வெளிக்கு அனுப்பிய பயணி எது? எத்தனையாம் ஆண்டு?
   லைகா என்ற நாய், 1937.
3. ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பிய முதல் செய்மதி எது?
   எக்ஸ்புளோரோ.
4. நவீன விண்வெளியுகத்தின் தந்தை யார்?
   கியோல் கோல்ஸ்க்லி.
5. 'லேங்கர்' வால் வெள்ளியைக் கண்டுபிடித்தவர் யார்?
   எட்பண்ட்றோல்.
6. உலகில் முதல் முதல் உயிர் நீத்த விண்வெளி வீரர்?
   விளாடிமிர் கொமபோன
7. விண்வெளியின் முதல் செய்மதிப் பத்திரிகை எது?
   டசிங்போ.
8. மிதக்கும் விண்வெளிக் கூடத்தின் பெயர் என்ன?
   சல்யூட் ஆய்வு கூடம்.
9. உலக விண்வெளி தினம் எப்போது?
   1961 - ஏப்ரல் 12.
10. விண்வெளிக்கு முதல் முதல் பயணம் செய்த பெண்மணி யார்?
   வலன்ரீனா ரெறஸ்கோவா.

# அதிசய உலகம்

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் 9 கோடியே 30 லட்சம் மைல். சூரியனிலிருந்து பூமிக்கு ஒளிவந்து சேர ஆகும். நேரம் 8 நிமிடம், சூரியனிலிருந்து 747 ரக ஜெட் விமானம் புறப்பட்டால் பூமிக்கு வந்துசேர எவ்வளவு நேரம் ஆகும்?

17 வருடங்கள்!



# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **06.04.2005.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **590**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 588


பரிசுக்குரியவர்:
**செல்வி. ஏ.ஜே. பாத்திமா பஸ்னா,**
**173/5B, கந்தவத்த, மல்வானை.**


பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இ.இந்துஜா, கண்டிவீதி, நகராட்சி மன்ற வீதி, காந்திநகர், திருகோணமலை. | வை. மதுஷாலினி, சித்ரா ஒழுங்கை, கொழும்பு 05. |
| யோசராசா கலாரஞ்சினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. | ஏ.சீ. லாபீர், ஆசரிகம கம்பிரிகஸ்சாவ, அனுராதபுரம். |
| ரா. திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. | எம்.ஐ. மொஹமட் அஸ்லம், அலிகார் தேசிய பாடசாலை, ஏறாவூர். |
| கமிலஸ் கிரித்திகன், தரம் 1, விபுலானந்தக் கல்லூரி, பண்டாரிகுளம், வவுனியா. | ஸ்ரீ.தி. ஸ்ருதி, லோவர் வீதி, பதுளை. |
| எல்.பி. கீர்த்தனா, தரம் 3, கொ/நல்லாயன் அரசினர் தமிழ் வித்தியாலயம், கொழும்பு. | மு. ரேணுகா, செம்புகவத்தை, எல்கடுவ, மாத்தளை. |

## தகவல் பெட்டி

## நாய் அழகி




எமது உலக அழகிகளைப் போல முடி மற்றும் தோல் பராமரிப்புகளைக் கொண்ட நாய்களுக்கும் விருதுகள் வழங்கும் நிகழ்வொன்று அண்மையில் நியூயோர்க்கில் நடைபெற்றது. அண்மையில் 129ஆவது தடவையாக நடைபெற்ற வெஸ் மினிஸ்டர் பிராணிகளின் கண்காட்சியின்போது எடுத்த படங்களே இவை.

புலியின் வரிகளுடன், சிங்கத்தின் முகத்துடன் காணப்படும் இந்த அதிசய மிருகம் அரிதான இனத்தைச் சேர்ந்தது. அரை தொன் நிறையும் 10 அடி நீளமும் கொண்ட இந்த அதிசய மிருகம் நாள் ஒன்றுக்கு 20 இறாத்தல் இறைச்சியை உணவாக எடுத்துக்கொள்கிறது. படத்தில் இருக்கும் பெண்மணி சிரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தால் நாள் ஒன்றுக்கு 20 இறாத்தல் என்ன அதற்கு மேலும் வழங்கத் தயாராக உள்ளோர் என்று குறிப்பால் உணர்த்துகிறாரோ?

## என்ன?



## மணவாழ்வின் வசந்தம்



திருவாளர் எனேகோஷும் திருமதி மியுகியும் ஈருடல் ஓருயிராய் வாழும் தம்பதியினர். இவர்கள் தமது குடும்ப வாழ்வில் மேலும் குதூகலம் பெற விரும்பினர். அதற்காக இருவர் ஓட்டிச் செல்லக்கூடிய டென்டம் துவிச்சக்கர வண்டியில் உலகம் சுற்றி 1,20,000 கிலோ மீற்றர்கள் சென்று 'அதிசயத்தை அனுபவித்த உலகின் முதல் தம்பதியினர்' என்ற பெருமையைத் தமக்குரியதாக்கிக்கொள்ள ஓடுகிறார்கள்... ஓடுகிறார்கள்..... உலகின் எல்லைக்கே ஓடுகிறார்கள்....





## சறுக்குத் திருமணம்

பனிச்சறுக்கு விளையாட்டில் பிரபலமான ஒரு ஜோடி பனியில் சறுக்கிக்கொண்டே தமது திருமணத்தையும் செய்துகொள்ள ஆசைப்பட்டது. "உயரத்தில் கடவுளுக்கு அண்மையில் இருந்துகொண்டு எமது திருமணத்தை நிகழ்த்தவே நாம் விரும்பினோம்" என்று மனமகன் தமது தீர்மானத்திற்கு விளக்கம் கூறினார். இவர்கள் அமெரிக்காவின் கொலராடோ வாசிகளாவர்.


ரஜினி - பிரபு
சந்திரமுகி


அஸின்

# சினி விசிட்

## ஜெய் ஆகாஷ்!

'குருதேவா' படப்பிடிப்பின்போது ஒரு காட்சியில்....ஐந்தாறு டேக் வரை போனதாம். கடைசியில் ஓ.கே.யானதும் ரெஸ்ட் எடுக்கப் போனார் ஹீரோ ஜெய் ஆகாஷ். மானிட்டரில் அந்தக் காட்சியைப் பார்த்த டைரக்டர் ப்ரணதி, "இன்னும் சரியா பண்ணலையே" எனச் சொல்லி "கூப்பிட்டு வா ஹீரோவை" என்றாராம். அசந்து போய் உட்கார்ந்திருக்க ஹீரோவை அஸிஸ்டெண்ட் டைரக்டர் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்ல...கடுப்பான ஹீரோ பளீரென ஒரு விடு விட்டாராம் அஸிஸ்டெண்ட் கன்னத்தில்.


விஜய் - பிபாஷாபாசு
சச்சின்

அஸினிடம் பேட்டி வேண்டுமென்றால் "பேட்டியெல்லாம் தர முடியாது. என் பொண்ணு சொல்றது ஒண்ணு....நீ எழுதுறது ஒண்ணு" என மறுத்துவிடுகிறார் அஸினின் அப்பா ஜோசப் தொட்டும்கல். அதனால் "என்ன சொல்கிறீர்களோ எழுதுகிறோம்" என அஸினின் அப்பாவிடமே பேட்டியெடுத்துவிட்டோம்.

"என் மகள் தெலுங்கில் நடித்தாள். எல்லாப் படமும் சூப்பர் ஹிட். அஸின் தேதிக்காகத் தயாரிப்பாளர்கள் அலைகிறார்கள். ஆனாலும் வருஷத்திற்கு மூன்று அல்லது நான்கு படங்கள்தான் நடிப்பாள்."

"தெலுங்கில் சம்பளம் அதிகம்னு முக்கியத்துவம் தர்றீங்களா?"

"சம்பளமா....பணம் எங்களுக்கு விஷயமே இல்லை. கேரளாவில் எனக்கு 22 பிஸினஸ் இருக்கு. காபி, டீ எஸ்டேட், ஜுவல்லரி, ஃபைனான்ஸ்னு ஏகப்பட்டது இருக்கு. நம்பிக்கையான மனேஜர்கள்கிட்ட அதை ஒப்படைச்சிட்டு, நான் அஸினோடு ஷூட்டிங் வந்துகிட்டிருக்கேன். அஜித்தோட நடிக்கிற 'காட்பாதர்' படத்திற்குக் கூட இன்னும் நாங்க அட்வான்ஸ் வாங்கலை."

"அட்வான்ஸ் வாங்காமலா நடிக்கிறீங்க?"

"ஆமா. கம்பெனியில ஏதோ பைனான்ஸ் பிராப்ளமாம்."

"நீங்க மிகப் பெரிய பணக்காரர் என்கிறீர்கள். அப்படின்னா ஃபைனான்ஸ் பண்ணுவீர்களா?"

"என் பொண்ணு நடிச்ச படங்கள், பணப் பிரச்சினையால நின்னா கண்டிப்பா நான் பைனான்ஸ் பண்ணுவேன். அந்தளவுக்கு வசதியும், பிஸினஸ் அனுபவமும் எனக்கிருக்கு. அவளுக்குப் படமே இல்லேன்னாலும் பரவாயில்லை. பிஸினஸை கவனிச்சுக்குவா. அடுத்து விஜய் கூட நடிக்கிறா. இப்படி படத்தைப் பற்றி செய்தி வந்தாப் போதும், அதனால தனிப்பட்ட பேட்டி அவ தரமாட்டா. மற்ற நடிகர்களோ வேறு யாருமோ என் மகளை தப்பான கண்ணோட்டத்தோட பாக்குறதை நான் அனுமதிக்கமாட்டேன். ஜென்டில்மேன்களோடுதான் நாங்க சிநேகம் வச்சுக்குவோம்.


மாதவன்
தம்பி

## காதலுக்கு அடி - உதை!

'புதிய கீதை' படத்தில் விஜய் ஜோடியாக நடித்தவர், 'என்ன விலை அழகே' படத்தில் பிரசாந்தோடு நடித்துக்கொண்டிருக்கும் மும்பை மோகினி அமீஷா படேல். ஒவ்வொரு பிரபல நட்சத்திரத்திற்கும் அவர்களின் அம்மாக்களுக்கும் இடையே நடக்கும் அடிதடி அமீஷா வாழ்க்கையிலும் நடந்திருக்கிறது.

"என்னை செருப்பால் அடித்து சித்திரவதை செய்தார்கள் என் பெற்றோர்கள். அதனால் எனது சம்பாத்தியங்களை என்னிடமே ஒப்படைக்கும்படி என் பெற்றோர்களுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறேன்" எனக் குண்டைத் தூக்கிப் போடுகிறார் அமீஷா படேல்.

இந்த அடிதடிக்குப் பின்னணி என்ன?

ஹிந்தி சினிமா பிரபலம் விக்ரமை காதலித்து வருகிறார் அமீஷா படேல். மகள் காதலித்து ஓடிவிட்டால் வருமானத்துக்கு வழியில்லை என்பதால் அந்தக் காதலுக்கு அமீஷாவின் பெற்றோர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்கள். ஒருநாள்....விக்ரமும் அமீஷாவும் மெய்மறந்த நிலையில் காதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்க....கையும் காதலுமாகப் பிடித்துவிட்டார் அமீஷாவின் அம்மா. மகள் எவன் கூடவோ ஓடப்போகிறாளே என்ற ஆத்திரத்தில் தன் காலில் கிடந்த செருப்பைக் கழற்றி மகளை மானாவாரியாக அடித்து உதைத்ததோடு தொழிலதிபர் மாப்பிள்ளை ஒருவருக்கும் அமீஷாவைக் கட்டித்தரத் திட்டம் போட்டனர். ஆனால்...பெற்றோர்கள் போட்ட வேலியைத் தாண்டிக் குதித்து வந்துவிட்டார் அமீஷா. "கடவுள் அவர்கள் செய்கிற அக்கிரமத்தை மறந்துவிடலாம், மன்னித்துவிடலாம். ஆனால் என் பெற்றோர்கள் எனக்குச் செய்த அவமானத்தை நான் மறக்கவும் மாட்டேன், மன்னிக்கவும் மாட்டேன். எது நல்லது? எது கெட்டது எனப் பகுத்துப் பார்க்கிற பக்குவமும் வயதும் எனக்கு வந்துவிட்டது. என் வாழ்க்கையை நானே தீர்மானித்துக்கொள்வேன். இதுநாள் வரை எனது சம்பாதியத்தையெல்லாம் என் பெற்றோர்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள். மரியாதையாக என்னிடம் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் சட்டரீதியாக அவர்களைச் சந்திப்பேன்" எனச் சவால் விடுகிறார் அமீஷா படேல்.



ஜீவா
ராம்

## ஜோஸ்வா ஸ்ரீதர்!

போலிஸுக்கும் நீதிமன்றத்துக்கும் தங்களின் குடும்பங்களுக்கும் தண்ணி காட்டிக்கொண்டிருந்த தலைமறைவு காதல் ஜோடியான 'காதல்' பட மியூசிக் ஜோஸ்வா ஸ்ரீதரும் அம்மணி நடாஷாவும் சென்னை மீனம்பாக்கம் அருகே ஒரு நட்சத்திர ஹோட்டலில் தலைமறைவாகத் தங்கியிருந்தனர். இது கர்நாடக விவகாரம். நமக்கென்ன என பொலிஸும் கண்டுகொள்ளாமல் விட்டதால்...குளிர் விட்டுப் போனது இந்தக் காதல் ஜோடிக்கு. இந் நிலையில் 'காதல் வளர்த்தேன்' படத்திற்கு இசையமைக்க ஒப்புக்கொண்டு 2 இலட்சம் ரூபாய் சம்பள அட்வான்ஸ் வாங்கிய ஜோஸ்வா, இப்படி நடாஷா பின்னால் ஓடித் தலைமறைவானதால் ஜோஸ்வா மீது கடுப்பானார் தயாரிப்பாளர் ஹயாத். பணத்தைத் திரும்பக் கொடுத்திடுங்க எனக் கேட்டும் ஜோஸ்வா மறுத்துக்கொண்டே வந்ததால் பாடகர் ஸ்ரீனிவாஸை தனது படத்துக்கு இசையமைப்பாளராக்கிவிட்டு ஜோஸ்வா தங்கியிருந்த இடத்தையும் குறிப்பிட்டு பொலிஸிடம் புகார் கொடுத்துவிட்டார் ஹயாத். ஏற்கெனவே தண்ணிகாட்டியதில் கோபத்திலிருந்த பொலிஸார் இருவரையும் இரவோடு இரவாக அள்ளிக் கொண்டு வந்துவிட்டார்கள். வேலைய விட்டுட்டு சேல பின்னால் அலைந்ததால் ஜோஸ்வா இப்போது மத்திய சிறையில் கம்பி எண்ணிக்கொண்டிருக்கிறார். நடாஷாவை அவரின் பெற்றோரிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

## சதா!


'அந்நியனி'ல் ஒரு காதல் பாடல் காட்சியில் கொஞ்சம் கிளாமராய் நடிக்கச் சொன்னதற்கு மானிட்டரில் பார்த்துவிட்டு தாம்தூம் எனக் குதித்தார் சதாவின் அப்பா. ஆனால் கன்னடத்தில் அம்மணி நடித்த 'மோனலிஸா' படத்தில் ஏறுக்குமாறாய் நடித்திருக்கிறார். அதிலும் ஒரு படுக்கையறைக் காட்சியில் ஹீரோ தியானுடன் சதா கவர்ச்சிப் புரட்சியே பண்ணியிருக்கிறாராம். அப்ப இது...சாதா கவர்ச்சியில்லை. சதா ஸ்பெஷல் போல!



## பாலா!

பாலாவின் 'மாயாவி'யில் சூர்யாவுக்கு கைடு வேடம். வெள்ளைக்காரிச்சிகள் தமிழ் சினிமா சூட்டிங் பார்க்க ஆசைப்பட...விஜயகாந்த் நடிக்கும் படப்பிடிப்பிற்குக் கூட்டிப் போகிறார் சூர்யா. இந்தக் காட்சியில் விஜயகாந்த், விஜயகாந்த்தாகவே நடிக்கிறார். இதற்காக விஜயகாந்த்திடம் டைரக்டர் பாலா பேச..... உடனே ஒப்புக்கொண்டார் கேப்டன். இது சம்பந்தமாக நடந்த பேச்சு வார்த்தையின்போது இன்னொரு அண்டர்ஸ்டாண்டிங்கும் ஆகியிருக்கிறது. அதாவது...பாலா இயக்கத்தில் இப்போது அஜித் நடிக்கிற படம் முடிந்ததும்.... விஜயகாந்தும் பாலாவும் கைகோர்க்கிறார்கள். மதுரை மன்னர்களின் இந்தப் புதிய கூட்டணி சூப்பராய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை!

# அஜித்தின் திட்டம் என்ன?



இரசிகர் மன்றத்தை நற்பணி இயக்கமாக மாற்றிய அஜித், இரசிகர்களை மரம் நடும் பணியில் ஈடுபடச் சொல்லியிருக்கிறார். அதோடு அரசியலில் ஈடுபடுவது போன்ற கேரக்டரில் 'ஜி' படத்தில் நடித்திருக்கிறார். இப்போது ஒவ்வொரு முக்கிய நகரங்களுக்கும் சென்று அந்த மாவட்ட இரசிகர்களை வரவழைத்து ஒவ்வொருவருடனும் தனித்தனியாகப் புகைப்படத்திற்குப் போஸ் கொடுக்கிறார். ஏதோ ஒரு திட்டத்தோடு செயற்படுகிறாரோ....?

நமது சந்தேகத்தை அஜித்திடமே கேட்டோம்.

"இரசிகர்கள் சென்னைக்கு வந்து என்னைச் சந்திப்பதால் அவர்களுக்கு நேர விரயமும் பண விரயமும் ஏற்படுகிறது. அதனால்தான் இரசிகர்கள் இருக்கும் இடத்திற்கு நான் செல்கிறேன். கிட்டத்தட்ட 15 வருடங்களாக மரம் நடும் திட்டம் மனதில் இருந்தது. இப்போது இரசிகர்கள் மூலம் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மரம் நடுவதன் நன்மைகள் பற்றி விழிப்புணர்வு பிரசாரமும் செய்து வருகிறேன். மக்கள் இதை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறார்கள்.

நான் இதுவரை நடித்த படங்களில் எனக்குப் பிடித்த படம் 'ஜி'.

'வாலி', 'அமர்க்களம்', 'முகவரி', 'சிட்டிசன்' படங்களைப் போல் 'ஜி' எனக்குத் திருப்தியளிக்கிறது. நான் கதைக்காகத் தான் 'ஜி' யில் அரசியலில் இறங்குவது போல் நடித்தேன்.



ரஜினி - நயன்தாரா
சந்திரமுகி

## சூர்யா!

'கஜினி' படத்திற்காக சூர்யாவின் கால்ஷீட்டைப் பெற அவரின் மனேஜர் தங்கமான துரைக்கு 5 இலட்சம் ரூபாய் கமிஷன் கொடுத்தாராம் தயாரிப்பாளர் சந்திரசேகரன்.

## மஹிமா!


'காதல் வளர்த்தேன் காதல் வளர்த்தேன்' படத்தில் அறிமுகமாகும் மஹிமா வங்காளத்தைச் சேர்ந்தவர். இவரின் அப்பாவும் வங்காளப் படங்களில் நடித்திருக்கிறாராம்.

## ரக்ஷிதா!

உரல் போல் அகலமாய்ப் பெருத்துப் போய் 'மதுர'வில் விஜய்யோடு ஆட்டம் போட்ட ரக்ஷிதா, தெலுங்கில் சிரஞ்சீவியோடு ஒரு படத்தில் நடிக்கப் போனார். "என் படத்திற்குப் பொருத்தமான நாயகி நீதான். ஆனால் என்ன செய்வியோ தெரியாது. ஒரு மாசத்தில் உடம்பு இளைச்சி வந்தே ஆகணும்" என கண்டிப்பாகச் சொல்லிவிட்டார் சிரஞ்சீவி. என்ன மாயமோ, மந்திரமோ? உரல் போல் இருந்த ரக்ஷிதா இப்போது உலக்கை போல் இளைத்திருக்கிறார்.

## அமரராகாத எம்.ஜி.ஆர்.!

மறக்க முடியாத மாமனிதர் எம்.ஜி.ஆர். என்பது சரிதான் போலிருக்கிறது. சின்னி ஜெயந்த் ஹீரோவாக நடிக்கும் ஒரு படத்திற்குப் பெயர் 'எம்.ஜி.ஆர். நாடக சபா'. இதே போல் சின்னத்திரைக்காக மெகா தொடர் ஒன்றைத் தயாரித்து வருகிறார். இந்தத் தொடருக்குப் பெயர் 'எட்டாவது வள்ளல் எம்.ஜி.ஆர்.'



நயன்தாரா - ரஜினி - ஜோதிகா
சந்திரமுகி

## அகத்தியன்

நான் அடுத்த படம் இயக்குவதில் கவனமாக இருக்கிறேன். அதனால் உங்கள் படத்திற்கு ஒளிப்பதிவு பண்ண இயலவில்லை என அகத்தியனிடம் சொல்லிவிட்டார் தங்கர்பச்சான். தங்கர்பச்சானின் 'ஒளிஓவியர்' என்ற புகழுக்குக் காரணமே அகத்தியனின் 'காதல் கோட்டை' தான். இருந்தும் நேரமின்மையால் மறுத்துவிட்டார் தங்கர். ஆனாலும், "நீங்க பண்ண முடியாவிட்டாலும் பரவால்ல. உங்க பேர் இருக்கட்டும்" என விளம்பரங்களில் போட்டுவிட்டார் அகத்தியன்.

'ராமகிருஷ்ணா'வில் இரண்டாவது நாயகியாக நடித்த வாணியோடு வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கும் அகத்தியன், வாணி பெயரிலேயே புரொடக்ஷன் கம்பெனி தொடங்கி தயாரிக்கும் அந்தப் படத்தின் பெயர் 'வேடந்தாங்கல்'.

## கொங்கணா சென்!

உலகம் முழுக்க தமிழ் மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து போய் வசிக்கும் தமிழர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் 'தாய்மண்' கதையை தங்கர்பச்சான் ரெடி செய்துவிட்டார். இருப்பினும் அழகி நந்திதா போல் நேட்டிவிட்டியான திராவிடக் கலரில் உள்ள நடிகையைத் தேடிக்கொண்டிருந்தார் தங்கர். இந்நிலையில் 'மிஸ் அண்ட் மிஸஸ் அய்யர்' படத்தில் நடித்துப் பெயர்பெற்ற கொங்கணா சென்னைப் பார்த்ததும் இந்தக் கதைக்கு இவர்தான் பொருத்தமான நாயகி என முடிவுகட்டிவிட்டார் தங்கர். கடந்த சில மாதங்களாகவே கொங்கணாவைச் சந்திக்கத் தேதி கேட்டுக் காத்துக் கிடக்கிறார் தங்கர். தங்கரின் கொங்கணா கனவு பலிக்குமா? பலிக்கட்டும்!


## அழுதே.....

'இது ஒரு வித்தியாசமான காதல் கதை" என்கிறார் டைரக்டர் எழில். "அப்படி என்ன வித்தியாசம்" என்று கேட்டோம்.

"திருமணத்திற்குப் பிறகு ஒருவனின் வாழ்க்கையில் காதல் தொடர்ந்தால் என்னென்ன பிரச்சினைகள் உண்டாகும் என்ற சிக்கலும் சுவாரசியமும் நிறைந்த கேள்விக்குப் பதிலாக அமைந்ததே 'அழுதே' கதை. அதே சமயம் எல்லா வயதினரையும் இழுக்கும் வண்ணம் பொழுதுபோக்காக...அதே சமயம் சமூகத்திற்கு ஒரு செய்தியை இந்தப் படம் சொல்லும். பெரும்பாலும் ஆண்களே கதை உருவாக்குவதால் சினிமாவில் பெண்களின் நிலை.....உணர்ச்சிகள் தெளிவாக சொல்லப்படுவதில்லை. இந்தப் படத்தின் கதையை எழுதியிருப்பவர் பிரபல பெண் நாவலாசிரியை மணிமாலா. மணிமாலாவைத் தவிர வேறு சில முக்கிய அறிமுகங்களும் உண்டு. இசையமைப்பாளர் சுனில், பாடலாசிரியர் தமிழ் அமுதன்...இப்படிப் பல அறிமுகங்கள். "போட்டுத்தள்ளுடா" என்றொரு கும்மாங்குத்துப் பாட்டுக்கு ரகசியா வெளுத்துக் கட்டியிருக்கிறார். அதோடு கவர்ச்சிச் செம்மல் அனாமிகா ஒரு பாட்டுக்குப் பின்னியெடுத்திருக்கிறார். தினகர் என்ற கேரக்டரில் வாழ்ந்திருக்கிறார் நாயகன் ஜெய்ஆகாஷ். தெளிவான சிந்தனை கொண்ட தடாலடியான இளம் பெண் கேரக்டரில் 'குடைக்குள் மழை' மதுமிதா உங்கள் இதயங்களைக் கொள்ளைகொள்ளப் போகிறார்.

முறைப்பெண்ணாக வந்து மனசுகளை வலிக்க வைக்கப் போகிறார் உமா.

பிரகாஜ்ராஜின் சினிமா வாழ்க்கையில் இந்தப் படம் மறக்க முடியாத படமாக அமைந்துவிடும். 'அழுதே' படத்தில் மிக முக்கியமானது, க்ளைமாக்ஸ்தான். பொதுவாக ஒவ்வொரு படத்திலும் கடைசிக் காட்சி என்பது ரொம்ப நேரம் நீடிக்கும். ஆனால் 'அழுதே' யில் க்ளைமாக்ஸ்...ஒரு பாடல் காட்சியில் செல்லப்படும். இது இரசிகர்களால் பெரிதும் பாராட்டப்படும். இந்த தகவல் போதுமா..."இன்னும் கொஞ்சம் தேவையா...என மூச்சுவிடாமல் பேசினார் எழில்.



சூர்யா - ஜோதிகா
மாயாவி

விபசார வழக்கில் கைதுசெய்யப்பட்டு அந்த வழக்கிலிருந்து வெற்றிகரமாக விடுதலையான வினிதா, தன் தம்பி சங்கருக்காகத் தயாரிக்கும் படம் 'துள்ளும் காலம்'. சங்கர், ஹீரா, மேகா எனப் புதுமுகங்களை வைத்துத் தயாராகும் இந்தக் காதல் படத்தில் தன் சொந்தத் தம்பிக்கு அக்காவாக திரையிலும் நடிக்கிறார் வினிதா. தம்பிக்காகவே வாழும் அக்கா கேரக்டராம். நிஜத்திலும் அதைத்தானே செய்கிறார். ஃபைனான்ஸ் பிரச்சினை காரணமாகத் தற்காலிகமாக நின்றிருந்த இந்தப் படத்தின் படப்பிடிப்பை ஒருவழியாக முடித்துவிட்டார் வினிதா. நடிகையாக ஜெயித்த வினிதா, தயாரிப்பாளராகவும் ஜெயிக்கட்டும்.



சூர்யா - நிலா
பி.எப்




# பனித்துளி

புல்லின் நுனியில்
இரவில் முளைக்கும்
வெள்ளித் தலைகள்

இலைகள்
தலை குளிக்க
இறைவன்
அள்ளித் தந்த
இரகசியத் துளிகள்

வைகறையில் மின்னும்
பூமித் தாரகைகள்.

சூரியக் காதலனின்
வெளிச்சக் கண்பட்டு
உருகிப் போகும்
தண்ணீர்க் காதலிகள்.

தேன் குடிக்கும்
வண்டினங்கள்
வாய்க் கழுவ
பூக்கள்
வாங்கி வைத்த
பன்னீர்த் துளிகள்.

வேரில் உறிஞ்சியதை
வியர்வையாக்கும்
தாவரங்களின்
மார்கழி வித்தை.
என்றெல்லாம்

எண்ணிக் கொண்ட
எனக்கு, நானுன்னைக்
கண்டபின் தானே
புரிகிறது என் மகனே...!

தொட்டில் பூவில்
கண்கள் மூடி
கைகள் பொத்தி
அழகாய் உறங்கும்
நீயும் கூட
பனித்துளி தானென்று!



–மெய்யன் நட்ராஜ்,
தோஹா – கட்டார்.

# சமாதான தேவதை

இரு தசாப்தங்களை
ஏப்பமிட்டு
கோரத்தனமாடும்
மனிதமே காணாத
மலர் கொண்டு காக்கும்
படலம்!
காமுகச் சேட்டை
களைந்து போன வாழ்வு
தேடும் சமாதானம்.
பூட்டிய அறைக்குள்
குளு குளு சுகத்தில்
பிழைப்பு நடாத்தும்
அரசியல் வாதிகள்
புதை குழிகளைத்
தோண்டும்
சமாதான தேவதைகள்
தொலைந்து போன
விடியலுக்கு
விலாசமெழுதும்
வக்கிரவுணர்வுகள்
வறட்டு வேதாந்தம்
அகப்பட்டு
கழுத்து திருகப்பட்ட
சமாதானம்
காலை மலருமென்ற
நம்பிக்கை
நாதியற்று
ஓய்ந்து கிடக்கும்
எதிர்பார்ப்புக்கள்
வார்த்தை
மாய்மாலங்கள்
மறந்து களிக்கும்
இழப்பே இருப்பாக்கி
எதுவுமில்லா ஜீவன்
தேடும் சமாதானம்.

எம்.எம். அல்ஷா,
மாவடிச்சேனை.

# இதயத்தால் அழுகின்றோம்....!

கொந்தளித்துக்
கொன்றொழித்துக்
கொப்பளித்து நீ
குவித்துக்
கரையில் போட்ட
சொந்தங்களைச்
சேகரித்து
சோகமுடன் நாம்
புதைத்துத்
தேம்புகின்றோம்....!

வந்த வீதி
நொந்தழுது
வாழ்விழந்து
அகதிகளாய்
வாடுகின்றோம்!
சிந்தும் விழி
செங்குருதி...!
சீறி வந்த
பேரலையைச்
சாடுகின்றோம்...!

அமைதிமிகும்
எமதூரின்
அழகொழித்துப்
போனாயே!
அலையே! உன்னால்
எமைப் பிரிந்த
உறவை எண்ணி
இதயத்தால்
அழுகின்றோம்
இரத்தம் சிந்தி!


வலை வீசி நாம்
வருவோம்!
வகை வகையாய்
மீன் தருவாய்!
வாழ்ந்திருந்தோம்!
வலைவீசிக் கடலே
எம்
வாசலுக்கு நீ
வந்தாய்!
வாழ்விழந்தோம்!

தாய் இறக்க...
மகன் தவிக்கச்
சேய்... இறக்கத்
தாய் துடிக்கத்
தேசமெங்கும்
ஆயிரக்...
கணக்கானோர்
ஆழ்கடலே!
உனக்குள்ளே
அமிழ்ந்து
போனார்!

உனக்குள்ளே
இருக்கின்ற
முத்துக்கள்
போதாமல்
ஊர்வந்தாயா?
நினைக்கின்ற
கணந்தோறும்
நீர் வழியும்
விழியோரம்
நெஞ்சு வேகும்!
கரையோரம்
வந்தெங்கள்
கால்தொட்டு
மன்னிப்புக்
கேட்கின்றாயா...?
இரை போதும்..!
ஊருக்குள்
இனி மீண்டும்
வராதே நீ
கடலே! தாயே!

– கிண்ணியா
அமீர் அலி

# கயர்



அது கயரல்ல
காயம் போல நினைவுதான்
என் கால் இடறிய போது
கட்டிப் பிடித்த - உன்
மருதாணிக் கரங்கள்....

நகம்பட்ட மெல்லிய கீறல்
இதயத்தில் இரத்த ரேகைகள்
குசு குசுத் தோடுது
உன் பெயர் சொல்லி.

என் விரல்களுக்குக் கோதத்
தெரியும்
அள்ள இயலவில்லை
நீ நழுவிப் போ!
சின்னப் பல்லுச் சீப்பில்
சிக்காமலா போவாய்?

அது கயரல்ல
காயம் போல நினைவுதான்...

தீங்கனி!
உன் விழி அம்பு
துளைத்துத்தான்
என் நெஞ்சு குழியாச்சு.

நீ
எதிரே நின்று சிரி....
எச்சில் தெறித்தாவது
மேனி சிலிர்க்கட்டும்
காதல் வேர்ப்பிடிக்க.

அது கயரல்ல
காயம் போல நினைவுதான்....

நான் தடுக்கி விழும் போது -
உன்
மருதாணிக் கரங்கள் பட்ட
கோடிச் சட்டை கழற்றிக்
கொழுவி வச்சிருக்கேன்
மண்ணூட்டு மான் கொம்பில்!

அது கயரல்ல
இன்னும் எனக்கு
காயம் போல நினைவுதான்.

–ஹிதாயா நாசீர், பொத்துவில்.



# காற்றே நீயெங்கே....?

நரம்புகளில் நீ பயணப்பட்ட
கணங்களுக்கு..
களிகூறுகிறேன்...
அல்லாமல்.....
நீயின்றி
வீழும் காலங்களுக்கு...
கவலை தெரிவிக்கிறேன்...



எப்போதும்
காற்றிடுக்கில் மறைந்தன
அற்புதமான
உனதும் எனதும்
சாமங்கள்



உன் நினைவில்லா
மையம் நோக்கி
நகர்கையில்
உன்
உடைபோர்த்த கனவுகளின்
கால் கொலுசொலிகள்
மீண்டும் எனை
திரும்பிப் பார்க்கச் செய்யும்

அவஸ்தை புரியுமா
உனக்கு...?

நிரம்பாதிருக்கிற
இரவெல்லாம்
உன் நினைப்பால்
சிக்குப்பட்டுப் போய்
அழுத்தி எனை வதைத்து
சீக்கிரமே விழுகிறது.....

சிரமமாகத்தான் இருக்கிறது
எனக்கான தனிமையில்
பசியாற....
மேலும் சொன்னால்
நசிவுகள் கோர்த்துக்
கிடக்கும்
என்
எல்லாவற்றையும்
கொண்டு செல்லும்
காற்றே
நீ எங்கே?



பாவகி, கொட்டகலை.

# நல்லவற்றை நினைத்திருந்தால்

இரவு பகல்
என்பதே தெரியாத
கடும் உழைப்பின்
பிரதி பலன்....
கற்றலின் ஓர்
பகுதியில்
உற்சாகம் தந்த
உயர் கல்விக்கான
உத்தியோகம்.
காத்திருப்புகள்
பல கடந்து
அன்பினால் வென்று
இனிய துணை தந்த
காதல்
அநாதரவான..
நிலைமைக்களில்
உயர் கல்வியினைத்
தொடர
உதவி செய்திட்ட
உவப்பானவர்கள்
இனியவற்றைப் பேசி
நல்லவற்றை ஏவி
தீயவற்றைத் தவிர்த்து
உயர்வுக்காய்
தோள் கொடுத்த
தோழர்கள்.
பாடசாலை வாழ்வில்
பண்பாகப் பழகி
என்றென்றும்
எனை மறந்திடாத
சகபாடிகள்.
உள்ளவற்றைக்
கொண்டு
உன்னதமாய்..
சேவை செய்ய
ஊக்கமளித்திடும்
இனிய
தலைமைத்துவம்.
இன்னும்
எத்தனை
எத்தனையோ.....
நல்லவைகள்
நல்லவற்றை
நினைத்திருந்தால்
நாட்களெல்லாம்
இனிமையானவைதான்...

மட்/பிறைந்துறைச்சேனை
அஸ்ஹரிலிருந்து
என். சஹாப்தீன்

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

*"வடிவம் சார்ந்த புற அடையாளங்களைத் தவிர்த்துக் கவிதைக்குக் கற்பிக்கப்படும் அக இலட்சணங்கள் எதுவாயினும் அவை சார்புத்தன்மையும் எல்லைகளும் கொண்டவையாகவே இருக்க முடியும். இயல்பாக அமையப் பெற்ற நுண்ணுணர்வு, பிரத்தியேகமான வாழ்வனுபவங்கள், கலாசார மரபின் கொடைகள், வாசிப்பு சேகரங்கள் ஆகியவற்றின் கூட்டு விளைவாக உருவாகும் அழகியல் பிரக்ஞை மூலமாக ஒருவன் தனக்கானது என ஒரு கவிதையை அடையாளம் காண்கிறான். காலத்தையொட்டி அவனிடம் அகத்தேயும் புறத்தேயும் நிகழும் வளர்சிதை மாற்றங்களுக்கேற்ப அந்த அழகியல் உணர்வும் பார்வையும் மாற்றம் பெறுகிறது. ஒரு காலத்தில் நெகிழ வைத்த கவிதையொன்று பிறகு சாதாரணமாகத் தோன்றவும், முன்பு அபத்தமாகப் பட்ட ஒரு வரி பின்னர் அபூர்வமானதாக ஒளிரவும் அழகியல் ரீதியிலான அப் பிரக்ஞை மாற்றமே காரணமாகிறது.*

*கவிதையின் தோற்றத்திற்கும் பகிர்தலுக்கும் ஆதாரமான ஒருவனது அழகியல் உணர்வின் மையத்தில் ஊடுருவி, சலனங்களை, பிரதிபிம்பங்களை, நிற மாறுதல்களை நிகழ்த்த வல்ல எந்த வரிகளும் நல்ல கவிதையே. அது வாசிக்கும் தனிநபரின் அனுபவப் பங்கீட்டு நிலையைப் பொறுத்து மாறக்கூடியது. அதனாலேயே ஒருவனுக்கு மிக உயர்ந்த கவிதையாகப் படும் அதே வரிகள் பிறிதொருவனுக்கு எவ்விதமான அகத் தூண்டலையும் தராமல் போகவும் வாய்ப்புண்டு...*

*எந்த வரிகளின் முன் இதயத்தையும் மூளையையும் ஒரு சேர நீ இயக்கவும் பெறவும் செய்கிறாயோ, அதுவே உனக்கான கவிதை" என்று கூறுகிறார் க.மோகனரங்கன். சிறு சிறு உணர்வுத் தெறிப்புக்களால் சில கவிதைகள்.*



### பொழுது

பொழுதுகளோடு
பெரும் அவஸ்தை
மாலைக்கு அருகாமையிலிருக்கிற
இரவு என்னிடம்
இடைவெளி கூட்டுகிறது.
விழித்ததும் முகத்தில்
விழுகிறது சூர்யக் கீற்று
வெயிலிடம் தோற்பேன் தினமும்
சற்றைக்கு முன்
எச்சமிடவும் அவகாசமின்றி
என்னைக் கடந்து போயிற்று
பறவைக் கூட்டம்.
பொழுதைத் தூக்கி
சிறகில் வைத்து.

–வியாகுலன்

தொலைந்து போன
முயலொன்று
சிங்கத்திடம் வழி கேட்டது
சிங்கத்துக்கு கருணை மனது
தன் குட்டியின்
இருப்பிடம் காட்டியது.

– தபசி

அன்பைப் பற்றி
நிறையப் பேசினோம்
திருப்தியாய் இருந்தது.

– காலசிவன்

கிளையை ஓட்டையிடும்
மரங்கொத்தி
எப்போது பறப்பாய்
என் நெஞ்சை விட்டு.

– நா. விச்வநாதன்

செருப்போடு கூடப் பிறந்ததுபோல்
சிறிசு முதல் பெருசு வரை
மண் அறியாப் பாதங்களுக்கு
அடிச்சுவடுகளுக்கு
அனுமதியில்லை.

வந்த அடையாளமும்
போன அடையாளமும்
இல்லாமல் கிடக்கும்படி
ஆகிவிட்டது
வாழ்க்கையின் இலட்சணம்.

- கல்யாண்ஜி

எனக்கான காற்று
உனக்கானதாய்
இருப்பதில்லை
அகலம் பொறுத்தும்
ஆழம் பொறுத்தும்
வாங்கப்படுகின்றன
அவரவர் துரத்தும் காற்று
எப்படி சாத்தியம்
ஒரே காற்று
இருவருக்கு?

– இ.இராஜலட்சுமி

### புது மார்கழி

மாநகர் வந்து
மாதங்கள் பல ஓடிவிட்டன
பொருட்களை
ஏற்றி வந்துவிட்டேன்
அப்போதே.
வராமல் அடம்பிடித்துக் கொண்டிருக்கும்
இந்த மனசைத்தான்
எப்படிக் கொண்டு வருவதெனத்
தெரியவில்லை...!
- இளம்பிறை.
குழந்தையோடு கொஞ்சிக்
கொண்டும்
மனைவியோடு சந்தோஷமாய்
பேசிக்கொண்டிருக்கும்
மாலைப் பொழுதுகளில்
நினைவுக்கு வந்து
உறுத்துவாள்
முதன்முதலில் பெண் பார்த்து
இன்னும் திருமணமாகாத
அந்தப் பெண்.


– இரா.அ. தென்றல் நிலவன்

### இது வேறு பார்வை


வழி தவறி நுழைந்து
வரையறுத்த சுவர்களால் மருண்டு
படபடப்பாய்ச் சிறகுகள் உதறி
திசை குழம்பி டி.வி.யில் மோதி
திரைச் சீலையில் பாதை முகர்ந்து
முன்னும் பின்னும் தவித்தலைந்து
மின்விசிறிக்குத் தப்பி வெளியேறிய
பட்டாம்பூச்சியின் மனதில்
நரகமெனப் பதிவாகியது எனது அறை.

– எஸ்.கோபிநாத்


# பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி




பெயர் : பே. குகதர்ஷன்
வயது : 18
முகவரி : கோயில் வீதி,
கோளாவில்–01,
அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு: வானொலி,
பத்திரிகை.



பெயர் : பி. கௌரிதரன்.
வயது : 19
முகவரி : அம்மன் ரேடர்ஸ்,
மகாறம்பைக்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு : ரி.வி.,
வானொலி.



பெயர் : லோ. ரதீஸ்குமார்.
வயது : 19
முகவரி : கோயில் வீதி,
கோளாவில் –01,
அக்கரைப்பற்று.
பொழுதுபோக்கு : வானொலி,
பத்திரிகை.



பெயர் : பா. தவமோகன்.
வயது : 18
முகவரி : 6, ராஜதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
பொழுதுபோக்கு :
வழமையானவை




## பெண்களுக்கு சில யோசனைகள்

- ஜன நடமாட்டம் குறைந்த சாலைகளில் நடக்க நேரிட்டால் சாலை விளக்கு உங்கள் மீது படும்படி நடக்க வேண்டும்.
- சந்தேகமான முறையில் ஏதாவது கார் ஆசாமி தென்பட்டால் உங்கள் மாதிரி இன்னொரு பெண் வரும் வரை காத்திருந்து சேர்ந்து செல்லவும்.
- பொலிஸ் ஸ்டேஷன் இருக்கு மிடத்தைத் தெரிந்து வைத்துக் கொள்ளவும்.




- உங்களைச் சந்தேகமான ஆசாமி பின்தொடர்ந்தால் பக்கத்தில் உள்ள வீட்டு வாசலில் சென்று கதவைத் தட்டவும்.
- கைப் பையை மார்போடு அணைத்துக்கொள்ளவும்.
- நிறைய பணம் இருந்தால் பர்சைத் திறக்கும்போது அடிக்கடி அதை வெளியே எடுத்துப் பார்க்கக் கூடாது.
- எதிர்பாராது ஆபத்து வரும போலத் தோன்றினால் உங்கள் கையி லுள்ள பொருளை மிக அருகிலுள்ள தபால் பெட்டியில் போட்டுவிடுங்கள். மறுநாள் தபால் ஆபீஸில் சென்று பொருட்களைப் போட்ட காரணத்தை விவரமாகச் சொல்லித் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.
- பயத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் சாதாரணமாக நடக்க வும்.
- காரைத் தனியான இடத்தில் இரவு வெகுநேரம் நிறுத்தி இருந்தால், திரும்ப வந்து காரை எடுக்கும்போது காருக்குள்ளும், டிக்கியிலும் டார்ச் அடித்துப் பாத்துக்கொள்ளவும்.
- எக் காரணத்தைக் கொண்டும் இரவில் குறுக்கு வழியில் செல்ல வேண்டாம்.

## குறிப்புணர்த்தும் குடும்ப டிப்ஸ்!

### குழந்தைகளுக்கு உணவு முறை

முதல் மூன்று மாதங்களுக்கு :- தாய்ப்பால் அல்லது சிறிது தண்ணீர் கலந்த பசும்பால். அளவு : 3 அவுன்ஸ் முதல் 5 அவுன்ஸ் வரை. கொடுக்கும் நேரம் : காலை 6 மணி, 9 மணி, பகல் 12 மணி, மாலை 6 மணி, இரவு 9 மணி.


பழச்சாறு ஒரு அவுன்ஸ் முதல் இரண்டு அவுன்ஸ் வரை. நேரம் : காலை 8 மணி, மாலை 4 மணி.



### நான்கு மாதம் முதல் ஆறு மாதம் வரை

தாய்ப்பால் அல்லது பசும்பால், அல்லது பவுடர் பால். அளவு : 5 அவுன்ஸ் முதல் 8 அவுன்ஸ் வரை. நேரம் : காலை 6 மணி, 10 மணி, பகல் 2 மணி, மாலை : 6 மணி இரவு 10 மணி. காலை 6 மணிக்கு பாலுக்குப் பதில் அதே அளவு தயிர் கொடுக்கலாம்.

பழச்சாறு, 2 அவுன்ஸ் முதல் 3 அவுன்ஸ் வரை.



நேரம் : காலை 8 மணி, மாலை 4 மணி.

காய்கறி, அல்லது எலும்பு சூப், அளவு 2 அவுன்ஸ். நேரம் : பகல் 12 மணி.

தண்ணீர் இடைவேளையில்.

இரும்புச் சத்துள்ள டானிக் அல்லது சொட்டு மருந்து. மீன் எண்ணெய் அல்லது வைட்டமின் சொட்டு மருந்து ஓரிரண்டு வேளை.

### ஆறு மாதங்களிலிருந்து எட்டு மாதங்கள் வரை

தாய்ப்பால் அல்லது பசும்பால், அளவு 8 அவுன்ஸ். நேரம் : காலை 6 மணி, பகல் 2 மணி, இரவு 10 மணி.

அரிசிக் கஞ்சி 4 அவுன்ஸ், அத்துடன் 4 அவுன்ஸ் பால் அல்லது தயிர். நேரம் : காலை 10 மணி, மாலை 6 மணி.

பழச்சாறு 8 அல்லது 4 அவுன்ஸ் இரண்டு வேளை. நேரம் : காலை 8 மணி, மாலை 4 மணி.

காய்கறிச் சாறும், எலும்புச் சாறும், பருப்பும் சேர்த்து 3 அவுன்ஸ், நேரம் : பகல் 12 மணி.

தண்ணீர் இடைவேளைகளில்.

டானிக்குகள் ஓரிரண்டு வேளை.

### எட்டு மாதங்களுக்கு மேல் ஒரு வயது வரை

பால் அளவு 8 அவுன்ஸ். நேரம் : காலை 6 மணி, பகல் 2 மணி, இரவு 10 மணி, ஒரு வேளை பாலுக்குப் பதில் (பகலில்) தயிர் கொடுக்கலாம்.

குழைய பொங்கிய சாதம், அத்துடன் தயிர் கடைந்த பருப்பு, கடைந்த கீரை, குழைந்த காய்கறிகள், கொத்துக் கறி, எலும்புச் சாறு ஏதாவதொன்று. நேரம்



பகல் 10 மணி, மாலை 6 மணி.

பழச்சாறு 4 அவுன்ஸ். நேரம் : காலை 8 மணி, மாலை 5 மணி.

தண்ணீர் இடைவேளைகளில்.


டானிக்குகள் இரண்டு வேளைகள்.

ஒன்றிரண்டு வேளைகளில், கோதுமை ரொட்டியில் சுற்றி உள்ள கடினப் பகுதியை நீக்கி மெதுவான பாகத்தைச் சாதத்திற்குப் பதில் கொடுக்கலாம். பிஸ்கட் கொடுப்பது நல்லதல்ல. ஆறு மாதத்திற்கு மேல் குழந்தைக்கு இட்லி, இடியப்பம் கொடுக்கலாம். கனிந்த வாழைப்பழம் கொடுக்கலாம்.

### குழந்தைகள் வயிற்றுக் கோளாறு

சிறு குழந்தையின் வயிற்றுக் கடுப்புக்கு கசகசாவை அரைத்து பசும் பாலில் கலக்கிக் கொடுக்க உடனே நின்று விடும்.

கைக் குழந்தைகள் அஜீரணத்தால் அவதிப்பட்டால் தாய்ப் பாலிலோ, வெந்நீரிலோ சிறிது பெருங்காயத்தையோ அல்லது மிளகையோ கரைத்துக் கொடுக்க வயிற்றுவலி நின்றுவிடும்.



அடிக்கடி பேதியானால் :- ஓமத்தை கறுப்பாக வறுத்து அதில் மூன்று டம்ளர் தண்ணீர் விட்டு, ஒரு பங்காக வற்ற வைத்து, வடிகட்டி, அதனுடன் தேன் கலந்து கொடுக்க வேண்டும். சிறு குழந்தைக்குக் கொடுக்கும்பொழுது ஒரு பாலாடை வீதம் மூன்று (நான்கு) மணி நேரத்திற்குகொரு முறை, ஒரு நாளைக்கு ஐந்து முறை கொடுக்கலாம்.


## சிகை அலங்காரங்கள்

### BUTTERFLR STYLE

தலைவாரி Poney Tail ஆகக் கட்டிக் கொண்ட பின்பு Poney Tailஐ மூன்று சம பகுதிகளாகப் பிரித்துக்கொள்க.

பின்பு இரண்டாவது பிரிவுத் தலைமுடியை ஒன்றன் மேலொன்றாக நான்கு சம பகுதிகளாகப் பிரித்து, படத்தில் காட்டியவாறு நான்கு Curl களை அமைத்துக்கொள்க.

பின்பு முதலாவது, மூன்றாவது, பிரிவுத் தலைமுடிகளை சரிவாக நேர்மேலாக வாரியெடுத்து உட்புறமாக Back Comp செய்து Roll செய்து இருபுறமும் சரிவாக வைத்து Clip குற்றிக் கொள்க.



## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது —ஷோபா—

### சிலி ஸ்ரவ்

10 சிலிகள்

**தேவையான பொருட்கள்**

கறி மிளகாய் - 10 (காம்புடன்)
உருளைக்கிழங்கு - 1/4 கி.கிறாம்
சிறிதாக வெட்டிய லீஸ் - 3 மே.க. (நிரப்பி) (அல்லது 25 கிறாம்)
சிறிதாக வெட்டிய வெங்காயம் - 1 மே.க. (நிரப்பி)
சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய் - 1 மே.க. (நிரப்பி)
சிறிதாக வெட்டிய உள்ளி - 1.தே.க. (நிரப்பி)
மிளகுத் தூள் - அளவிற்கு
உப்புத் தூள் - அளவிற்கு
மாசிக் கருவாடு (இடித்தது) அல்லது அவித்து மசித்த மீன் - 2. மே.க. (நிரப்பி)
மாஜரின் - 1.தே.க. (நிரப்பி)
கடுகு - 1 தே.க. (மட்டமாக)
தக்காளி சோஸ் - 1 மே.க.
கோதுமை மா - 2 மே.க.
முட்டை - 2
ரஸ்க் தூள் - 4 மே.க. (நிரப்பி)
தேங்காயெண்ணெய் - 1/2 போத்தல்.

**செய்முறை :-**

உருளைக்கிழங்கை அவித்துத் தோலுரித்து மசித்து வைத்துக்கொள்க.

லீஸைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி சிறிதளவு உப்புப் பிரட்டி வைத்துக்கொள்க.

தாச்சியில் மாஜரினையிட்டுக் காயவைத்து காய்ந்தபின் கடுகைப் போட்டு வெடிக்க வைத்து, வெட்டி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், உள்ளி, கறிவேப்பிலை என்பவற்றைப் போட்டு அரைப் பதமாக வதங்கியதும், லீக்ஸையும் போட்டு மூடி வதங்கவிட்டு வதங்கிய பின் உப்புத் தூள், மிளகுத் தூள், மசித்து வைத்துள்ள மீன் அல்லது கருவாட்டுத் தூள், சோஸ் மசித்து வைத்துள்ள உருளைக்கிழங்கு என்பவற்றையிட்டு நன்கு சேர்த்து அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்க.

கழுவிய கறி மிளகாயை எடுத்து, ஒரு பக்கத்தை நீள்வாக்கில் கீறி உள்ளேயிருக்கும் மிளகாய் விதைகளை அகற்றிய பின்பு, தயாரித்து வைத்துள்ள கறிக் கலவையை அந்த மிளகாய் முழுவதும் நிரப்பும் வண்ணம் அடைத்துக் கொள்க. இவ்வண்ணம் மற்றைய மிளகாய்களையும் அடைத்துக்கொள்க. முட்டையை அடித்து வைத்துக்கொள்க.


பின்பு தாச்சியில் தேங்காயெண்ணெயைக் கொதிக்க வைத்து எண்ணெய் நன்கு கொதித்தபின் மிளகாயைக் காம்பில் பிடித்துக் கோதுமை மாவில் புரட்டி, முட்டையில் தோய்த்தெடுத்து ரஸ்க் தூளில் புரட்டி எண்ணெயில் போட்டுப் பொன்னிறமாகப் பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.




இன்றைய நாகரீக சூழ்நிலையில் நாய் வளர்ப்பதென்பது ஒரு கௌரவ சிம்பலாகக் கருதப்படுகிறது. அவ்வாறு நாய் வளர்க்கின்ற நம்மில் பலர், பல நேரங்களில் அந் நாய்களைக் கட்டிக் கொண்டும், முகர்ந்துகொண்டும்.... ஏன் முத்தமிட்டுக் கொண்டும் கூட இருக்கிறோம். ஆனால் உரிய நேரத்தில் அந்தச் செல்லப் பிராணிக்கு, தடுப்பூசி போட வேண்டுமென்பதை நாம் யோசிப்பதில்லை. அவ்வாறு தடுப்பூசி போடப்படாத நாய்களின் மூலம் மனிதனுக்குப் பரவும் வெறிநோய் எனப்படும் நீர் வெறுப்பு நோய் மனிதனுக்கு விலங்கினங்களின் மூலமாகப் பரவும் நோய்களிலேயே மிகவும் கொடுமையானதாகும்.

இந் நோயுற்ற மனிதனோ அல்லது விலங்கினங்களோ பிழைப்பதில்லை. எனினும், சரியான நேரத்தில் தடுப்பூசி போட்டுக்கொள்வதன் மூலம் இந்நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

இந் நோய் நாய், பூனை, கீரி, நரி, எலி மற்றும் குரங்கு போன்ற பல்வேறு விலங்கினங்களால் பரப்பப் பட்டாலும் நாய்தான் இதில் முதன்மை வகிக்கிறது.



நாய் கடித்துத்தான் இந் நோய் வர வேண்டுமென்பதில்லை. நாய் நக்கினால் கூட நோய் வர வாய்ப்பிருக்கிறது. அவ்வாறு நக்கப்படும் இடத்தில் சிராய்ப்புகளோ, புண்களோ இருக்குமாயின் நுண் கிருமிகள் அதன் வழியே நுழைந்துவிடும். இதேபோல் நோயுற்ற நாயின் எச்சில் நமது கண்களிலோ அல்லது பிற உறுப்பிலோ பட்டாலும் நோய் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனாலும் 90 சதவீதம் நாய் கடிப்பதாலேயே இந் நோய் வருகிறது.


அவ்வாறு கடிக்கப்படும்பொழுது உடம்பு மற்றும் கால்களை விடவும் தலை மற்றும் கழுத்துப் பகுதிகளில் கடிபடுமாயின் இந் நோய் துரிதமாகப் பரவும். அதாவது இந் நுண் கிருமிகள் கடிபட்ட இடத்திலிருந்து, நரம்புகள் வழியாக மூளையை அடைந்து நோய்க் குறிகளை வெளிப்படுத்துகின்றன. எனவே கழுத்து, தலைப் பகுதியில் கடிபடும்பொழுது, நுண் கிருமிகள் மூளையை அடைவதற்குப் பயணம் செய்யும் தூரம் மிகக் குறைவு. அதனால் ஒரே வாரத்தில் கூட இந் நோய் வெளிப்படக் கூடும். ஆனால் கால், பாதம் போன்ற பகுதிகளில்



கடிபடுமாயின் நோய் வெளிப்பட மாதக் கணக்கில் கூட ஆகும்.

மேலும் வெற்றுடம்பில் கடிபடுமாயின், அதன் தீவிரம் அதிகமானதாகவும், விரைவானதாகவும் காணப்படும். மாறாக, கடிபட்ட இடத்தில் கெட்டியான ஆடை இருப்பின் வெளியேறும் உமிழ்நீரின் பெரும் பகுதியை அவ்வாடை உறிஞ்சிவிடக் கூடும். மேலும் கடியும் ஆழமாக இராது. நோயுற்ற நாய் தெருவில் அலையும்பொழுது, பலரையும் கடிக்க முயலும். இவ்வகையில் நான்கு நபர்களுக்குப் பிறகு கடிபடும் மனிதருக்குத் தீவிரம் குறைவாகவே இருக்கும். காரணம் உமிழ்நீரில் உள்ள நுண் கிருமிகளின் அடர்த்தி ஒவ்வொரு கடியின்பொழுதும் குறைந்துகொண்டே வரும்.

மனிதர்களில் இந் நோய்க் குறிகள் தென்பட ஆரம்பித்துவிட்டால், அவர்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவது இயலாது. மேலும் இறந்துவிடுவோம் என்னும் நினைப்பே இவர்களது மன நிலையையும் பாதித்துவிடுகிறது. ஆகவே சந்தேகத்திற்கு இடமான



நாய் கடித்துவிடுமாயின் உடனடியாகத் தடுப்பூசி போட்டுக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

அந்தக் கொடிய நோய், 1903ஆம் ஆண்டிலேயே அயர்லாந்திலிருந்து முற்றிலுமாக ஒழிக்கப் பட்டுவிட்டது. பின் 1956ஆம் ஆண்டில் ஜப்பானிலும், 1969ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டிலும், 1970ஆம் ஆண்டில் டென்மார்க்கிலும் இந் நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, இன்றும் நம் நாட்டில் பலர் இந் நோயால் இறந்துகொண்டிருக்கிறார்கள்.

இந் நோயை அதிக அளவில் பரப்பக்கூடிய தெருநாய்களை, நகராட்சியினர் பெருமளவில் அழித்துக்கொண்டிருந்தாலும், மீண்டும் மீண்டும் அவை பெருகிக்கொண்டுதான் இருக்கின்றன. மேலும் நமது நாட்டில் மேலை நாடுகளைப் போல், கட்டாய உரிமம் வழங்கப்படுவதோடு, உரிமம் பெறாதவர்களுக்குக் கடுமையான அபராதமும் விதிக்கப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நாய் வளர்ப்போர் மூன்று மாதத்திற்கு மேற்பட்ட தங்களது நாய்களுக்குத் தவறாமல், அது உயர் ஜாதி நாயானாலும் அல்லது நாட்டு நாயானாலும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். இது ஒன்றுதான் இந்த நோயை முழுமையாக ஒழிப்பதற்கு ஒரே வழி.

எனவே, உங்கள் நாயை மறுமுறை முத்தமிடும்போது மறக்காமல் இதை யோசியுங்கள்.

# ஒரு தாய் மகள் 25

எழுதியது: டேனியல் ஸ்டீல்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

**சென்ற வாரம்**
தன் கணவர் தான் போவதாகச் சொல்லிவிட்டு சென்ற இடத்தில் அவர் இல்லை என்றதும் பேஜ் பலவாறாகச் சிந்தித்துக் கொண்டு இருக்கிறாள். ஆலிஸனுக்கு ஆபரேஷன் நல்ல படியாக முடிவடைந்துவிட்டதாக டாக்டர் சொல்வதைக் கேட்டு பேஜ் கொஞ்சம் ஆறுதலடைந்தவளாக இருக்கிறாள்.

"ஆனால் எங்கே தங்கியிருக்கிறார் என்று தெரியவில்லை. நீங்கள் தயவு பண்ணி பிரஸிடெண்டுக்குப் போன் பண்ணி விசாரியுங்கள். பிராடு எங்கே தங்கியிருக்கிறார் என்று அவருக்குத் தெரிந்திருக்கும். இல்லாவிட்டாலும் கால்.'.ப் விளையாட வரும்போது தகவல் சொல்வார்..." என்றாள் பேஜ்.

"விபத்தைப் பற்றிக் கேட்க வருத்தமாக இருக்கிறது. எல்லாம் நல்லபடி ஆகும். கவலைப்படாமல் இருங்கள். நான் பிரசிடெண்ட்டுடன் பேசிவிட்டு உங்களைக் கூப்பிடுகிறேன்" என்றார் பாலன்ட்டின்.

'தாங்க்யூ' என்று சொல்லிவிட்டுப் பேஜ் காத்திருந்தாள்.

ஒரு மணி நேரம் கழித்துத்தான் பாலன்ட்டின் அவளைக் கூப்பிட்டார்.

"பிரசிடெண்ட்டுடன் பேசிவிட்டேன். பிராடு நேற்று அங்கே வரவில்லையாம். 'ஞாயிற்றுக்கிழமை என்னுடன் கால்.'.ப் விளையாட வருவதாகவும் பேச்சு இல்லையே?' என்கிறார் பிரசிடென்ட். மறுபடி ஏதாவது தகவல் கிடைத்தால் உங்களைக் கூப்பிடுகிறேன்" என்றார்.

போனை மெதுவே திரும்ப வைத்தாள் பேஜ்.

பிராடு கிளீவ்லாந்துக்குப் போகவில்லையா? பின்னே எங்கே போனார்? பிரசிடெண்ட்டுடன் கால்.'.ப் விளையாடப் போவதாக ஏன் சொல்ல வேண்டும்?

பகல் இரண்டு மணி



க்ளோவை இன்ட்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்கு அழைத்து வந்திருப்பதாகத் தகவல் வந்தது. தாரென்ஸன் போய்ப் பார்த்தான்.

அப்பப்பா! எத்தனை கம்பிகள், சிம்புகள்; ட்யூப்கள்! இன்னும் கட்டுப் போடவில்லை. க்ளோ அரை மயக்கத்தில் இருந்தாள். ஆனால் அப்பாவை அடையாளம் கணடு கொண்டாள் என்பது அவள் கண்களில் தெரிந்தது. டாக்டர்கள் நம்பிக்கையாகவும் திருப்தியாகவும் சொல்வதைக் கேட்டு ஆறுதலடைந்தவனாகத் திரும்பி வந்தான் தாரென்ஸன்.

"எப்படி இருக்கிறாள்?" என்று பேஜ் கேட்டாள்.

"அந்தக் கம்பிகளையும் ட்யூப்களையும் பார்க்கவே பயமாயிருக்கிறது. ஆனால் கண்டத்திலிருந்து தப்பி விட்டாள். கட்டுப் போடவில்லை இன்னும். இந்த மட்டோடு விட்டாரே என்று கடவுக்கு நன்றி சொல்ல வேண்டும்." என்றான் அவன்.

பேஜிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. "கடவுள் இந்த மட்டோடு விட்டாரே என்று எல்லாரும் சொல்கிறார்கள். அந்த மட்டில் கூட ஏன் நடக்க வேண்டும்? நேற்று இதே நேரத்துக்கு ஆலிஸன் எப்படி இருந்தாள்? சிரித்துக்கொண்டு, குதித்துக் கொண்டு, என்னோட ஸ்வெட்டர் வேண்டுமென்று தொணதொணத்துக் கொண்டு எப்படிப்பட்ட சந்தோஷத்தில் இருந்தாள்? இருபத்து நாலு மணி நேரத்துக்குள் ஏன் இப்படி ஆக வேண்டும்?"

"சரி, சரி, வருத்தப்படாதே" என்று அவள் கைகளை ஆறுதலாக தட்டிக் கொடுத்துவிட்டுக் கொஞ்ச நேரம் அவளருகிலேயே உட்கார்ந்திருந்தான் தாரென்ஸன்.

மூன்று மணியாயிற்று.

"நான் வீட்டுக்குப் போய் என் பிள்ளைகள் நிக்கையும் பிஜானையும் அழைத்து வரலாமென்றிருக்கிறேன். பிஜான் ரொம்ப வருத்தத்தில் இருக்கிறான் என்று நிக் சொன்னான். க்ளோவைப் பார்த்தால் கொஞ்சம் ஆறுதலடைவான். ஏதாவது அவசரமானால் எனக்கு வீட்டுப் போன் செய்" என்று கூறிவிட்டுத் தாரென்ஸன் புறப்பட்டான்.

தன் அம்மாவுக்குப் போன் செய்து சொல்லலாமா என்று பேஜ் நினைத்தாள். ஆனால் கணவனுக்குச் சொல்லுமுன் அம்மாவுக்குச் சொல்வது சரியென்று படவில்லை.

மறுபடியும் பிராடைப் பற்றியே அவள் எண்ணம் திரும்பியது.

அவர் எங்கேதான் போயிருப்பார்? பிரசிடெண்ட்டுடன் கால்.'.ப் ஆடப் போவதாகச் சொல்லிவிட்டு வேறு எங்கேதான் போனார்?

அவள் மனத்தில் விபரீதமான சந்தேகங்கள் முளைவிட்டன.

பிராட் எப்போது போன் செய்வான். ஆலிஸனைப் பற்றி எப்போது தகவல் சொல்வார்கள் என்பது எதுவும் தெரியாதவளாகக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் பேஜ்.

மேலும் ஒரு மணி நேரம் சென்ற பின், ஆலிஸனைப் பற்றிய தகவல் வந்தது. ஆபரேஷன் நல்லபடி முடிந்திருக்கிறது என்றும், ஆனால் இன்னும் பலமுறை இரத்தம் செலுத்தும்படி இருக்கும் என்றும் சொன்னார்கள்.

'நல்லகாலம், எனக்கும் ஆலிஸனுக்கும் ஒரே இரத்த குரூப். கடவுள் காப்பாற்றினார்' எனறு நினைத்துக் கொண்டவளாகப் பேஜ் இரத்த தானம் செய்தாள். ஒரு பைன்ட் இரத்தம் அவளிடமிருந்து எடுத்துக்கொண்டார்கள்.

வெயிட்டிங் அறைக்குத் திரும்ப வருவதற்கும் பிராடிடமிருந்து போன் வருவதற்கும் சரியாக இருந்தது.

"என்ன இது, பேஜ்? நீ எங்கேயிருந்து பேசுகிறாய்?" என்று திகைப்புடன் கேட்டான் பிராட். வீட்டுக்கு அவன் போன் செய்தபோது, ஜேன் அவனிடம் பேஜ் இருக்கும் டெலிபோன் எண்ணை மட்டும்தான் சொல்லியிருக்கிறாள் என்று புரிந்தது. அது ஆஸ்பத்திரி என்பதைச் சொல்லவில்லை.


"என்னமோ மெரீன் ஜெனரல் ஆஸ்பத்திரி என்கிற மாதிரி காதில் விழுந்தது. நீ ஆஸ்பத்திரியிலா இருக்கிறாய்?" என்று மீண்டும் கேட்டான்.

"ஆமாம்...." என்றாள் பேஜ். களைப்பும் சோர்வும் அவளைத் திண்டாட வைத்தன. அவற்றைச் சமாளித்துக் கொண்டு, வார்த்தைகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பேசுவதே பெரும்பாடாக இருந்தது. ஒரு நிமிடம் திணறிய பின், "டியர் - நம்ம பேபி.." என்று சொல்லத் தொடங்குமுன் அழுகை வந்துவிட்டது.

"என்ன பேஜ்? என்ன ஆச்சு? உனக்கு ஒன்றுமில்லையே" என்றான் பிராட். ஏதாவது அபார்ஷன் ஆகியிருக்குமோ? ஏணியில் ஏறிக் கீழே விழுந்து காலை முறித்துக்கொண்டிருப்பாளோ? பல பித்துக்குளித்தனமான எண்ணங்கள் அவனைக் குழப்பின.

(தாய் தொடர்வாள்.....)

## பள்ளிகளில் நடைபெறும் ஆபாச நடனம்



அமெரிக்கப் பள்ளிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்போது பொழுதுபோக்குக்காக நடன நிகழ்ச்சிகளும் நடைபெறுவது வழக்கம். ஆனால் இந்த நடன நிகழ்ச்சிகள் பெரும்பாலும் ஆபாசமாக உள்ளன. எனவே இவை பள்ளி மாணவ-மாணவியர் மனதில் தவறான எண்ணத்தை உருவாக்குவதாகப் பெற்றோர் குற்றம் சாட்டி வந்தனர். இதனை ஏற்று அமெரிக்காவின் டெக்சாஸ் மானில அரசு, பள்ளி, கல்லூரிகளில் நடன நிகழ்ச்சி நடத்தத் தடை விதித்திருக்கிறது. இந்தத் தடை உத்தரவுக்கு ஒரு தரப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். சமீபத்தில் வெர்ஜீனியா மாநில அரசு மாணவ-மாணவிகள் உள்ளாடை வெளியே தெரியும் வகையில் பேண்ட் அணியத் தடை விதித்தது. ஆனால் கடும் எதிர்ப்புக் காரணமாக அந்தத் தடை வாபஸ் பெறப்பட்டது. அதேபோன்று ஆபாச நடன நிகழ்ச்சிகளுக்கு மீண்டும் அனுமதி



## முகமூடி தீவிரவாதிகள்

பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் நேற்று கம்யூனிஸ்டு கொரில்லாக்கள் முகமூடி அணிந்துகொண்டு பேரணி நடத்தினார்கள். அமெரிக்காவுக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

அமெரிக்கத் துருப்புகள் பயிற்சி முகாம் நடத்துவதைக் கண்டித்தும் எச்சரிக்கை செய்தும் இந்தப் பேரணி நடைபெற்றது. "ஈராக்கில் இழந்த அமெரிக்க உயிர்கள் போதாதா? எங்களிடமும் அமெரிக்கப் படையினர் சாக வேண்டுமா?" என்று பேனர் எழுதி ஊர்வலத்தில் எடுத்துச் சென்றனர்.

இங்கே நிற்பவர் ஹாங்காங் நடிகை தெரசா சியூங் ஆவார். அவர் சுவரில் ஏதோ கிறுக்கி கொண்டிருக்கிறார் என நினைக்க வேண்டாம். 28/03/2005 அன்று நடந்த ஹாங்காங் சினிமா விருது வழங்கும் விழாவில் தெரசா கலந்துகொண்டார். அங்கு வந்திருந்த நடிகர், நடிகைகள் கையெழுத்துப் போடுவதற்கு பெரிய போர்டு ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதில்தான் தெரசாவும் கையெழுத்துப் போட்டுக்கொண்டிருக்கிறார்.

"கலர் பூக்கள்" என்ற படத்தில் சிறப்பாக நடித்திருந்த தெரசாவுக்கு 'சிறந்த புதுமுகம்' என்ற விருது இந்த விழாவில் வழங்கப்பட்டது.



## நடிகையின் கிறுக்கல்

# 49



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

### ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

நீண்ட காற்சட்டை அணிவதனையும், சட்டை அணிவதனையும் பல சந்தர்ப்பங்களில் நான் தவிர்த்து விடுவேன். நான் ஆகன்ஸாஸின் அழகு ராணியல்ல. நிச்சயமாக தனது மகன் காதலிக்கும் பெண் அப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று பில்லின் தாயாரும் எதிர்பார்க்கப் போவதில்லை. அவரது வாழ்வில் வேறு என்னதான் இருக்கிறது. அவர் காலையில் நேரகாலத்தோடு எழுந்துகொள்வார். கடும் சிவப்பு நிற உதட்டுச் சாயத்தைப் பூசிக்கொள்வார். அதன் பின்னர் கதவுக்கருகில் சென்று வெளியே நோட்டமிட்டுக்கொண்டிருப்பார். எனது நாகரீகப் பாங்கு அவரைக் குழப்பமடைய வைத்ததுடன், எனது அமெரிக்க நாட்டுக் கருத்துக்களையும் பில் லின் தாயார் விரும்பவில்லை.

வெர்ஜீனியாவின் 03ஆவது கணவருடனான எனது உறவு முறை அல்லது நட்பு மிகவும் சுலபமானதாக இருந்தது. ஜெப் டிவயர் எனும் பெயருடைய அவர், நட்புக் கரம் நீட்டினார். அவருக்குச் சொந்தமான அலங்கார நிலையமொன்று இருந்தது. ஆகவே, அவர் வெர்ஜீனியாவை மகாராணியைப் போன்று நடத்தினார். நாம் சந்தித்த முதல் தினமே அவர் எனக்கு மிகவும் கருணை காட்டினார். எனது மாமியாருடன் நல்லுறவினைப் பேணிக்கொள்வதற்கு அவர் எனக்கு ஆதர வளிப்பதாகக் கூறினார். அதற்காகச் சிறிது கால அவகாசத்தையும் என்னிடம் வேண்டினார்.



'ஓ..... வெர்ஜீனியாவையிட்டு கவலைப்பட வேண்டாம். பழகப் பழக எல்லாம் சரியாகிவிடும். இரண்டு பலம் வாய்ந்த பெண்கள் ஒன்று சேர்வது என்பது மிகவும் கடினமான காரியம்தான்' என்று அவர் கூறினார்.

கடைசியில் நானும் வெர்ஜீனியாவும் இருவருக்குமிடையில் உள்ள வேற்றுமையினை அறிந்து புரிந்து எங்களுக்கிடையில் மரியாதை செய்து கொண்டு மிக ஆழமான ஒட்டுறவினை எற்படுத்திக் கொண்டோம். நாம் இருவருமே ஒரே மனிதரை பில்லை நேசித்தோம்.

ஆகன்ஸாவிலுள்ள வீட்டுக்கு வந்த பில் பெயட்டவில் எனும் இடத்தில் உள்ள சட்டக் கல்லூரியில் கற்பிக்கும் பணியினைத் தேர்ந் தெடுத்தார். நான் கேம்பிரிட்ஜுக்கு சென் மாட்டின் ரைட் எடெல்மன் என்பவரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'சிறுவர் பாதுகாப்பு நிதியத்தில்' பணியாற்றச் சென்றேன். ஓர் பழைய வீட்டின் மேல் மாடியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டேன். முதற் தடவையாக நான் அங்கே தனியாக வசித்தேன். நான் இந்த வேலையை மிகவும் விரும்பினேன். நாடு முழுதும் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு சிறுவர்களுக்கும், இளம் பராயத்தவருக்கும் உள்ள பிரச்சினைகள், தாக்கங்கள் ஆகியவற்றினை ஆராய வேண்டியிருந்தது. தென் கரோலினாவில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நடுத்தரக் கைதிகளின் வசதி களைத் துப்புத் துலக்குவதற்கு நான் உதவினேன். சிறு குற்றங்களுக்காக சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 14 வயதையுடைய இளம் பரா யத்தவரைப் பேட்டி கண்டேன். ஏனையோர் பாரிய குற்றங்களைப் புரிந்த கைதிகளாவர்.

எப்படித்தான் இருந்தாலும் இளம் பராயத்துக் குற்றவாளிகளைப் பாரிய குற்றங்களைப் புரிந்த கைதிகளுடன் ஒன்றாக அடைத்து வைப்பது முறை யான காரியமல்ல. நாம் அவர்களை வேறுபடுத்தி, தகுந்த பாதுகாப்பினையும் வழங்கி. உடனடியாக வழக்கு விசாரணைகளை மேற்கொள் வதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டோம்.

நியு பெட்பார்ட் பகுதியில் நான் வீட்டுக்கு வீடு சென்று குழப்பங்களுக்கான காரணிகளைப் பட்டிய லிட்டு புள்ளி விபரங்களை எடுப்பதற்கு முயன்றேன். நாம் பாடசாலை செல்லும் வயதையுடைய பிள்ளைகளைக் கணக்கெடுத்து அவர்களுள் பாடசாலைக்குச் செல்பவர்கள் அல்லது பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளோர் எத்தனை பேர் என்பதனைக் கண்டறிந்தோம். பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் எங்கே என்று ஆராய்ந்தோம். கண்பார்வை இன்மை, காது கேளாமை போன்ற காரணங்களினால் சில பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை என்பதனைக் கண்டறிந்தேன். இது எனது உள்ளத்தினை மிகவும் துன்புறுத்தியது. மேலும், நான் கண்டறிந்த ஓர் விடயம் யாதெனில், பெற்றோர் வேலைக்குச் செல்வதன் காரணமாக தமது தம்பி, தங்கைமாரைப் பராமரிக்கும் பணியில் பாடசாலை செல்லும் வயதிலுள்ள பிள்ளைகள் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஒரு மீனவரின் மகளை சக்கர நாற்காலியில் கண்டேன். பாடசாலை செல்வதற்கு தனக்கு மிகவும் ஆசையாக உள்ளது என்று அவள் என்னிடம் கூறினாள் ஆனால், அவளால் பாடசாலைக்குக் செல்ல முடியாது. ஏனெனில் அவளால் நடக்க முடியாது என்பதனை அவளும் அறிந்திருந்தாள்.

எமது ஆய்வின் முடிவுகளை காங்கிரஸிடம் சமர்ப்பித்தோம். இரண்டு வருடங்களின் பின்னர், எமது அமைப்பினதும். பிரபல சட்டத்தரணிகளினதும் வற்புறுத் தலின் காரணமாக அனைத்து வலது குறைந்தோர்க்கும் கல்வி எனும் சட்டத்தினை காங்கிரஸ் அமுல்படுத்தியது. பொதுப் பாடசாலைகளில் அவர்களுக்குக் கல்வி புகட்டப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

எனது பணியில் நான் திருப்தியடைந்திருப்பினும், நான் ஒருவித தனிமையை உணர்ந்தேன். அடிக்கடி பில்லின் ஞாபகம் ஏற்பட்டது. கோடை காலத்தில் ஆகன் ஸாஸ், வொஷிங்டன் DC ஆகிய இடங்களிலும் இரண்டு சட்டப் பரீட்சைகளில் தோற்றினேன். ஆனால், என் உள்ளம் ஆகன்ஸாஸிலேயே இருந்தது. ஆகன்ஸாஸில் நான் சித்தியடைந்திருப்பதில் பதையும் DC தோல்வியுற்றி ருப்பதையும் உணர்ந்தேன். எனது பரீட்சையின் புள்ளிகள் எனக்கு எதையோ உணர்த் தின. எனது சம்பளத்தில் பெரும் பகுதியை தொலைத் பேசிக் கட்டணத்திற்கே செலவழித்துள்ளேன். நன்றி வழங்கும் வைபவத்திற்கு பில் வருகை தந்திருந்ததானது எனக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

தான் கற்பிப்பதையும், வாடகை வீட்டில் தங்கியிருப்பதையும் மிகவும் விரும்புவதாகவும் பில் என்னிடம் தெரிவித்தார். ஆனால் அவரை அரசியல் அழைத்தது. ஆகவே, அவர் ஆகன்ஸாஸின் ஒரே ஒரு குடியரசுக் கட்சிக்காரரான ஜோன் போல் ஹெமர்ச்மிட்டுக்கு எதிராகப் போட்டியிட முனைந்தார். ஆகன்ஸாஸைச் சேர்ந்த வேறொரு ஜனநாயகக் கட்சியாளரை அவரால் காண முடியவில்லை. நீங்கள் இந்தப் பந்தயத்திற்கான முடிவினை எடுங்கள் என்று நான் பில்லிடம் கூறிவிட்டேன். போட்டியிடுவதற்கு அவர் தீர்மானித்தாரானால், அது எதைக் காட்டுகிறது என்பதனை என்னால் நிச்சயமாகக் கூற முடியவில்லை. 1973 நத்தாருக்குப் பின்னர் நான் ஆகன்னஸாஸுக்கு வருவதற்கு ஒப்புக்கொண்டேன். அதன் பின்னர் எங்கே தலைமை வகித்துப் போட்டியிடுவது என்பதனை தீர்மானித்துக்கொள்வோம் என முடிவெடுத்தோம். நான் நியுஇயர்ஸுக்கு வந்தேன். காங்கிரஸை வழி நடாத்து வதற்கு பில் முடிவெடுத்தார். குடியரசுக் கட்சியானது வோடர்கேட் சம்பவம் தொடர்பான வெளிப்படையான அவதூறுகளினால் தாக்கப்படக்கூடும் என்று பில் நம்பினார்.

அது மட்டுமன்றி, மிகவும் வலுவான நிலையிலுள்ள ஆதரவாளர்களினால் அக் கட்சிக்குத் தீங்கிழைக்கப்படக் கூடும் என்றும் நம்பினார். சவாலினால் அவர் ஊக்கம் பெற்றார். தனது பிரசாரப் பணிகளை ஒன்றிணைத்தார்.

வொஷிங்டனிலிருந்து கிடைத்த ஓர் அறிவிப்பு என்னை விழித்தெழ வைத்தது. ஜனாதிபதி நிக்சனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான விசாரணைக்குத் தலைமை வகிப்பதற்கு ஜூரிகள் சபையினால் ஜோன் டோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். என்பதே அந்த அறிவிப்பாகும். 1973இல் நாம் யேல் பல்கலைக்கழகத்தில் வைத்து டோரை சந்தித்தோம். அப்போது அவர் நியாயஸ்தராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார்.

(தொடரும்...)

---

*மலை தடை கடந்து*
*புயலிடை எழுந்து*
*உங்களுக்காக*
*ஓர் உரிமை மடல்!*

*உண்மை எதுவென உரத்த குரலெடுத்து*
*உன்னத வழிகாட்டி எழுதும்*
*உரிமை மடல்!*

*இது*
*செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா*
*அவர்கள்*
*இடர் படும் எம் தேசத்து மக்களுக்காக எழுதும்*
*தொடர் மடல்!...*

# உரிமை மடல்... 4



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

### அன்பான எம் தேசத்து மக்களே!

உங்களுக்கு வணக்கம்!.....

உரிமைகளை நீங்கள் பெற வேண்டுமேயானால் அதற்கு முதல் சில உண்மைகளைத் தெரிந்திருக்க வேண்டும்!

நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் விடியலை நீங்கள் காண வேண்டுமேயானால் முதலில் சில வினாக்களுக்கான விடையினைத் தேட வேண்டும்!

உங்களது உரிமைப் போராட்டத்தில் சரியெது?... பிழையெது?.... என்று நீங்கள் உதடு திறக்கவே உரிமையற்றவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்!

மக்களாகிய உங்களது கண்களைக் கட்டிவிட்டு...... திசை எது?.... திட்டம் எது?.... என்று ஒரு தெளிவில்லாத பயணத்தைக் காட்டி...... முடிவில்லாத திசையை நோக்கி.... உங்களை இழுத்துச் செல்வது உங்களது விடுதலைக்கான பாதை ஆகிவிடாது!...

என்னிடம் இருப்பது தளராத நம்பிக்கை மட்டும்தான்!... துயரப்பட்ட என் மக்கள் மீதான முடிவற்ற ஒரு நேசிப்பு மட்டும்தான்!... இந்த நம்பிக்கையும் மக்களாகிய உங்கள் மீதான நேசிப்பும்..... ஒரு தெளிவான பாதையினையும் திசையினையும் அதற்கான திட்டத்தினையும் எமக்கு உருவாக்கித் தந்துள்ளது!

சில உண்மைகளை உங்களுக்குப் பாரிய வைப்பது மட்டுமல்ல.... நீங்கள் தேடும் சில வினாக்களுக்கு விடை தேடுவது மட்டுமல்ல.... உங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கான தெளிவான திட்டத்தினையும் கொண்டதுதான் இந்த உரிமை மடல்!....

ஆகவே,........... எம் இனிய தமிழ் பேசும் மக்களே!..... மீண்டும் ஒரு உரிமை மடலோடு உங்களது உற்சாக வரவேற்போடு உங்களை நான் சந்திக்கின்றேன்!

உங்கள் உறவினர்களையும்.. உற்றவர்களையும்... கொடிய யுத்தத்திற்குப் பலி கொடுத்த காலம் போய்...

வேட்டோசையும் வெடிகுண்டுச் சத்தமும் கேட்டு நீங்கள் அதிர்ந்து போன காலம் போய்......

சமாதானத்திற்கான சூழல் ஒன்று இப்போது சரிப்பட்டு வந்திருக்கிறது... யுத்தத்தின் வடுக்களைச் சுமந்த உங்களுக்கு நிம்மதிப் பெருமூச்சு விட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கருதுகிறேன்!....

அரசியல் தீர்வு நோக்கிய நகர்வுகளுக்கு இது நல்லதொரு அடியெடுப்பு என்று கருதுகிறேன்!

மக்களாகிய உங்களது நலன்களில் அக்கறை கொண்டவர்கள் என்ற வகையில்.... உங்களது விருப்பங்களே எங்களது விருப்பங்களும் என்ற வகையில்.... இந்த அமைதியை ஈ..பி.டி.பி. வரவேற்கிறது!..... இந்தச் சமாதான சூழலை ஈ.பி.டி.பி ஒரு ஆரோக்கியமான சூழல் எனக் கருதி இதை ஆதரித்து நிற்கிறது!...

இதிலிருந்துதான் உங்களது அரசியலுரிமைக்கான இலக்கு நோக்கி நின்று நிதானித்து நகர்ந்து செல்ல வேண்டியுள்ளது.

ஆனால் யுத்தத்தை நடத்துவதில் ஆதாயம் தேடுகின்றவர்கள்... ஆயுதங்கள் மீது மட்டும் மோகம் கொண்டவர்கள்.... நீங்கள் அனுபவிக்கும் அமைதியின் மீது கல்லெறிந்து குழப்பும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளனர்!

கனிந்து வந்திருக்கும் இந்தச் சமாதான சூழலை யுத்தம் என்ற படுகுழிக்குள் தள்ளிவிட எத்தனிக்கின்றனர்!

சமாதான சூழலைக் குழப்புவதற்குக் காரணம் தேடிக் கொண்டிருக்கும் யுத்த மோகம் கொண்டவர்கள் வீதி விபத்துக் களைக் கூட அமைதியைச் சீர்குலைக்கும் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்த நினைப்பதுதான் வேதனைமிக்க நிகழ்வாக இருக்கின்றது.

வீதி விபத்தில் கொல்லப்பட்ட எம் தேசத்தவர்கள் மீது அவர்களுக்கு அக்கறை என்று கூறிவிட முடியாது!... அனுதாபம் என்று கூறிவிட முடியாது!... அதை விடவும் மக்களாகிய உங்களுக்கும் படைத் தரப்புக்கும் இடையில் மோதலை உருவாக்குவதுதான் சம்பந்தப்பட்டவர்களது பிரதான நோக்கமாகும் என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்!

படைத் தரப்பினரை அடிக்கடி சந்திக்கும் புலிகள் அவர்களோடு சிரித்து... மகிழ்ந்து... விருந்துண்டு.... கைகுலுக்கிக்கொள்வதில் நியாயம் இருக்கலாம்!.....

ஆனால் அதே படைத் தரப்பினருக்கும் மக்களாகிய உங்களுக்கும் இடையில் பகைமையுணர்வைத் தூண்டி விடுவதில் மட்டும் புலிகள் குறியாக இருப்பதில் என்ன நியாயம் என்று நான் கேட்கின்றேன்!

படையினரின் வாகனத் தொடரணிகளின் பாதுகாப்போடு புலிகள் தங்களது நீண்ட தூரப் பயணங்களை மேற்கொண்டு வருவதில் நியாயம் இருக்கலாம்!...

ஆனால் அதே படையினரின் வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்துமாறு மக்களாகிய உங்களுக்குப் புலிகள் நெருப்பெடுத்துக் கொடுப்பதில் என்ன நியாயம் என்று நான் கேட்கின்றேன்!

அரச படையினரின் உலங்கு வானூர்திகளில் புலிகள் அங்கும் இங்கும் பறந்து திரிவதில் கூட நியாயம் இருக்கலாம்!....

ஆனால் அதே படையினரின் வாகனங்கள் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்தச் சொல்லிவிட்டு, புலிகள் உங்கள் மத்தியில் மறைந்து நிற்பதில் மட்டும் என்ன நியாயம் என்று நான் கேட்கின்றேன்!....

மக்களாகிய நீங்கள் என்ன பகடைக் காய்களா என்று கேட்கின்றேன்!... படையினரின் எதிர்த் தாக்குதலைத் தாங்கிக்கொள்வதற்கு நீங்கள் என்ன மனிதக் கேடயங்களா என்று நான் கேட்கின்றேன்!...

புலிகள் மட்டும் படைத் தரப்போடு கைகுலுக்கிக் கொண்டு மக்களாகிய உங்களைப் படையினரோடு மோதவிட்டு.... மோதலைத் தூண்டிவிட்டு..... தங்களது அரசியல் இலாபங்களை அறுவடை செய்வதற்கு முனைகின்றார்கள்!

கண் மண் தெரியாத வகையில் கட்டுப்பாடற்ற முறையில் வாகனங்கள் ஓட்டுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல!... உண்மையில் வீதி விபத்துக்கள் இலங்கைத்தீவின் சகல பாகங்களிலும்தான் நடந்து வருகின்றது!

யாழ். நகரில் மட்டுமல்ல.... வடமராட்சியிலும் நடக்கிறது.... வன்னியிலும் புலிக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் நடக்கிறது.... வத்தளையிலும் நடக்கிறது... வீதி விபத்துக்கள் கண்டியிலும் நடக்கிறது... காலியிலும் நடக்கிறது....

வாகனங்களைக் கட்டுப்பாடற்ற முறையில் ஓட்டிச்சென்று அப்பாவிப் பொதுமக்கள் மீது மோதிக்கொள்பவர்கள் அரச படையினர் மட்டுமல்ல..... எம் தேசத்தில் வாழும் பொது மனிதர்களில் சிலரும்தான் அப்படி மோதிக்கொள்கிறார்கள்!.... இந்த விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டியவை என்பது உண்மைதான்!

வீதி விபத்துக்களால் கொல்லப்படுபவர்கள் தமிழர்கள் மட்டுமல்ல... எம் சகோதர இனத்தவர்களாகிய முஸ்லிம் மக்களும்தான் கொல்லப்படுகிறார்கள்!... சிங்கள மக்களும்தான் கொல்லப்படுகிறார்கள்!....

சம்பந்தப்பட்ட வாகனச் சாரதிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தச் சொல்லிக் கோருவதே நியாயம்! அதை விடுத்து வீதி விபத்துக்களை அரசியலாக்கி..... படையினரோடு உங்களை மோதவிட்டு.... அதன் மூலம் ஒரு பதற்றமான சூழலை உருவாக்குவதுதான் அவர்களது நோக்கம்!

அண்மையில் யாழில் நடந்த வீதி விபத்து வேதனைக்குரியது!... ஆனால் கொல்லப்பட்ட ஒரு உயிருக்காக இன்னொரு உயிரைப் பலி கொடுத்தது விவேகமான செயல்தானா என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்! அந்த ஒரு உயிருக்காக இன்னும் பல பொது மக்களைப் பாதிப்புக்கு உள்ளாக்க நிர்ப்பந்தித்தது நியாயமா என்று கேட்கின்றேன்!....

ஆகவே, மக்களாகிய நீங்கள் இது குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும்! நியாயமான உங்களது எந்தப் போராட்டங்களையும் ஆதரிப்பதற்கு ஈ.பி.டி.பி தயாராக இருக்கின்றது. ஆனால் வன்முறைகளைத் தூண்டிவிடும் புலிகளின் சுயலாப அரசியல் முயற்சிகளுக்கு நீங்கள் தொடர்ந்தும் துணை போகாமல் இருக்க வேண்டும்!....

மக்களின் பெயரால் புலிகளால் முன்னெடுக்கப்படும் வன்முறைகளுக்கு மக்கள் போராட்டம் என்ற வர்ணம் தீட்டும் முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

ஆகவே........இந்தச் சமாதான சூழலை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும்!

நீங்கள் அனுபவிக்கும் சமாதான வெளிச்சத்தை இருண்ட யுகத்திற்குள் தள்ளிவிட நினைக்கும் எந்தக் காரியங்களுக்கும் நீங்கள் துணை போகாமல் இருப்பதே உங்களது கடமை! இதுவே சமாதான சூழலைப் பாதுகாப்பதற்கு நீங்கள் செய்யும் முதல் பணியாகும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்!....

மக்களாகிய உங்களையும் படைத் தரப்பினரையும் மோத விடுவதில் அவர்களுக்கு என்ன இலாபம் என்று உங்களில் சிலர் கேட்கலாம்!

அதற்கான விடைகள் உங்களை விழிப்படையச் செய்யும் என்றால்.....

நான் கூறும் உண்மைகள் சமாதானச் சூழலை நீங்கள் பாதுகாக்க உதவும் என்றால்....

எனது சொற்கள் ஒவ்வொன்றும் உங்கள் உரிமைகளை எட்டும் படிக்கற்கள் ஆகும் என்றால்..

கருத்து உங்களைப் பற்றிக் கொள்ளும்.... மக்கள் சக்தி வரலாற்றை வெற்றி கொள்ளும்!...

என்ற நம்பிக்கைகளோடு மீண்டும் ஒரு உரிமை மடலோடு உங்களைச் சந்திப்பேன்!....

சில வரலாற்று நிகழ்வுகளோடு சந்திப்போம்!...

***திட்டங்கள் எங்களது!..... தீர்மானம் உங்களது!.....***

***தேசத்திற்காகத் தியாகங்களை ஏற்போம்!...***

***என்றும் நாம் மக்களுக்காக!....***

*பிரியமுடன்*

செயலாளர் நாயகம்

**தோழர் டக்ளஸ் தேவானந்தா!...**

**நன்றி :- இதய வீணை**

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## சிறையுடைப்புக்கான முன்னோடித் தயாரிப்புகள்

லெபனானில் ஆயுதப் பயிற்சி பெற்ற டக்ளஸ் தேவானந்தாவின் மூளையில் பாலஸ்தீனப் போராளிகளின் தாக்குதல் உத்திகளும் எதிரிகளிடம் பிடிபடாமல்" தப்பியோடும் தந்திரோபாயங்களும் மின்னலாகப் பளிச்சிட்டுக்கொண்டிருந்தன. முதலில் சக தமிழ்க் கைதிகளுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். பின்னர் பெரும்பாலான கைதிகளை அதற்குத் தயார்ப்படுத்த வேண்டும். சிறையுடைப்புக்குத் தேவையான ஆயுதங்களைத் திரட்ட வேண்டும். ஆயுதங்களைச் சிறைக்குள் கடத்திக் கொண்டுவருவதென்பது சாதாரண விடயமல்ல. இரண்டொரு ஆயுதங்களாவது இருந்தால்தான் சிறைக்காவலர்களை மடக்க முடியும். எல்லாவற்றுக்கும் மேலாக திட்டம் இரகசியமாக வைக்கப்பட வேண்டும். சிறை வாழ்க்கையினால் மனம் சோர்ந்துபோன சில கைதிகளும் உள்ளே இருந்தனர். சிறைக்குள்ளேயே எட்டப்பர்கள் இருந்துவிட்டால் எல்லாமே அம்பலமாகிவிடும். முதலில் வரதராஜப் பெருமாள், பனாகொட மகேஸ்வரன், மாணிக்கதாசன் போன்ற இளைஞர்களோடு திட்டம் பற்றிக் கலந்து பேசினார் டக்ளஸ் தேவானந்தா. இவர்களிடமிருந்து பச்சைக் கொடி காட்டப்பட்டதுமே ஏனைய தமிழ்க் கைதிகளை மனோரீதியாகத் தயார்ப்படுத்த வேண்டும். இதற்கான வேலைகளில் டேவிற் ஐயா, டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப்பெருமாள், மு.நித்தியாநந்தன், ஆகியோர் ஈடுபட்டனர். சக கைதிகளை நாடி பிடித்துப் பார்த்ததில் பெரு வெற்றி கிட்டியது. ஒரு சிலர் அச்சமும் அவநம்பிக்கையும் தெரிவித்தனர். அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. "உயிர் மீது ஆசையிருந்தால் வாயை மூடிக்கொண்டிருங்கள். ஏதாவது தகவல் வெளியில் போனால் உங்களுக்கு நடப்பது வேறு." "அண்ணை, தோல்வியடைந்தால் என்ன செய்வது?" என்று கேட்டார் ஒருவர். "வாயைப் பொத்திக் கொண்டிரு. நீயா இந்த வேலைகளைச் செய்யப் போகிறாய்?" எனத் சீறினார் மற்றொருவர்.

பல்வேறு தமிழ்க் குழுக்களைச் சார்ந்த இளைஞர்கள் உள்ளேயிருந்தாலும் பெரும்பாலானோர் சிறையுடைத்துத் தப்பிச் செல்லும் ஒரே நோக்கில் இருந்ததால் ஐக்கியப்பட்டு நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டனர். மேல் மண்டபச் சிறையில் இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து, சிறைக் காவலர்களை மடக்கி அவர்களிடமிருந்து திறப்புகளைப் பறித்து, ஏனைய சிறைக்கூடங்களையும் திறந்து எவ்வாறு அனைவரையும் தப்ப வைப்பதென

**பல்வேறு தமிழ்க் குழுக்களைச் சார்ந்த இளைஞர்கள் உள்ளேயிருந்தாலும் பெரும்பாலானோர் சிறையுடைத்துத் தப்பிச் செல்லும் ஒரே நோக்கில் இருந்ததால் ஐக்கியப்பட்டு நடவடிக்கையை மேற்கொள்ளத் திட்டமிட்டனர். மேல் மண்டபச் சிறையில் இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து, சிறைக் காவலர்களை மடக்கி அவர்களிடமிருந்து திறப்புகளைப் பறித்து, ஏனைய சிறைக்கூடங்களையும் திறந்து எவ்வாறு அனைவரையும் தப்ப வைப்பதென ஆராய்ந்துகொண்டிருந்தனர்.**

ஆராய்ந்துகொண்டிருந்தனர். அப்போதெல்லாம் மட்டக்களப்புச் சிறைக்குள் சுமார் பதினைந்து சிறைக் காவலர்கள் பாதுகாவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர். இந்தச் சிறைக் காவலர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதில்லை. மேல்மாடி மண்டபச் சிறைக்குக் காவலாக ஒரு சிறைக் காவலர் இருப்பார். 'ஷிப்ற்' அடிப்படையில் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர். கீழே சிறைக் கூடங்களுக்கு காவலாக மேல் மாடிக்கு ஏறிச் செல்லும் கீழ் மாடிப் படியில் இன்னுமொரு

*(அரசியல் தொடர்)*

சிறைக்காவலர் இருப்பார். சிறைச்சாலை வெளிப்புறக் கதவருகே மூன்று சிறைக் காவலர்கள் இருப்பார்கள். தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கூடத்துக்குச் சமீபமாக சிறைக்குள்ளேயே ஆஸ்பத்திரி இருந்தது. இங்கு இராமநாதன் என்ற இளைஞர் வயிற்றில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களோடு நடமாட முடியாத நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவர் குச்சவெளிப் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தின் போது காயங்களுடன்கைது செய்யப்பட்டவராவார். மனித உரிமைப் போராளியென மதிக்கப்பட்டவரும் 'முறிந்த பனை' (BROKEN PALMYRAH) என்ற நூலின் இணையாசிரியர்களில் ஒருவருமான டாக்டர். ராஜினி திரணகமவின் சொந்தச் சகோதரியான நிர்மலா நித்தியானந்தனும் மட்டக்களப்புச் சிறையின் மகளிர் பிரிவில் அடைக்கப்பட்டிருந்தார்.

வெளியிலிருந்து குணசேகரனும் பரமதேவாவும் சிறைக்குள்ளிருக்கும் தமிழ் இளைஞர்களோடு அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி, சிறையுடைப்புக்குத் தக்க தருணம் பற்றியும் சிறைக் காவலர்களை மடக்குவது




பற்றியும் ஆலோசித்தனர். நாட்கள் செல்லச் செல்ல உள்ளேயிருக்கும் இளைஞர்கள் சிலர் சிறையுடைப்புச் சாத்தியமற்றது 'என அவநம்பிக்கைப்படத் தொடங்கினர்.

மேல் மாடியிலுள்ள குளியலறை ஜன்னலூடாகப் பார்த்தால் சிறைக்கு வெளியே நடப்பதைப் பார்க்க முடியும். அப்போது சிறைச்சாலை வளாகத்தைச் சுற்றி ஆயுதப் படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. மாறாகப் பாதுகாப்புக் கருதி ரோந்து நடவடிக்கைகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படையினரெனத் தனித்தனியாக வாகனங்களில் அடிக்கடி ரோந்து சென்று பாதுகாப்பைப் பலப்படுத்துவதாக நினைத்துக்கொண்டனர். பதினைந்து

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


நிமிடங்களுக்கு ஒரு தடவை வீதி ரோந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது.

டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப்பெருமாள், புளொட் மாணிக்கதாசன், பரந்தன் ராஜன் ஆகியோர் அடிக்கடி கள நிலைமைகளை ஆராய்ந்தனர். பனாகொட மகேஸ்வரன், மாணிக்கதாசன் போன்றோர் "இனியும் பொறுக்க முடியாது. காவலர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிச் செல்வோம்" என்றனர். டக்ளஸ் தேவானந்தா சொன்னார். "எந்தவொரு காரியத்தையும் நாம் இலேசாக முடிந்துவிடுமென நினைக்கக் கூடாது. சிறையுடைப்பென்பது சாதாரண விடயமல்ல. நாம் தப்பிச் செல்ல எடுக்கும் முயற்சி சிறிது பிசகினால் கூட, மோசமான உயிரிழப்புகள் ஏற்படும். சிறைக் காவலர்களை மடக்குவதில் சிறிது தவறினால் போதும். உடனே விரைந்து வரும் படையினர் சிறையிலிருந்து தப்பிச் செல்ல முனைந்தார்களென்று கூறி எம்மனைவரையும் சுட்டுத் தள்ளிவிடுவார்கள். தப்பிச் செல்வதே எமது இலக்கு. சூடு பட்டுச் சாவதல்ல. எனவே காலம் கடந்தாலும் உள்ளே சிறைக் காவலர்களை மடக்கக் கூடிய சக்தியை நாம் பெற வேண்டும். வெளியேறியவுடன் படையினரின் கைகளில் சிக்காமல் தப்பிச் செல்லவும் வேண்டும். இதற்கு வெளியே வாகனங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும். யாருக்கும் தெரியாமல் மட்டக்களப்பை விட்டு நாம் விரைவாகவே வெளியேறவும் வேண்டும். எப்படிப் போவது? எப்போது போவது? எப்படி எதிரிகளில் கண்களில் படாமல் பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பிச் செல்வது? இவை பற்றியெல்லாம் சரிவரத் திட்டமிட வேண்டும்."

கேட்டுக்கொண்டிருந்த பனகொட மகேஸ்வரனுக்குக் கோபம் வந்துவிட்டது. "தப்பிச் செல்வது பற்றி நாம் கதைக்கத் துவங்கியே இப்போது ஒரு மாதம் கடந்து விட்டது. நீங்கள் வெறுமனே பேசிக்கொண்டிருங்கள். நான் பின்பக்க ஜன்னலூடாக தப்பிச் செல்லப் போகிறேன்" என்றார்.

வரதராஜப் பெருமாள் கேட்டார், "தப்பிச் செல்லும்போது பிடிபட்டால் மீண்டும் சிறைக்கு வந்து சேருவீர்களென்று நினைக்கிறீர்களா?" எனக் கேட்டார். தேவானந்தா குறுக்கிட்டார். "நீங்கள் இங்கு திரும்பி வருவீர்களோ அல்லது உங்களை இராணுவம் சுட்டுக் கொல்லுமோ எமக்குத் தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். எம்மனைவருக்கும் பலத்த பாதுகாவல் போடப்படும். அல்லது வேறு பாதுகாப்பான சிறைக்கு மாற்றப்படுவோம். எமது நோக்கம் சிறையிலிருந்து தப்பிச் செல்வதேயொழிய; மீண்டும் பிடிபட்டுச் சிறைக்கு

(தொடர்ந்து வடியும்....)




வணக்கம்! வணக்கம்!! வணக்கம்!!!

என்னதான் சமாதானம் பேசினாலும் படுகொலைகளுக்கு மட்டும் குறைவேயில்லை. எமதர்மன் எப்போது தன்ர தூக்குக் கயிறைத் துப்பாக்கியாக மாற்றினானோ தெரியேல்லை. இப்போதெல்லாம் படுகொலைகள் அதிகரித்து வருகிறது. எமதர்மனின் சபைக்குப் பிணங்களை ஏற்றுமதி செய்கின்றவர்களும் நல்ல வருமானம் பார்க்கிறார்கள். ஏகத்துக்குத் துப்பாக்கியும் கையுமாக, அடுத்து சாகப்போகிறவனின் ஜாதகத்தைக் கழுத்தில் தொங்கப் போட்டுக்கொண்டு, இனந் தெரியாதவனாய், தனக்கு மட்டும் இனங்காட்டிக்கொண்டு கொலைகாரன் அலைகிறான். எமனுக்குப் பக்கவாதம் வந்து படுக்கும் வரை இனந் தெரியாவதனின் மனித வேட்டை தொடரத்தான் போகிறதோ.

***சின் :- ஏப்ரல் 18ஆம் திகதி திருநெல்வேலியில தீபாவளி மாதிரி ஏதாவது திருவிழா நடக்க இருக்குதோ?.***

**மன் :-** இப்போது பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிற முகாமையாளரை அசுரத்தனமானவராகவும் அவர் இதுவரை செய்த சேவைகளைக் கொடூரமானதாகவும் அனுபவித்தவர்களுக்கு ஒருவேளை தீபாவளியாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை அது சாதாரண இடமாற்றந்தான். புதுசாப் பதவியேற்க இருக்கிற நியூட்டன் ஜெய்நாதனாவது மக்களுக்குப் பிடிச்ச மாதிரிப் பணியாற்றுவார் என்று நம்புகிறேன்.

***சின் :- முன்னாள் முகாமையாளர் பதவி இறக்கப்பட்டு இப்ப நியமிக்கப்பட்டிருக்கிற வங்கியின் ஊழியர்கள், அவர் அங்கு வருவதை விரும்பவில்லை எண்டும் ஒரு கேள்வி. நிலைமை தலைகீழா மாறிவிட்டுது....... உதவி வழங்குவதாக உறுதியளித்த பல நாடுகள் இன்னும் ஒரு சதங் கூட வழங்கவில்லையாமே......***

**மன் :-** இதைத்தான் வெளிநாட்டு உதவியில் ஒரு சதங் கூடக் கிடைக்கவில்லை எண்டு ஜனாதிபதி சொன்னதாக ஊடகங்கள் செய்தி பிரசுரித்தன. இதை தலை கால் விளங்காம எதிர்க்கட்சி அரசியலாக்கியது. இது பழைய கதைதான். அதில சில நாடுகள் வாக்குறுதிகளோடை நிண்டுவிட்டது எண்டது உண்மைதான். சரி, கிடைச்ச உதவிகளுக்கு என்ன நடந்தது? எப்ப பொதுக் கட்டமைப்பு அமைக்கிறது? எப்ப இந்த உதவிகள் சனத்துக்குக் கிடைக்கிறது?

***சின்:- சனத்துக்குத் கிடைக்கிறது இருக்கட்டும். சம்பந்தப்பட்டவை ஒரு இணக்கத்துக்கு வந்தாப் போதுமெண்ட அளவிலதான் நிலமை இருக்குது... கிழக்கில புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி அமைச்ச விசாரணைக்குழு எந்தளவில் இயங்குது?***

**மன் :-** ம்.....ம்...அவையின்ர விசாரணைகள் இப்பதான் ஆரம்பிச்சிருக்கு. ஆனால் கொம்ளைன் செய்யத்தான் ஆக்களில்லையாம். அவ்வளவு ஏன், புலிகள் கூடத் தங்கட, பிரச்சினைகளை முறையிடயில்லையாம் எண்டால், இவை என்னத்தை விசாரிக்கிறது.? இது எப்பிடி இருக்கெண்டால் புண்ணைத் தேடி 'மருந்து போன மாதிரி இருக்கு. இதே விசாரணையை சமாதான ஒப்பந்த காலத்தில சுட்டுக் கொல்லப்பட்ட ஏனையவர்களுடைய மரணம் சம்பந்தமாகவும் விசாரிச்சால் நல்லது. அப்பிடி ஒரு விசாரணை ஆரம்பிக்கப்பட்டால் பல முறைப்பாடுகள் வர வாய்ப்பிருக்கு. ஆகவே உந்த விசாரணைக் குழுவிடம் எமது கேள்வி, 'நீங்கள் நியாயமான விசாரணைகள் நடத்த முற்படுவீர்களானால் கடந்த மூன்று வருடங்களுக்குள் நடைபெற்ற அரசியல் படுகொலைகளைப் பற்றியும் தயவுசெய்து விசாரியுங்கள்.'

***சின் :- இது நடக்குமாப் போல தெரியேல்லை. இப்ப இருக்கிற பிரச்சினையே புலிகள் மீது யார் தாக்குகினது எண்டதுதான். வேறு யார் செத்தாலும் அது ஒரு பிரச்சினையில்லை. அதுகள் ஒரு துன்பியல் சம்பவம் மட்டுந்தான்... இது ஒரு பக்கமிருக்கட்டும். உந்த தமிழ் கூட்டமைப்பு எம்.பி.மாரின்ர சத்தத்தைக் காணோமே! அவையளுக்கு என்ன ஆச்சு.?***

**மன் :-** அதையேன் கேக்கிறீர்? அவையின்ர சில வீடுகளில வாதப் பிரதிவாதங்கள் சூடு பறக்குது. மனிசி பிள்ளைகள் நறுக் நறுக்கெண்டு கேள்விகளாலை போட்டுத் தாக்குறாங்கள். வீட்டுக்குப் போற எம்.பி.மார் எப்பிடி வெளியால இறங்குவம் எண்டு இருக்கினமாம். 'பதவியிலை இருக்க வேணும் எண்டதுக்காக உந்த மானங்கெட்ட வாழ்க்கையை நீங்கள் ஏற்றுக் கொண்டாலும் எங்களால முடியாது எண்டு குடும்பத்தார் குடுக்கிற டோஸில, எம்.பி.மார் தலையைப் பிச்சுக்கொண்டு திரியினமாம். அதிலையும் பழம்பெரும் எம்.பி. தன்ர சம்சாரத்திட்டச் சொன்னதுதான் அவற்றச் ஆதங்கத்தின்ர உச்சமாம். "தெரிஞ்சோ தெரியாமலோ புலிவாலைப் புடிச்சிட்டன். இப்ப விட்டனெண்டால் நீ விதவையாகிறது மட்டுமில்லாம, பிள்ளையளும் தனிச்சுப் போடுங்கள். மற்றவையளைப் போல குடும்பங்களை வெளிநாட்டுக்கும் அனுப்பாமப் பிழை விட்டுப்போட்டன். உந்தப் பயந்த சீவியத்தை நான் விரும்பியே வாழ்ந்து கொண்டிருக்கிறன்?" எண்டு அழாக் குறையாச் சொன்னவராம். இது இப்பிடி இருக்க அவை எப்பிடி அரசியல் பேசுறதும், செய்யிறதும்? ஏதோ வன்னியில இருந்து வாற உத்தரவைச் செய்து முடிக்கிறது உத்தமம் எண்டுதான் இருக்கினமாம்.

***சின் :- அடப் பாவமே......கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கின கதையா நிம்மதி இழந்து பதவி வாங்கியிருக்கினம். இவைக்குத்தான் இது தலையெழுத்தெண்டால் குடும்பங்கள் என்ன பாவம் செய்ததுகள். அதுகளின்ர கேள்விக்கு என்ர வாக்கும் உண்டு. வாழ்க குடும்ப ஜனநாயகம்.***

**மன்னவரும் சின்னவரும்**

# இங்கே... இப்போது....

“**பி**றரிடம் கைகட்டி உத்தியோகம் பார்க்க எனக்குப் பிடிக்கவில்லை சொந்தமாக பிஸினஸ் செய்யவே ஆசைப்படுகிறேன்... பிஸினஸ் செய்ய பணமும் அனுபவமும் வேண்டுமே... அதற்காக ஒரு நிறுவனத்தில் நான் விற்பனைப் பிரதிநிதியாக இப்போது வேலை செய்கிறேன்! ஆனால், இந்தத் தொழிலில் வீடு வீடாக, கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்க வேண்டியிருக்கிறது! இந்தத் தொழிலில் ஒவ்வொருவரைப் பார்க்கவும் மணிக் கணக்கில் காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது.

இன்னும் சிலரைச் சந்திக்கவே பல முறை படையெடுக்க வேண்டியிருக்கிறது! பலர் என்னை ஒரு ‘நியூசென்ஸ்’ என்பது மாதிரிக் கூடப் பார்க்கிறார்கள்! நடத்துகிறார்கள்! இதனால் என்னுடைய தன்மானமே காயப்படுகிறது! நமக்கு ஏன் பிஸினஸ் ஆசை எல்லாம்? பேசாமல் நாமும் நமது நண்பர்கள் போல ஏதாவது குமாஸ்தா உத்தியோகத்துக்கு முயற்சி செய்தால் என்ன என்று கூட சில சமயம் தோன்றுகிறது.”

எனக்கு இப்படி ஒரு கடிதம் வந்தது. எழுதியவர் தஞ்சாவூரைச் சேர்ந்த ஒரு இளைஞர்! இவருக்குப் பதில் சொல்வதற்கு முன் புத்தரின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கலாம்.

ஒரு முறை புத்தரை இளைஞன் ஒருவன் சந்தித்தான்! ஆனால் அந்த இளைஞனுக்கு இவர்தான் புத்தர் என்று தெரியாது! புத்தரின் முகத்தில் இருந்த பிரகாசமும் தோற்றத்தில் இருந்த பொலிவும் அந்த இளைஞனையே புரட்டிப் போடும் அளவுக்குக் கவர்ந்துவிட... பரவசப்பட்டு போன அவன் புத்தரிடம் கேட்டான்:

“நீங்கள் கந்தர்வ லோகத்தை சேர்ந்தவரா?”

புத்தர், “இல்லை” என்று பதில் சொன்னார்.

“அப்படி என்றால் தேவலோகத்தில் இருந்து வருகிறீர்களா?”

“இல்லை”

இளைஞன் பொறுமையிழந்துவிட்டான்.

பின்புதான் “யார் நீங்கள்?” என்று கேட்டான்

“இந்தக் கேள்வியை ஆரம்பத்திலேயே கேட்டிருக்கலாமே இளைஞனே!” என்று சொல்லிவிட்டுப் புத்தர் சொன்னார்.

“நான் ஒரு சுத்தமான கண்ணாடி”

புத்தரின் இந்த வாக்கியம் மிகவும் பிரசித்தமானது! இதன் அர்த்தமோ மிக மிக ஆழமானது.

‘திறமைசாலி!’ என்று நம்மை ஒருவர் பாராட்டினால் நாம் என்ன நினைக்கிறோம்?

இவன் நம்மை அறிவாளி என்கிறான், விஷயம் தெரிந்தவன் என்கிறான் புத்திசாலி என்கிறான், சாணக்கியன் என்கிறான், வித்தை தெரிந்தவன் என்கிறான், நம் அறிவை இவன் வியக்கிறான் என்று வார்த்தைகளை அடுக்கிப் பார்த்து மகிழ்ந்து போகிறோம்.

ஆனால், புத்தர் சொன்ன மாதிரி நாம் வெறும் கண்ணாடியாக மட்டும் இருந்தால் எதிராளி சொன்ன வார்த்தையை மட்டுமே பிரதிபலிப்போம்... வார்த்தைகளின் எழுத்துக்களில் இருக்கிற இண்டு இடுக்குகளில் எல்லாம் புகுந்து உச்சரிக்கப்படாத அர்த்தங்களைத் தேடிக்கொண்டிருக்கமாட்டோம்!

இப்போது தஞ்சாவூர் இளைஞனின் கடிதத்துக்கு வருவோம்!



இவருக்கு நேரடியாக இதைச் செய், அதைச் செய்யாதே என்று நான் பதில் தரப்போவதில்லை! மதன்மோகன் மாளவியாவின் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை மட்டும் சொல்கிறேன். இதிலிருந்து என்ன எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை அவர் எடுத்துக்கொள்ளட்டும்.

பனாரஸ் இந்து யூனிவர்சிட்டியைத் தோற்றுவித்தவர்தான் மதன்மோகன் மாளவியா என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தப் பல்கலைக்கழகத்தை நிரிமாணிக்க இவர் முயற்சி மேற்கொண்டிருந்த சமயம் எத்தனையோ சிக்கல்கள், எதிர்பாராத இடர்பாடுகள்! இந்து பல்கலைக்கழகத்தை நிர்மாணித்தே தீருவது என உறுதியோடு செயற்பட்டார் மதன்மோகன் மாளவியா. அந்தச் சமயம் மாளவியாவுக்குப் பண நெருக்கடியும் ஏற்பட்டது. மாளவியா தளர்ந்துவிடவில்லை. ஊர் ஊராகச் சென்று பல செல்வந்தர்களையும் வணிகர்களையும் சந்தித்துப் பல்கலைக்கழகம் கட்ட நிதி திரட்டினார். நிதி வசூல் செய்வதற்காக அவர் ஹைதராபாத் நவாப்பிடமும் சென்றார்.

“என்ன தைரியம் இருந்தால் இந்து பல்கலைக்கழகம் கட்டுவதற்கு என்னிடமே வந்து நிதி கேட்பாய்?” என்று கண்கள் சிவக்க உறுமிய நவாப், தான் அணிந்திருந்த செருப்பைக் கழற்றி மதன்மோகன் மாளவியா மீது வீசினார். பதில் பேசாமல் நவாப்பின் அரண்மனையை விட்டு வெளியேறிய மாளவியா, நேராகக் கடை வீதிக்கு வந்தார். நவாப் தன் மீது வீசிய செருப்பைப் பொதுமக்களிடம் ஏலம் விட ஆரம்பித்தார். நவாப்பின் செருப்பு என்பதால் போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொருவரும் விலை கேட்டார்கள். அதற்குள் இந்தச் செய்தி நவாப்புக்குப் போக.. அவருக்குப் புதிதாக ஒரு சங்கடம் பிறந்தது. தன்னுடைய செருப்பு சொற்ப விலைக்கு ஏலம் போனால் அது தனக்குத்தானே கேவலம்.. என்று நினைத்தார் நவாப். உடனே தன் சேவகன் ஒருவனிடம் பெரிய பண மூடை ஒன்றைக் கொடுத்து “நீ போய் என் செருப்பை பெரிய தொகைக்கு ஏலம் எடு” என்று அனுப்பினார். இப்படி, நவாப்பின் ஒற்றைச் செருப்பை அவருடைய சேவகன் மூலம் ஒரு பெரிய தொகைக்கு நவாப்புக்கே ஏலத்தில் விற்பனை செய்தார் மாளவிகா. அந்தப் பணத்தை பனாரஸ் இந்து யூனிவர்சிட்டி கட்டப் பயன்படுத்திக்கொண்டார்.

ஒரு கொள்கையுடனும் குறிக்கோளுடனும் வாழ்ந்துகொண்டிருக்கும் அத்தனை இளைஞர்களுக்கும் நான் சொல்ல விரும்புவது இதுதான்,

ஒருவனை முன்னேறவிடாமல் தடுப்பது எது தெரியுமா? அவனது திறமையின்மையோ தகுதிக் குறைவோ கூட அல்ல; ‘இனி தனக்கு வாய்ப்பே இல்லை, விடிவு காலமே இல்லை’ என்று அவன் ஒரு முடிவுக்கு வந்துவிடுவதுதான்!

Opportunity is Nowhere என்று சோர்ந்து போய் உட்கார்ந்துவிடாதீர்கள்!

Opportunity is Now here என்று அதைச் சரியாக எடுத்துக்கொண்டு வாழ்க்கையில் முன்னேறிச் செல்லுங்கள்

**நன்றி : சுவாமி சுகபோதானந்தா.**

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 113க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

திருமதி ஜோதிலக்ஷ்மி கனகசபை, 3, மொல்லிகொட லேன், கம்பளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. செல்வி. ஆர். மோதிகா, லேடி கோர்டன் டிரைவ், கண்டி.
2. றெ.பி. மரிய டினேசன், வசந்தம், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
3. க. நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
4. பாத்திமா வஹிதா லாஹிர், 22/8, நீதிமன்ற வீதி, திருகோணமலை.
5. எம்.எப். அஸ்மா, 145 கல்பொக்கை, வெலிகாமம்.
6. கே.எம்.எஸ். ஆப்தீன், போல்ஸ் வீதி, நகரசபை விடுதி, புத்தளம்.
7. சு. ஜோ, 19/3, மெக்கெய்ஸர் வீதி, உவர்மலை, திருகோணமலை.
8. எம். நிசார்தீன், 11, வீட்டுத் திட்டம், கல்பிட்டி.
9. க. சுதாகர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
10. க. பவன், இராமகிருஷ்ண வீதி, களுதாவளை - 3, களுவாஞ்சிக்குடி.

## குறுக்கெழுத்துப் போட்டி 115

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | | | 8 |
| 9 | 10 | 11 | 12 | |
| 13 | | 14 | | 15 |
| 16 | 17 | 18 | 19 | |
| 20 | 21 | 22 | 23 | 24 |

### இடமிருந்து வலம்

1. அசௌகரியம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது).
6. மன்மதனின் காதலி.
9. இது சேகரிப்பது பலருக்குப் பொழுதுபோக்கு.
15. தமிழிலுள்ள ஆயுத எழுத்து.
16. ஒரு ராகம்.
20. தமிழிசையில் புரட்சியை ஏற்படுத்திய மாஜி நடிகரின் பாதிப் பெயர் (குழம்பியுள்ளது).

### மேலிருந்து கீழ்

1. சிங்கராஜ வனம் அமைந்துள்ள மாகாணம் (குழம்பியுள்ளது).
2. வெட்டுவதற்குப் பயன்படும் ஆயுதம் (குழம்பியுள்ளது).
5. ‘தித்திக்குதே’ ஜீவா நடித்து வெளிவந்துள்ள புதிய படம் (தலைகீழ்).
11. பிறர் நலத்துக்காக தன்னலமின்றிச் செய்யும் பணி (குழம்பியுள்ளது).
17. பூரண நிறையுணவு இது (தலைகீழ்).
19. மலை (தலைகீழ்).

### குறுக்கெழுத்துப் போட்டி 113 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| வி 1 | க 2 | ட 3 | க 4 | வி 5 |
| ல் 6 | | | ணா 7 | |
| ல 8 | ம் 9 | ச 10 | | ஆ 11 |
| ங் 12 | ச 13 | கா 14 | ர 15 | கி 16 |
| க 17 | தி 18 | | த 19 | றை 20 |
| ம் 21 | வ 22 | ச 23 | ம் 24 | |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 05.04.2005 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-115
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.


ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லா விதமான, ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சய பாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஒரே கூரையின் கீழ்.

RATHAA TEXTILE
377, 379A, Galle Road, Wellawatta, Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel: 2364792

Branch:
No. 33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

89

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்: ........................
கையொப்பம்: ................

உண்மை நேர்மை வெளிப்படைத் தன்மை



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
★ மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி:
05-04-2005

அனுப்ப வேண்டிய முகவரி:-
‘ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை’
தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772,
கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சேலை?**
**நற்பட்டமுனை வாசகிக்கு அதிர்ஷ்டம்!** 87

இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**க.நூர்ஜகான்,**
ஜும்மா பள்ளி வீதி, நற்பட்டிமுனை-5.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்புகொண்டு பரிசினைப் பெறலாம்.

# ஊசி

கடந்த மூன்று மாத காலமாய் பெரியாஸ்பத்திரியில் ஏழாம் நம்பர் வார்ட்டில் இருக்கும் மகள் சுவேதாவிற்குப் பகல் உணவு கொண்டு சென்றுகொண்டிருந்தாள் அம்பிகா. அம்பிகாவிற்கு ஆஸ்பத்திரி வாடை ஒத்துக்கொள்ளாது. ஆஸ்பத்திரிகளுக்குப் போனால் எப்படியும் குறைந்த பட்சம் இரண்டு நாட்களுக்காவது ஒவ்வாமையினால் குமட்டிக்கொண்டிருப்பாள். ஆனால் தற்போது நிலைமையே வேறு. பெற்ற மகளுக்காக ஒவ்வாமையைத் தள்ளி வைத்துவிட்டு தினசரி ஆஸ்பத்திரிக்குச் செல்கிறாள். இல்லாவிட்டால் சுவேதா பசியோடு இருந்துவிடுவாளே! பார்வையாளர் நேரம் முடிவடைவதற்குள் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்துவிட்டால் பிரச்சினை இல்லை. இல்லாவிட்டால் வாயில் காவல்காரர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி உள்ளே நுழைவது என்பது முடியாத காரியம். ஒரு நாளைக்குச் சாப்பாடு கொண்டு செல்லாமல் விட்டுவிட்டால் அன்று பட்டினி கிடந்துவிடுவாள் சுவேதா. புலி பசித்தாலும் புல் தின்னாது என்பது போல என்னதான் பசி என்றாலும் ஆஸ்பத்திரி கென்ரீன் சாப்பாட்டைத் தொட்டுக் கூடப் பார்க்கமாட்டாள். பிடிவாதக்காரி!

அழகும், அன்பும், கருணையும், மரியாதையும், படிப்பும் என எல்லாம் நல்ல குணங்களாய் கொண்டவளானபோதும் முரட்டுத்தனமாக இந்தப் பிடிவாதக் குணம் இவளது உடன்பிறப்புப் போல ஒட்டிக்கொண்டுவிட்டது. 'ஆண்பிள்ளையானால் பரவாயில்லை. பெண்பிள்ளையாச்சே. இந்தப் பிடிவாதக் குணம் இவள் வாழப் போகும் குடும்பத்திலும் தொடருமானால் இவள் வாழ்வு எப்படி அமையுமோ' எனப் பல முறை எண்ணிப் பார்த்து வேதனையோடு கண்ணீர் சிந்தியிருக்கின்றாள் அம்பிகா.

அம்பிகாவைப் போலவே சுவேதாவிற்கும் ஆஸ்பத்திரி என்றால் அலர்ஜி. அதிலும் ஆஸ்பத்திரியில் போடும் ஊசி அலர்ஜியோ அலர்ஜி! சின்ன வயதில் குழந்தைகளுக்குக் குத்தப்படும் போலியோ, அம்மை, பக்கவாதம் எனப் பலவாறான தடுப்பூசிகள் குத்தியபோதெல்லாம் ஊசி குத்தப்பட்ட இடம் புண்ணாகி, பிறகு அந்தப் புண்ணை ஆற்றுவதற்கு வேறு ஊசி குத்திய அனுபவமெல்லாம் அம்பிகாவிற்கு நிறையவே உண்டு.



சுவேதாவுக்கு எட்டு வயதாக இருக்கும்போது, கடுமையான காய்ச்சல் வந்து ஒரு முறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். அன்று காய்ச்சல் தணிவதற்காக ஊசி குத்த வந்த தாதியை "அடியே....ஊசி போடாதேடி...ஊசி போடாதேடீ...." என்று கத்திக் கூச்சல் போட்டு அடம்பிடித்து ஊசி குத்த இடங்கொடுக்காமல் ஊசியையும் உடைத்துவிட்டாள். பிறகு அம்பிகாவும் கணவரும் பிடித்துக்கொள்ள தாதி வேறு ஊசி கொண்டுவந்து குத்திவிட்டுப் போனாள். அவள் போன பின்னும் அத்தனை காய்ச்சலோடும் அவளைத் திட்டிக்கொண்டே இருந்தாள். அவ்வளவு ஏன்? சட்டைக்குக் கூட ஊசி குத்திக்கொள்வதை விரும்பாதவள். சட்டையில் பொத்தான் கழன்றுவிட்டாலும் அதை வேறு யாரிடமாவது கொடுத்துத் தைத்துக்கொள்வாள். இன்னும் சொல்லப்போனால் தலைக்குக் கொண்டை ஊசி குத்துவதற்குப் பதிலாக, துணியால் செய்த தலை அலங்காரப் பொருட்களை மட்டும் பாவிப்பாள். இப்படியே சுவேதாவின் ஊசி அலர்ஜி பட்டியலை நீட்டத் தொடங்கினால் சிரித்து மாளாது என எண்ணிக்கொண்டே ஆஸ்பத்திரியை அடைந்துவிட்டாள் அம்பிகா.

ஏழாம் இலக்க வார்ட்டை அடைந்தபோது எப்போதும் முன்னால் தென்படும் சுவேதாவைக் காணாது உள்ளே எட்டிப் பார்த்த அம்பிகாவிற்கு, அவள் கண்ட காட்சி....."அழக் கூடாது கண்ணா. கொஞ்சம் கண்ணை மூடிக்கோ. அக்கா வலிக்காம ஊசி போடுவேனாம்" என்றவாறு ஒரு ஏழு எட்டு வயதிருக்கும் சிறுவன் ஒருவனுடைய கையை பஞ்சால் தடவிவிட்டு நறுக்கென்னு ஊசி குத்திக்கொண்டிருந்தாள் சுவேதா. சின்ன வயதில் ஊசி என்றாலே ஊரை விட்டு வேறு ஊருக்கு ஓடிப் போகும் மகள் நிவேதா இன்று தாதியாகி நோயாளிகளுக்கு ஊசிப் போடுவதைக் கண்டு வியந்தாள். சிரித்துக்கொண்டே அவளது மதிய உணவைக் கொடுத்துவிட்டுத் திரும்பினாள். அம்பிகா திரும்பியதும் உடனடியாக சுவேதா சாப்பாட்டை எடுத்துக்கொண்டு சாப்பாட்டறை நோக்கிச் செல்கிறாள். தாமதமானால் சாப்பாடு ஊசி போய்விடும் என்ற பயத்தோடு. அந்த ஊசிகள் பற்றிய பீதி அகன்றபோதும், ஊசி ஏதாவது ஒரு வடிவத்தில் சுவேதாவை மிரட்டிக்கொண்டுதான் இருக்கிறது.

**-மெய்யன் நடராஜ், டோஹா - கட்டார்.**


# கருத்தடை.....!

மாதவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை, தன் மனைவிக்கு இப்படியொரு நிலை ஏற்படும் என்று. எத்தனை எத்தனை எதிர்பார்ப்புக்கள்? அனைத்தும் கனவு கலைந்தது போல், கருமேகங்கள் சூழ்ந்துகொண்ட வானமாய், வாழ்வு அமைந்துவிட்டதே என்று மாதவன் மனம் உடைந்து போனான். தன் மனைவி சுபா கர்ப்பம் தரித்துவிட்டாள் என சுமார் ஒரு மாதத்திற்கு முன், வைத்தியர் மூலம் அறிந்து கொண்டபோது, அவன் அடைந்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை எனலாம்.

மாதவனும் சுபாவும் கல்லூரி நாட்களில் இருந்தே ஒருவரை ஒருவர் காதலித்து சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பே திருமண பந்தத்தில் இணைந்தனர். எனினும் இருவரும் பிள்ளைப் பேறினை ஒரு வருடத்திற்குப் பின் என்ற நிலைக்குத் தள்ளிப் போட்டனர். மாதவன், ஆசிரியராகக் கடமை புரிபவன். அவன் மனைவி சுபா பல தொழில்களுக்கு விண்ணப்பித்து இறுதியாகப் பெருந்தோட்டத் துறையில் குடும்ப நல அதிகாரியாகத் தொழில் கிடைக்கவே, கடந்த நான்கு வருடங்களாக அத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றாள்.

மனைவி சுபா வைத்தியரின் அறையை விட்டு வெளியில் வருவதைக் கண்ட மாதவன் அவள் அருகில் சென்றான். அவளோ, கண்கள் கலங்கிய நிலையில், மனமுடைந்து அவனைக் கட்டியணைத்து விம்மி விம்மி அழத் தொடங்கினாள். அவளை அவ்விடத்தில் இருந்து வீட்டுக்கு அழைத்து வர மாதவனுக்குப் போதும், போதும் என்று ஆகிவிட்டது. வீட்டுக்கு, வந்தவுடன் மாதவன், சுபாவிடம் எவ்வளவோ எடுத்துக் கூறியும் சுபா சமாதானமடையவில்லை. ஏற்கெனவே திருமணம் முடித்து மூன்று வருடங்கள் கடந்தும் பிள்ளைப் பேறு இல்லாமையால், அவள் அடைந்த துன்பங்களும் அவமானங்களும் ஏராளம். இப்படியான சூழ்நிலையில்தான், ஒரு மாதத்திற்கு முன் சுபா வேலைக்குச் சென்றிருந்தபோது திடீரென மயக்கமுற்றாள். உடனே அவளுக்கு முதல் உதவிகள் செய்து, பின் வீட்டுக்கு அழைத்துவரப்பட்டாள், மாலை மாதவன் வந்தவுடன், நகரில் உள்ள செனலிங் சென்ரருக்குப் பரிசோதனைக்கு என அழைத்துச் சென்றபோதே, சுபா கருவுற்றிருக்கின்றாள் என இருவரும் அறிந்தனர். அப்போதிருந்தே இருவரும் குழந்தைக்கெனத் தேவையான பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கினர்.

சுபா வழமை போன்று, அன்றும் தோட்ட வைத்தியசாலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கு கருத்தடை, அதாவது நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். அப்போதுதான் அவளுக்கு வயிற்றில் கடுமையான வலி ஏற்பட்டது. தோட்டத்தில் அம்புலன்ஸ் வசதியில்லாததாலும், ஏற்கெனவே மாவட்ட வைத்தியசாலைக்கு நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டிற்கு என இளம் பெண்களை அழைத்துச் செல்லத் தயாராக நிறுத்தப்பட்டிருந்த லொறியில் சுபாவையும் ஏற்றிக்கொண்டு, மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். பின் தகவல் அறிந்து மாதவனும் வைத்தியசாலைக்கு வந்தான். அப்போதுதான் வைத்தியரால் அந்தச் செய்தி கூறப்பட்டது. கருவுற்றிருந்த சுபாவுக்கு கர்ப்பம் தரித்து நிற்கவில்லை என வைத்தியர் கூறியதும், மாதவன் தலையில் இடி விழுந்தது போல் உணர்ந்தான்.



**-மலைக்கவி கா.சுபாஷ், டிக்கோயா.**

கடந்த கால நினைவுகளில் மூழ்கியிருந்த மாதவன் மனைவி சுபா படுக்கை அறையை விட்டு வெளியே வருவதைக் கண்டதும் நிகழ்காலத்திற்கு வந்தான். சுபா கடுமையாக அழுதிருக்க வேண்டும் என்பதை அவளின் முகம் சிவந்து வீங்கிப் போயிருந்ததில் இருந்து அறிந்துகொண்டான்.

"சுபா! நடந்தது நடந்திடுச்சி, இனி அத நெனச்சி அழுது என்ன பயன் இருக்கப்போவுது? மனச மாத்திக்கட்டு, கடவுள் விட்ட வழின்னு வாழ்வோம்" என்றான் மாதவன்.

"இல்லீங்க! இது கடவுள் நமக்கு வழங்கின தண்டனைங்க" என்றவளை,

"சுபா என்ன சொல்ற?" என்றான் மாதவன்.

"ஆமாங்க! கடவுள் வழங்கிற கொழந்தைகள அழிக்க நாம யாரு? அதுதாங்க நாலு வருசமா இந்த வெல்பெயா வேலை செஞ்சி எவ்வளவோ பாவத்தச் சம்பாதிச்சிட்டேன், குடும்பக் கட்டுப்பாடு மலையக மக்களின் வறுமை ஒழிப்புக்கு சரியான திட்டமுன்னு. ட்ரஸ்டால சொன்னதைக் கேட்டு, வேலை ஆசையில பண மோகத்தில, தோட்டத்தில உள்ள குடும்ப பொண்ணுகளுக்கு கருத்தடைய செய்ய நானும் உடந்தையா இருந்தேன். அதன்ட பலனத் தான் இப்போ நான் அனுபவிக்கிறேன். அப்பாவிகளின் பிள்ளைப் பேறத் தடுத்ததும் இல்லாம சிலர்ட சாவுக்கும் காரணமான நபர்களில நானும் ஒருத்தியா ஆயிட்டேன். இனியும் இந்தத் தொழில் எனக்கு வேண்டாம். எங்கட சமூகத்த நாமளே அழிக்கக் காரணமாயிட்டோம். நாளைக்கே இந்த வேலய ராஜினாமா செய்திட்டு, கருத்தடைய மலையத்தில இருந்து விரட்டியடிக்கப் போராட போறேன், 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பார்கள். அத நான் அனுபவிச்சிட்டேனுங்க" என, புதிய சிந்தனை பிறந்தவளாய்ப் பேசிய சுபாவின் கருத்துக்களை வரவேற்றவனாய், அவளை அணைத்து நெற்றியில் தனது அன்பைப் பொழிந்தான் மாதவன்.

*(பாவம் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## திறமையே வாழ்வில் நிலைக்கும்!

எந்தவொரு மனிதனும் சிந்திக்கக் கற்றுக் காள்ளாத வரை - அறிவை மதிக்காத வரை வைகளை அறிவார்ந்த திறமையுடன் யன்படுத்தாமல் இருக்கின்ற வரை - தான் இருந்த ழைய சூழ்நிலையிலேயே அதிகாரம் செலுத்துவான்.

சொர்க்கத்தின் உண்மையான பரிசு ன்னவென்றால் திறமையாக இருப்பதற்குண்டான க்திகள் நம்மிடம் இருப்பதுதான்.

பொதுவான முயற்சிகள் மற்றும் டவடிக்கைகளில் மனிதன் திறமைகளுக்கு திப்பளிக்கிறான். முக்கியமாக ஒரு திரைப்பட தாநாயகன் அல்லது சிறந்த விளையாட்டு வீரன் ஆகியவர்கள் பெரும்பாலும் வணங்கப்பட்டு, வழிபடும் லையில் உள்ளனர். உண்மையான திறமைகளைச் சாதனை செய்யும்போது அதன் விளைவுகள் ண்டிப்பாக வெளிப்படும்.

ஒரு மனிதன் எந்த அளவிற்குத் திறமையாக ருக்கின்றானோ, அந்த அளவிற்கு வாழ்க்கையில் லைத்து நிற்பான். எந்த அளவிற்குத் திறமையற்று இருக்கின்றானோ அந்த அளவிற்கு அழிந்து போவான்.

அர்த்தமுள்ள எந்தவொரு முயற்சியிலும், திறமைகளை மேம்படுத்துவதில் உற்சாகப்படுத்த வேண்டும். அவ்வாறு திறமைகளைக் கண்ணுறும் பட்சத்தில், அவைகளைப் பற்றிப் பாராட்டுவதும், சில வெகுமதிகளை வழங்குவதும் நல்ல பயனை அளிக்கும்.

உயர்ந்த நிலையிலான தரத்தை வலியுறுத்துங்கள்.

ஒரு சமூகத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் நிலையானது, நீங்களோ, உங்கள் குடும்பமோ அல்லது நண்பர்களோ, பாதுகாப்பாக வாழும் நிலையினைப் பொறுத்துள்ளது.

கூர்ந்து கவனித்தல், படித்தல் மற்றும் பயிற்சிகள் ஆகியவைகள்தான் திறமைகளில் உள்ளடக்கிய கூறுகளாகவும் உள்ளன.

'மகிழ்ச்சி'
எனும் நூலிலிருந்து

விழிப் படலம் காயுமளவிற்குக் காற்றில் வெப்பம் வீசியது. பஸ் நிறுத்தத் தூணொன்றில் சாய்ந்தவாறு நின்றிருந்த ஆதித்தன் இமைகளை மூடிக் கண்களை ஈரப்படுத்த முயன்றான். அனல் வீச்சு கண்களைத் திறக்க விடவில்லை.

"ஜிலீர்...ஜிலீர்..." கொலுசொலி!

திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான் ஆதி.

மனதைப் பிசையும் மலர்கள் என்று இவன் சலித்துக்கொண்டான். "பாவாடை நிழலுக்குள் பதுங்கிவரும் வெண்முயல்கள்!" அவளுடன் குதித்துப் போகின்றன அந்த முயல்கள்.

ஒரு முறை திரும்பிப் பார்க்கமாட்டாளா?

உலகம் அவளைப் பார்த்துப் பார்த்து வதைபட வேண்டும்;

## கால்களில் கொலுசு கலீர் கலீர்!
## கன்னங்களில் செழுமை பளீர் பளீர்!!



அவள் யாரையும் பார்க்கமாட்டாள்.

பின்னால் ஓடிச் சென்று அவள் முகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பும் வயதல்ல இவனுக்கு. அவள் ஒரு முறையேனும் முகத்தைக் காட்டமாட்டாளா என்ற ஏக்கம்தான் நெஞ்சில் நிறைந்து கனத்தது.

தேவதைகள் திரும்பிப் பார்ப்பதில்லை!

"என்ன இங்கே நிற்கிறாய்?" வதைபட்ட மனதை மீட்டது நண்பன் குரல்.

ஆதி ஆசுவாசமாகச் சிரித்தான். "வா" என்றான்

அவள் அவனைக் கடந்துவிட்டிருந்தாள். நீளப் பாவாடையும், சட்டையும், சடையில் பூவுமாக....

இவனுக்கு மனம் பதறியது. அவள் கன்னங்களின் பளீர்ச் செழுமை மட்டுமே தெரிந்தது. பதின் வயதுகளுக்குள்ள பாய்ச்சல் இல்லை. மெல்ல நடந்துகொண்டிருந்தாள். பாவாடை பாதங்களைக் காண்பித்துக் காண்பித்து ஏமாற்றியது. ஒளிவீசும் கணங்களாகத் தோன்றி மறைந்தன வெண் பாதங்கள்.

அவளது அசையும் பகுதிக்குக் கீழேயும் தொங்கியது பின்னல்.

### தருவது முழடில்யன்

முகத்தைப் பார்க்காமல் விட்டோமே என்று அரற்றியது மனம்.

அழகு எப்போதுமே வதைதான்! வலியெழுப்பி இவனை வதைத்துவிட்டு அது பற்றிய பிரக்ஞை எதுவுமின்றிச் சென்றுகொண்டிருந்தாள். சும்மா நின்றிருந்த அவனுக்கு அவன் மனதையே எதிரியாக்கிவிட்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

தார் வீதியில் நடந்த அவள் பாதங்கள் வைத்தீஸ்வரன் கவிதையை நினைக்க வைத்தன.

"மலரற்ற தார் ரோடில் பாதங்கள் விழிக்கு மலர்!"

"யாரேனும் வருகின்றார்களா?" என்று கேட்டான் நடேசன்.

"இல்லை. சும்மாதான் நின்றேன் வா" என்று அவன் தோளில் கைபோட்டபடி நடந்தான் ஆதி.

"உன்னைப் பார்க்க வீட்டுக்குப் போனேன்" என்றான் நடேசன். பிறகு அவனாகவே "விசேசம் ஒன்றுமில்லை சும்மா தான்.... தனியே இருந்தால் தலை வெடிக்கிறது..." என்றான்.

ஆதி பேசவில்லை, இருவரும் நடந்தார்கள்.

வெயில் சூடு தாங்காமல் நடக்கின்ற சாக்கில் ஆதி, வேகமாய் நடந்தான். அவள் திரும்பவும் தென்படுவாளா என்ற ஆசை மனதில் கிடந்து துடித்தது. அவள் வீடு போய்ச் சேர்வதற்குள் வீதியில் பிடித்துவிட முடிந்தால்....

கடக்கும்போது அவள் முகத்தை நாகரீகமற்ற முறையிலாயினும் திரும்பிப் பாரத்துவிட வேண்டும். கூச்சப்படக் கூடாது.

வெயிலை உணர்ந்து இவன் வேகத்திற்கு ஈடுகொடுத்து வந்துகொண்டிருந்தான் நடேசன்.

கார் ஒன்று இவர்களைக் கடந்து பத்து யார் தூரம் முன்னால் போய் நின்றது. நண்பர்கள் வியப்புடன் பார்த்தார்கள்.

காருக்குள்ளிருந்து ஒருவர் தலையை நீட்டிச் சிரித்தார். ஊர்ப் பெரியவர். செல்வாக்குகள் நிறைந்த பணக்காரர்.

"வா, நமக்காகத்தான் நிற்கிறார்" என்று பரபரப்புடன் கூறியபடி முன்னால் வேகமாக ஓடினான் நடேசன்.

இவன காரை நெருங்கிய போது, பெரியவர் முன்னால் கைகளைக் கட்டி, வாயெல்லாம் பல்லாக நெளிந்து நின்றான் நடேசன்.

இவனுக்கு எரிச்சலாக இருந்தது.

அருகே செல்வதற்குள் நடேசன் ஏழெட்டு முறை மேலும் கீழும் தலையை ஆட்டிக் குழைந்து முடித்திருந்தான். காரின் கதவைத் திறந்தால் ஒரு செல்ல நாய்க் குட்டி போல உள்ளே பாய்ந்து ஏறிவிடுவான் போலத் தோன்றியது.

"ஓமோம், ஆதிதான் ஐயா!" என்று அவன் வழிந்து கொளகொளப்பதைக் கேட்டுக் கொண்டே இவன் வேறு புறம் திரும்பி நின்றான்.

"சரி ஐயா!" கார் புகையைக் கசக்கி விடடு விரைந்தது. நடேசன், மகத்தில் குடிகொண்டிருந்த அசட்டுக் களை முழுவதும் அழித்துவிடாமல் இவனிடம் திரும்பினான்.

"உனக்கு வெட்கமாயில்லையா?"

"எவ்வளவு பெரிய மனுசன்! எங்களைக் கண்டு காரை நிறுத்திக் கதைக்கிறார்!" அவன் குரலில் பெருமிதம் ஓடியது.

"மனுசனில் என்னடா பெரியவனும் சின்னவனும்? அதுவும் பணத்தால் தான் பெரியவனாகிவிட்டதாய் நினைத்துக் கொள்பவனை நான் மனுசனாகவே நினைப்பதில்லை."

"அந்தாளுக்கு இருக்கும் செல்வாக்குப் பலத்தை அறிந்தால் நீ இப்படி எடுத்தெறிந்து பேசமாட்டாய்!"

பலத்தையோ பவிசையோ கண்டு நான் வியப்படையமாட்டேன். எவ்வளவு சிறியவனாயிருந்தாலும் பலமற்ற பராரியாக இருந்தாலும் சினேகமும் அன்பும் செலுத்தத் தெரிந்தவர்களுக்குத்தான் என் மரியாதை. அவர்களைத்தான் நான் பாராட்டுவேன்."

"சரி அவர்களைப் பாராட்டத்தான் வேணும். ஆனால் இவர்களும் நமக்குத் தேவை. நாங்கள் கஷ்டப்படாமலிருக்க உதவி செய்யக்கூடிய நிலையிலிருப்பவர்கள் இவர்கள்தான்!"

"என்ன கஷ்டம் வந்தாலும், அன்பினால் உயராதவர்கள் எனக்கு ஒரு பொருட்டில்லை. எக்காரணத்திற்கும் அவர்களை நான் நாடமாட்டேன். அன்பும் அறிவும் உள்ளவர்கள் வறுமையில் வாடுகிறவர்களாக இருந்தால், அவர்களைத்தான் நான் பெரியவர்களாக மதிப்பேன்" என்றான் ஆசி.

*எம்மால் வியக்கப்படு உமோரே*
*இடுமுள் படப்பை மறி மேய்ந்து*
*ஒழிந்த குறு நறு முஞ்ஞைக் கொழுங் கண்*
*குற்றடகு, புன் புல வரகின் சொன்றியொரு*
*பெறூஉம், சீறூர் மன்னர் ஆயினும்*
*எம்வயின் பாடறிந்தொழுகும்*
*பண்பினாரே; மிகப் பேர் எவ்வம் உறினும்*
*எனைத்தும் உணர்ச்சி இல்லோர்*
*உடைமை உள்ளேம்; நல் அறிவு*
*உடையோர் நல்குரவு உள்ளுதும்*
*பெரும! யாம், உவந்து நனி பெரிதே.*

(புறம்: 197:9-18)

### சிந்தியா பதில்கள்

✉ தமிழனிடம் நீங்கள் வியக்கும் குணம் து?

-இ.குணசீலன், வவுனியா.

"பல நூற்றுக்கணக்கான அரச படையினரைக் கான்று குவித்த மாவீரர்களைப் பெற்றெடுத்தது ங்கள் ஊர்; சிறிலங்காப் படைகளுக்குப் பேரழிவுளை ஏற்படுத்திய தளபதிகள் பலர் எங்களூரைச் சார்ந்தவர்கள்; முழுத் தமிழீழத்தினுள்ளும் திகளவில் சிறீலங்கா அரசை அதிர வைத்த க்குதல்களுக்குக் காரணமாக இருந்தவர்கள் ங்களூர் மக்கள்தான்...இன்று மின்சார வசதியின்றி, திகள் பாழடைந்து, போக்குவரத்து வசதியின்றி ஷ்டப்படுகிறார்கள் எமது மக்கள். சிறிலங்கா ரசே! உடனடியாக எல்லா வசதிகளையும் செய்து காடு!"

இப்படிக் கேட்கும் துணிவும், சூடு சுரணையும்(?) உலகில் இன்னொரு இனத்தவனுக்கு ருக்கும் என நான் நினைக்கவில்லை.

✉ சிந்தியா, உங்கள் பலம் எது?

-க.கமால்தீன், ஏறாவூர்.

ஏதோ சுமாராகவேனும் நடிக்கத் தெரிந்திருப்பதுதான்!

✉ இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்குரிய தகுதி தனக்கிருப்பதாக மகேஸ்வரன் சொல்லியிருக்கிறாரே?



காதல்
பரத் - சந்தியா

-எம்.முகுந்தன், வெள்ளவத்தை.

'இந்த நாட்டைச் சேர்ந்த பிரஜை எவரும் னாதிபதியாக முடியும்' என்ற முதல் வரியைப் ார்த்துவிட்டு அப்படிச் சொல்லியிருப்பார். அதற்குப் ன்னால் வரும் நிபந்தனைகளில் போர்ஜரி, களவு, காள்ளை, மோசடி, அரச பணத்தை விழுங்கி ப்பம் விட்டவர்கள் போன்ற இன்னோரன்னோர் வட்பாளராக முடியாது என்றிருப்பதைக் கவனித்தி க்கமாட்டார்....விடுங்கள்!

✉ பேட்டியளிப்பதில் புத்திசாலித்தனம் வெளிப்படும் தமிழ் நடிகை யார்?

-வி.காந்தரூபன், திருகோணமலை.

அவ்வப் பத்திரிகைகளின் நிருபர்கள் தாங்ளாகவே தயாரித்துக்கொண்ட கேள்விகளையும் தில்களையும் அந்தந்த நடிக, நடிகையரின் ப்புதல் பெற்றோ, பெறாமலோ போட்டு ாசகர்களுக்குச் சுவாரஷ்யம் தருவதுதான் பரும்பாலும் நடைமுறையிலிருந்து வருகிறது ன்பது தெரிந்திருந்ததால், நடிக, நடிகையர்களின் ந்தப் பேட்டியையும் சுயசரிதையையும் நம்ப டிவதில்லை!

✉ ஆகப் பெரிய கொடுமை எது?

-ஆர்.மிதுனா, கண்டி.

சாதலின் இன்னாதது இல்லை.

✉ கிழக்கு மக்கள் வன்னிப் புலிகளை நம்பாமல் போவார்களானால் அதற்குக் கருணா அம்மான் மட்டும்தான் காரணமா? வன்னித் தலைமை விட்ட பிழைகள் காரணமில்லையா?

-எஸ்.பிரதீபன், திருக்கோயில்.

எல்லாவற்றையும் விடப் பாரதூரமாக வன்னித் தலைமை - கருணா அணி முரண்பாட்டைத் தமிழ்ப் பத்திரிகைகளும் கட்டுரையாளர்களும் கையாண்டு வரும் பக்கச் சார்பு - பயச் சார்பு எழுத்து அகங்காரமும், உண்மை நிலையைக் காண மறுக்கும் கள்ள மனோபாவமும் தமிழ்ச் சமூகத்திற்குப் பாரிய பின்னடைவையே தரப்போகிறது. சமன் நோக்கு என்பதே தெரியாத இந்த அடிவருடிக் கோழை எழுத்தாளர்கள், தமிழ்ச் சமூகத்தை நாசப்படுத்தி விட்டு, வரலாற்றிலும் ஒளிந்துகொள்வார்கள்.

✉ "பிரேமதாசாதான் இந்த நாட்டின் மக்கள் ஜனாதிபதி. அவருக்குப் பிறகு தேசம் வீழ்ந்துவிட்டது" என்ற தொனிப்படத் தனியார் தொலைக்காட்சி ஒன்று விளம்பரம் வைத்துள்ளதே! பார்த்தீரா?

-ஆர்.பிரியதர்ஷினி, கொழும்பு - 05.

பார்க்கவில்லை. அது எந்தத் தொலைக்காட்சி என்றும் தெரியவில்லை. தமிழ்த் தொலைக் காட்சியினராக இருந்தால், பாவம் அவர்கள்! பிரேமதாசாவைக் கொன்றவர்கள் கோபித்துக் கொள்ளப் போகிறார்கள். தமிழ் வேஷம் கலைந்து விடும்.

✉ தமிழ்ப் படங்களில் ஏன் கதாநாயகர்கள் சாதாரண மனிதர்களாக இல்லாமல், அனைத்து வகைச் சக்திகளும் படைத்தவர்களாக வருகிறார்கள்?

-எம்.குருசாமி, ஹட்டன்.

நம்மிடம் இந்தக் கேள்வி வந்துவிட்டால் போதும். ஆட்டோகிராப், ரெயின்போ காலனி, காதல் போன்ற அபத்தங்கள் குறைந்த படங்களும், பிறகு மெல்ல மெல்ல உலகத் தரத்திலான சினிமாவும் தமிழில் வரும் என நம்புவோம்.

✉ உங்களிடம் கேள்வி கேட்டு விடை பெறுவதால் எங்கள் அறிவு விரிவடைந்ததாகத் தெரியவில்லை. எங்கள் கேள்விக்குச் சிந்தித்துப் (?) பதில் சொல்வதால் உங்கள் அறிவாவது வளர்ந்திருக்கிறதா?

-ச.நிலாப்பிரியன், கல்முனை.

சரி....சரி, தினமுரசில் ஒரு பாதிப் பக்கம் நிறைகிறதே....போதும் விடுங்கள்!

✉ ஆபத்தான கேள்வி எது?

-எம்.றிஸ்வான், குருநாகல்.

உங்கள் கேள்விக்கு முந்திய கேள்வி.

✉ பத்திரிகைகள் மக்கள் விரோதமாகவே நடந்து வருகின்றன என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

-இ.முருகநேசன், யாழ்ப்பாணம்.

யுத்தத்தை நினைத்தாலே கலங்கிப் போயிருக்கிறார்கள் மக்கள். கொலைகளும் அவர்களது விருப்பமாக இருக்க முடியாது. ஆனால், தீவுச்சேனை மோதல் தொடர்பாக ஒரு தமிழ்ப் பத்திரிகை வார வெளியீட்டில் எழுதியிருப்பதைப் பாருங்கள். பாசிசக் கொலைவெறி எந்தவிதக் குற்றவுணர்வுமின்றி நம் மனங்களினுள் ஊன்றி வைக்கப்படுகிறது. அந்த வரிகளை அப்படியே தருகிறேன் :

".....இந்தத் தாக்குதலில் பிரதான இலக்காகப் புலிகள் கருதியிருக்கக் கூடிய மங்களம் மாஸ்ரர் தப்பியமை அவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கும். ஆனால் புலிகள் ஓரிரு தடவைகளுடன் இத்தகைய தாக்குதல் முயற்சிகளைக் கைவிடுபவர்கள் அல்லர்....."

✉ திரைப்படப் பாடல்களில் இலக்கியத் தரமே இல்லை என்று ஒரேயடியாகச் சாதிப்பவர்களை என்ன செய்யலாம்?

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

"சப்போஸ் உன்னைக் காதலிச்சு, சப்போஸ் நான் உன்னைக் கட்டிக்கொண்டால் என்ன செய்வாய்!" என்று ஆண் கேட்க, "சப்போஸ் உன்மேல் கோபம் வந்து, சப்போஸ் நான் என் செருப்பெடுத்தால் என்ன செய்வாய்?" என்று குற்றாலக் குறவஞ்சியை அடியொற்றி இப் பெண் பதிலிறுப்பை நுனித்து நோக்கி திரிகூட ராசப்பருக்கிணையாக நம் கவிஞரும் விளையாடுவதை எண்ணி இறும்பூதெய்தினரா என்றால், இல்லை...மாறாக, காழ்ப்புக் கொண்டவர்களாக, இஃது இலக்கியமில்லையென்றியம்புவதை என் சொல்ல! ஆங்கில வார்த்தைகளுக்கு மனம் பதறுவார்; ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்!

✉ ஒருவர் மீது நாம் கொள்ளும் அனுதாபம் எப்போது வெறுப்பாக மாறுகிறது?

-நா.பிரியா, மொறகொல்ல.

அனுதாபம் புரிந்துகொள்ளப்படவில்லை என்கிறபோது கோபமும் வெறுப்பும் வருகிறது. ஒரு கதை :

வறுமையால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ஒருவன், கடவுளிடம் உதவி கேட்க எண்ணினான். அவருக்குத் தன் நிலைமையை விவரித்து ரூபா 5000 உடனடியாகத் தனக்கு வேண்டுமென்று கடிதம் எழுதினான். அனுப்புவதற்கு முகவரி தெரியாததால், மே/பா, போஸ்ட் மாஸ்டர் என்று போட்டு அனுப்பினான். போஸ்ட் மாஸ்டருக்கு கடவுளின் விலாசம் தெரிந்திருக்குமென்று அவன் நம்பினான்.

போஸ்ட் மாஸ்டர் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார். அவருக்கு மிகவும் அனுதாபம் உண்டானது. பாவம், இந்தக் கடிதத்தை எழுதியவன் அப்பாவியாக இருக்க வேண்டும். மிக்க சிரமத்தில் இருக்கிறான் என்று கருதி, அஞ்சல் அலுவலக ஊழியர்களிடம் வசூலித்து, சேர்ந்த தொகையான 4950 ரூபாவையும் அவனுக்கு அனுப்பி வைத்தார்.

மணியோடரில் பணத்தைப் பெற்றுக்கொண்ட அவனுக்கு மிகுந்த கோபம் உண்டானது. உடனடியாகக் கடவுளுக்கு மறுகடிதம் எழுதினான். "கடவுளே, அடுத்த முறை நீ பணம் அனுப்பும்போது போஸ்ட் மாஸ்டருக்கூடாக அனுப்பாதே. அவர் தன் கொமிஷனாக 50 ரூபாவை எடுத்துக்கொள்கிறார்!"

இந்தக் கடிதத்தைப் பார்த்த பிறகு போஸ்ட் மாஸ்டருக்கு அவன் மீது அனுதாபம் உண்டாகப் போவதில்லை.




**1937ஆம்** வருடம் நியூஸிலாந்துக்கு எதிராக லண்டன் நகரில் லோட்டஸ் மைதானத்தில் இடம்பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் முதன்முதலில் கலந்துகொண்ட இங்கிலாந்து அணியைச் சேர்ந்த லென்ஹட்ன், முதலாவது இன்னிங்ஸின்போது ஒரு ஓட்டத்தைக் கூடப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு ஓட்டத்தை மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

தடவையாகக் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய அணியின் இயன் செப்பல் முதலாவது இன்னிங்ஸில் 11 ஓட்டங்களையே பெற்றுக்கொண்டார். இதே நேரம் 26 ஓவர்கள் பந்து வீசிய அவர் ஒரு விக்கெட்டைக் கூடக் கைப்பற்றவில்லை. இயன் செப்பல் 1979 - 80கள் வரை அவுஸ்திரேலிய அணியைப் பிரதிநிதித்துவப் படுத்தியுள்ளார். 75 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்ட இவர் 5,345 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (சராசரி 42.42)


டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 8,900 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 42.58 ஆகும். இதில் 20 சதங்களும் 46 அரைச் சதங்களும் அடங்குகின்றன. ஒரு போட்டியின்போது இவர் பெற்ற அதிக பட்ச ஓட்டங்கள் 333 ஆகும்.


உலகில் தோன்றியுள்ள சிறந்த சுழற் பந்து வீச்சாளர்களில் ஒருவராகத் திகழும் அவுஸ்திரேலிய அணி வீரர் ஷேன் வோன் 1991 - 92களில் தனது முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டார் சிட்னி நகரில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற இப் போட்டியின்போது இவர் 150 ஓட்டங்க்ளைக் கொடுத்து ஒரு விக்கெட்டை மாத்திரமே கைப்பற்றிக்கொண்டார். என்பது குறிப்பிடத் தக்கது.


இலங்கை அணியின் மிகச் சிறந்த வீரர்களுள் ஒருவரான அரவிந்த டி சில்வா, தான் பங்குபற்றிய முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது முதலாவது இன்னிங்ஸில் 16 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 3 ஓட்டங்களையும் மாத்திரமே பெற்றுக்கொண்டார்.

இவர் கலந்துகொண்ட முதலாவது கிரிக்கெட் போட்டி 1984, ஆகஸ்ட் மாதம் 23, 24, 25, 27, 28ஆம்


லென் ஹட்டன்


கிரகம் குச்


ஷேன் வோர்ன்


மாவன் அத்தபத்து

மென்செஸ்டரில் தனது இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்ட இவர் சத மொன்றைப் பெற்றுக்கொண்டார். அது முதற்கொண்டு 1954 - 55 வரையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக இங்கிலாந்து அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஹட்ன், 79 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்டு 6,971 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். சராசரி 55.51 ஆகும். இதில் 19 சதங்களும் 33 அரைச் சதங்களும் அடங்கும். பின்னர் 'நைட்' கௌரவப் பட்டம் பெற்ற ஸ்ரீமத் லென் ஹட்ன் 1990, செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி காலமானார். இவரது ஞாபகார்த்தமாக லண்டன் ஓவல் மைதானத்தில் இவரது உருவச் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

1964 - 65களில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக மெல்போனில் இடம்பெற்ற டெஸ்ட் போட்டியில் முதற் இதில் 14 சதங்களும் 26 அரைச் சதங்களும் அடங்குகின்றன. இவரது கிரிக்கெட் விளையாட்டுக் கால கட்டத்தினுள் பந்துவீச்சில் இவர் 20 விக்கெட்டுக்களை மாத்திரமே கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இங்கிலாந்து அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கிரஹெம் குச், தான் விளையாடிய முதலாவது டெஸ்ட் போட்டியின்போது இரண்டு இன்னிங்ஸிலுமாக ஒரு ஓட்டத்தைக் கூடப் பெற்றுக்கொள்ளவில்லை. அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக 1975ஆம் வருடம் பர்மிங் ஹேமில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில்தான் குச் முதன்முதலில் பங்குபற்றினார்.

1994 - 95ம் வருடங்கள் வரையில் இங்கிலாந்து அணியைப் பிரதிநிதித்துவப்படுத்திய கிரஹம் குச் 118 திகதிகளில் இங்கிலாந்து அணிக்கு எதிராக லண்டன் லோட்டஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இலங்கை அணியின் இன்னுமொரு சிறந்த வீரர் - தற்போதைய அணித் தலைவர் மாவன் அத்தபத்து. இவர் நுட்பத்துடன் கூடிய ஒரு துடுப்பாட்ட வீரராவார். 1990 - 91களில் இந்திய அணிக்கு எதிராக சண்டிகாரில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் முதன்முதலில் கலந்துகொண்ட மாவன், ஒரு ஓட்டத்தைக்கூடப் பெற்றுக் கொள்ளவில்லை. முதல் ஆறு இன்னிங்ஸ்களிலும் இவர் ஒரேயொரு ஓட்டத்தை மாத்திரமே பெற்றுக்கொண்டார். எனினும் பிற்காலத்தில் இவர் தனது திறமையைத் திறம்பட வெளிக்காட்டி வருபவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும்

**- மைந்தன்**

# எந்த கிழமையில் பிறந்தீர்கள்?

**மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ்வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.**

**சொல்பவர் :**
**ஜோதிட அறிஞர், பேராசிரியர்,**
**டாக்டர் பீ.கே. சாமி J.D.G.A.N.,**
**(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)**

## ஆதிக்கம் 7 : பிறந்த கிழமை ஞாயிறு

ஒய்வும் பிரகாசமும் மிக்க ஞாயிற்றுக்கிழமையிலும், ஏழு ஜென்மங்கள் என்று எண் 7ஐப் பெருமைப்படுத்தும் ஆதிக்கத்திலும் அவதரித்த நீங்கள், கஷ்டப்பட்டுத் தொழில் புரிந்து வருமானம் பெற வேண்டும் என்ற அவசியமே இல்லை. ஒரு மனிதனுக்கு மிகவும் அவசியமானது தொழில். அந்தத் தொழில் மூலந்தான் அவன் ஜீவிக்கின்றான். வருமானத்தைத் தரக்கூடிய இலகுவான தொழிலில் நீங்கள் அமர்ந்திருப்பீர்கள்.

ஒரு மனிதனுக்குத் தன்னுடைய உயிரைவிட மேலானது ஒழுக்கம். ஒழுக்கம் தவறிய மனிதனை மக்கள் மதிக்கமாட்டார்கள். வெறுத்துவிடுவார்கள். ஆனால் நீங்கள் உயிரைவிட மேலான ஒழுக்கத்தைவிட்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் தவற மாட்டீர்கள். அத்தோடு நேர்மை என்ற கவசத்தை உங்கள் சொல், செயல், எண்ணத்தில் அணிந்திருப்பீர்கள். அந்தளவுக்கு நேர்மை தவறாதவர் நீங்கள். பொய், களவு, ஏமாற்றுதல், துரோகம், வஞ்சகம் புரிதல் போன்றவைகளை விட்டும் நீங்கிய மனிதப் புனிதர்தான் நீங்கள்.

நாலு பேரை மதிக்கத் தெரிய வேண்டும். நாலு பேர் மதிக்கத் தக்கதாக வாழ வேண்டும் என்ற கொள்கை உடையவர் நீங்கள். இதனால் பிறர் உங்களை மதிப்பார்கள். பாராட்டுவார்கள். புகழுக்குரியவராக வாழ்வீர்கள். வாழ்க்கை என்பது ஓட்டை வாளியில் நீர் கொண்டு செல்வதற்கு ஒப்பானதல்ல. நீரும் மிஞ்சாது. நீர் ஒழுகிய தடமும் நிலைக்காது. ஆனால் உங்களுடைய வாழ்க்கை நீரெழுத்தல்லாமல் கல்லெழுத்துப் போன்றது. உங்களுடைய பேரும் புகழும் நிலைக்கக் கூடியது.

பொதுநலத் தொடர்பு, ஊடகத்துறை, விற்பனைப் பிரிவு, எழுத்தாளர் பகுதி போன்றவற்றில் தொழில் புரிந்து, உங்களது திறமை, ஆற்றல், அறிவு, நன்னடத்தை காரணமாக மிகப் பெரிய பதவிகளில் அமர்வீர்கள். இரக்க மனப்பாங்கு மிக்கவர் நீங்கள். கஷ்டப்படுகின்றவர்களைக் கண்டால் சகித்துக்கொள்ள மாட்டீர்கள். அவர்களுக்கு எப்படியாவது உதவி புரிவீர்கள்.

யாருக்காவது நீங்கள் கடன் கொடுத்தீர்களானால் திருப்பிக் கேட்கமாட்டீர்கள். அந்தளவிற்கு நீங்கள் இரக்க குணம் கொண்டவர். தன்னுடைய கஷ்டத்தைச் சொல்லி யாரும் பண உதவி கேட்டால் கொடுத்துவிடுவீர்கள். இதனால் பிறர் உங்களை ஏமாற்றக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இதனால் நீங்கள் நட்டம் அடைவீர்கள். என்றாலும் நீங்கள் நல்லவர் என்ற பெயரெடுத்து வாழ்வீர்கள்.

18 வயதில் நீங்கள் வேலை செய்ய ஆரம்பித்தாலும் 21, 24, 27, 30 வயதுக் காலங்களில் உங்களுடைய வருமானம் திருப்திதரக் கூடியதாக அமையாது. வரவும் செலவும் சமப்படும் நிலையில்தான் உங்களுடைய வாழ்க்கை அமைந்திருக்கும். 31 வயது தொடக்கம் 34 வயது வரை வருமானம் போதாமையால் சிரமப்பட வேண்டிவரும். இதனால் நீங்கள் மனம் தளர்வடையாமல் துணிவுடன் பல இடங்களில் முயற்சி செய்தால் ஒரு சில இடத்தில் வாழ்வதற்குத் தேவையான வருமானம் கிடைக்கும்.

34 வயது உங்களுக்கு ஆரம்பமாகிய பிறகு நீங்கள் எதிர்பாராத இடத்தில் ஒரு வேலை கிடைத்துத் தொடர்வீர்கள். இதனால் உங்களுக்குத் திருப்தியான வருமானம் கிடைக்கும். 34, 37, 41, 44, 47 வயதுகளில் உங்களுடைய வருமானம் படிப்படியாக அதிகரிக்கும். உங்களுக்கு அளவுக்கதிகமாக வருமானம் பெருகும். இதனால் சேமிப்பு உண்டாகும். சேமித்த பணத்தை வைத்து 48 வயதில் சொந்தத் தொழில் தொடங்குவீர்கள். சினிமா, இசை, நாடகம் போன்றவற்றுக்கான பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்யும் வியாபாரமாக இது அமையும். இதனால் நல்ல வருமானத்தினைப் பெறுவீர்கள். இதன் காரணமாக நீங்கள் மரணிக்கும் வரையிலும் சந்தோசமாக வாழ்வீர்கள்.

உங்களுக்கு வாழ்க்கையில் எந்தவிதமான ஆபத்துக்களும் இல்லை. அதாவது கண்டங்கள் உங்களுக்குக் கிடையாது. உடற் சூடு காரணமாக ஆரோக்கியம் பாதிக்கும். 35 வயதிலிருந்து 44 வயது வரைக்கும் மலச்சிக்கல், வயிற்று வலி .போன்ற உடற் தொல்லைகள். அடிக்கடி ஏற்படும். குணமாகும். தொடர்ந்து இந்தக் கோளாறு உங்களைச் சிரமப்படுத்தாது. 45 வயது வரை சிரமப்படுவீர்கள். பின்னர் பூரணமாகச் சுகப்படும். அத்தோடு அடிக்கடி மூட்டுப் பிடிப்பு ஏற்பட்டுக் குணமாகும்.

35 வயது முதல் 44 வயது வரை குளிர்ச்சியை உண்டு பண்ணும் உணவு வகைகளை நீங்கள் சாப்பிட வேண்டும். 45 வயது தொடக்கம் ஆயுள் வரை வாயுவை ஏற்படுத்தாத உணவுகளை நீங்கள் சாப்பிட்டு வந்தால் மூட்டுப் பிடிப்பு நீங்கும். உங்களுக்கு அதிர்ஷ்டத்தைத் தரக்கூடிய எண் (1) ஒன்று. எனவே 1, 10, 19, 28 திகதிகளில் நல்ல காரியங்களைச் செய்யுங்கள். வெற்றி நிச்சயம். இந்தத் திகதிகள் ஞாயிற்றுக்கிழமையில் அமையுமாக இருந்தால் இதன் சந்தோசப் பலன் பலமடங்காகும்.

கோமேதகம் பதித்த தங்க மோதிரம் அணியுங்கள். அதிர்ஷ்டம் ஏற்படும். சந்தன நிறத்தில் ஆடை அணியுங்கள். ஒற்றை எண் உள்ள வீட்டில் வசியுங்கள். அதிர்ஷ்டமாகும். ஆகவே எண் 7ஐயும் ஞாயிற்றுக்கிழமையினையும் உடைய நீங்கள் வாழ்வில் வெற்றிபெற என் ஆசீர்வாதம்.

ஏழு, ஞாயிறோடு இணைந்தால் வாழ்வு வெற்றி பெறும். தாழ்வு என்றும் இல்லை. முழு சுகமும் கிடைக்கும் உங்களுக்கு.

**அடுத்த வாரம் ஆதிக்கம் 8 திங்கட்கிழமை பிறந்தவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## சச்சினின் விக்கெட் மிகவும் முக்கியமானது - அப்ரிடி

**க**டந்த 28ஆம் திகதி இந்தியாவின் சின்னச்சாமி மைதானத்தில் இடம்பெற்ற இந்திய - பாகிஸ்தான் அணிக்கு இடையிலான இறுதி டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி இந்திய அணியை வெற்றி கொண்டதன் மூலம் டெஸ்ட் தொடரை 1-1 என்ற விகிதத்தில் சமன் செய்தது எல்லோருக்கும்



தெரிந்ததே!

இப் போட்டிகளின்போது பாகிஸ்தான் அணி சார்பில் அவ்வணியின் சகலதுறை ஆட்டக்காரர் சஹீட் அப்ரிடியின் பந்துவீச்சு அபாரமாக இருந்தது. இந்திய அணியை வெற்றி கொண்ட பின் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த சஹீட் அப்ரிடி "என் பந்துவீச்சுக்குப் பெருமை சேர்ப்பது இந்திய அணியின் நட்சத்திர நாயகன் சச்சின் டெண்டுல்கரை ஆட்டமிழக்கச் செய்ததுதான்" என்று தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் "சச்சின் ஒரு அபாயகரமான ஆட்டவீரர். அவர் மட்டும் அத் தொடரில் தொடர்ந்தும் களத்தில் தரித்திருந்திருந்தால் நாம் தொடரைச் சமன் செய்திருக்க முடியாது. அவரை ஆட்டமிழக்கச் செய்வதிலேயே எமது அணியின் பந்துவீச்சாளர்கள் குறியாக இருந்தார்கள். அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டியதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்றும் அவர் தெரிவித்தார்.

## உலகக் கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டி

இந்திய கிரிக்கெட் ஆண்கள் அணியினர் தோல்விகளைச் சந்தித்து வந்தபோதிலும் இந்திய அணியின் மகளிர் கிரிக்கெட் அணியினர் இந்தியாவின் புகழைக் காப்பாற்றி வருகின்றனா என்பது மனதுக்கு ஆறுதலான ஒரு செய்திதான். அந்த வகையில் கடந்த வாரம் இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியானது இங்கிலாந்து அணியை 7 விக்கெட்டுக் களினால் வீழ்த்தியது குறிப்பிடத் தக்கது. இப் போட்டி இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் இடம்பெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. அப்போது இங்கிலாந்து அணி 139 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் ஜூலான் கௌஸ்வமி 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் நீட்டு டேவிற் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். 140 ஓட்டங்கள் இலக்கு என்று களமிறங்கிய இந்திய அணி141 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்தது இப் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இதில் சொப்ரா ஆட்டமிழக்காது 64 ஓட்டங்களையும், டார் 42 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.


அடுத்து இந்திய மகளிர் அணியானது தென்னாபிரிக்க அணியைச் சந்திக்கவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

## இன்சமாமின் மன மாற்றம்

**த**னது 100 டெஸ்ட் போட்டியைப் பூர்த்தி செய்து அதிலும் 167 ஓட்டங்கள என்ற வெற்றிக் களிப்பில் திளைக்கும் பாகிஸ்தான் அணியின் தலைவர் இன்சமாம் உல் - ஹக், கிரிக்கெட் போட்டிகளில் தோல்வியையோ அல்லது வெற்றியையோ தனது அணி பெற்றுக் கொண்டாலும் தனது வீரர்களை நீங்கள் சிறப்பாக விளையாடவில்லை என்று கூறுவது வழமை. ஆனால் வழமைக்கு மாறாக இந்திய டெஸ்ட் தொடரை 1-1 என்று சமன் செய்த பின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவர் இப் போட்டித் தொடர்களில் தனது அணி வீரர்கள் மிகவும் சிறப்பான பணியைச் செய்துள்ளார்கள் என்றும் தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் "எனது அணி வீரர்கள் சிறந்த மன விருப்புடன் இப் போட்டிகளில் தமது திறமைகளை காட்டியா தால் தான் அந்த வெற்றி இலக்கை நாம் அடைய முடிந்தது" என்று தெரிவித்துள்ளார்.



இவரின் அந்த அறிக்கையைக் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ள பாகிஸ்தான் அணியின் வீரர்கள் இன்சமாம் - உல் - ஹக் தனது நூறாவது டெஸ்ட் போட்டியின் பின் தன்னையே மாற்றிவிட்டார் போலும் என்று தமக்குள் பேசிக்கொள்கின்றனர்.

ஒரு சிலர் அந்த மாற்றம் தொடர்ந்தும் இருந்தால் சரி என்று கூறிப் பெருமூச்சு விட்டுக் கொள்கிறார்கள்.


# ஜூலியஸ் சீசர்
# கி.மு. 100 - கி.மு. 44

## உலகை வியக்க வைத்தவர்கள்

வரலாற்றுப் புகழ் பெற்ற ரோமானிய இராணுவத் தலைவராகவும் அரசியல் வல்லாட்சியாளராகவும் விளங்கிய கேயஸ் ஜூலியஸ் சீசர், ரோமாபுரியில் கடும் அரசியல் கொந்தளிப்பு நிலவியபோது, கி.மு. 100ஆம் ஆண்டில் ரோம் நகரில் பிறந்தார்.

கி.மு. 2ஆம் நூற்றாண்டில், இரண்டாம் யூனிக் போரில் கார்த்தேஜியரை வெற்றி கொண்ட பின்னர் ரோமானியர்கள் ஒரு பெரிய பேரரசை உருவாக்கியிருந்தார்கள். இந்த வெற்றியின் காரணமாக ஏராளமான ரோமானியர்கள் பெரும் பணக்காரர்களாகியிருந்தனர். ஆயினும், இந்தப் போர்களினால் ரோமன் சமூக - பொருளாதாரக் கட்டுக்கோப்பு வெகுவாகச் சீர்குலைந்திருந்தது. பெரும்பாலான குடியானவர்கள் தங்கள் உடைமைகளை இழந்தனர். முதலில் ஒரு சிறு நகருக்கான நகராட்சி மன்றமாக அமைக்கப்பட்டிருந்த ரோமானிய ஆட்சிப் பேரவையினால், ஒரு மாபெரும் பேரரசை நியாயமாகவும் திறமையாகவும் ஆட்சி செய்ய இயலவில்லை. அரசியல் ஊழல் எங்கும் தலைவிரித்தாடியது. ரோமாபுரியின் சீர்கெட்ட ஆட்சியினால் மத்திய தரைக் கடலைச் சூழ்ந்த பிரதேசங்களில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை பெருங்குழப்பம் நிலவியது. அரசியல்வாதிகளும், படைத தளபதிகளும், கிளர்ச்சித் தலைவர்களும் அதிகாரத்தைப் பிடிக்கப் போராடினார்கள். படைகள் போட்டி அணிகளாகப் பிளவுபட்டு ரோமின் மீதே தாக்குதல் நடத்தின. (கி.மு. 78இல் மாரியஸின் படைகளும், கி.மு. 82இல் சல்லாவின் படைகளும் இவ்வாறு படையெடுத்தன). அரசில் ஊழல் மலிந்து திறமையற்ற ஆட்சி நடந்து வந்தபோதிலும், பெரும்பான்மையான ரோமானியக் குடிமக்கள் அரசு நீடிப்பதை விரும்பினர். ரோமில் மக்களாட்சி முறையை நெடுநாள் காப்பாற்றி வைக்க முடியாது என்பதையும், அப்படிக் காப்பாற்றுவதால் ஒரு பயனுமில்லை என்பதையும், மிகத் தெளிவாக அறிந்துகொண்ட முதலாவது முக்கியமான அரசியல் தலைவர் ஜூலியஸ் .சீசர் ஆவார்.

சீசர் பண்டைய ரோமாபுரி உயர்குடி ஒன்றின் வழித்தோன்றலாக வந்தவர். அவர் சிறந்த கல்வி பயின்றார். இளமையிலேயே அரசியலில் நுழைந்தார். அவர் பல பதவிகளை வகித்தார். பல்வேறு தலைவர்களுடன் கூட்டணி சேர்த்து செயற்பட்டார். படிப்படியாக அரசியலில் உயர்நிலை எய்தினார். அதன் விவரங்களை விரிப்பின் பெருகும். எனினும், கி.மு. 58ஆம் ஆண்டில் ஜூலியஸ் சீசர் தமது 42ஆம் வயதில் ரோமாபுரியின் ஆட்சியின் கீழிருந்த சிசால்பைன் கால் (வடக்கு இத்தாலி), இல்லிரீக்கம் நார்போனிஸ் இப்போதுள்ள யூகோஸ்லாவியாவின் கடற்கரைப் பகுதி கால், (பிரான்ஸின் வடக்குக் கடற்கரைப் பகுதி) ஆகிய மூன்று அயல்நாட்டு மாகாணங்களின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். 20,000 வீரர்களைக் கொண்ட நான்கு ரோமானியப் படை அணிகள் அவருடைய ஆணையின் கீழ் வைக்கப்பட்டன.



சீசர், கி.மு. 58-51 ஆண்டுகளில் இந்தப் படைகளைப் பயன்படுத்தி, தற்போதுள்ள பிரான்ஸும், பெல்ஜியமும் அடங்கிய கால்பகுதி முழுவதையும், சுவிற்ஸர்லாந்து, ஜெர்மனி, ஹாலந்து ஆகிய நாடுகளின் பகுதிகளையும் வெற்றிகொண்டார். அவருடைய படையினரின் எண்ணிக்கையை விட காலிக் kuGfl Fbfsodl படையினர் கப் பெருமளவில் இருந்தபோதிலும், அந்தப் படையினரைச் சீசர் படைகள் முற்றிலுமாகத் தோற்கடித்து, றைன் ஆறுவரையிருந்த பகுதிகள் அனைத்தையும் ரோமானிய ஆட்சியின் கீழ் கொண்டுவந்தன. பிரிட்டனைக் கைப்பற்றுவதற்காகவும் இரண்டு முறை சீசர் படைகளை அனுப்பினார். ஆனால் அங்கு நிரந்தரமான வெற்றிகளை அவை பெற முடியவில்லை.

சீசர் ஏற்கெனவே மக்களிடம் செல்வாக்கு மிக்க ஒரு முன்னணி அரசியல் தலைவராக இருந்தார். கால் பகுதியை அவர் வெற்றிகொண்ட பிறகு ரோமாபுரியில் மக்கள் போற்றும் மாபெரும் நாயகராக அவர் திகழ்ந்தார். அவர் அளவுக்கு மீறிப் புகழும் வலிமையும் பெற்றுவிட்டதாக ரோமிலிருந்த அவரது அரசியல் எதிரிகள் கருதினார்கள். அவருடைய இராணுவத்தின் மீது அவருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் முடிவுற்றதும், அவர் ஒரு தனிக் குடிமகனாக - அதாவது அவருடைய இராணுவம் இல்லாமல் - ரோமாபுரிக்குத் திரும்பி வர வேண்டும் என்று ரோமானிய ஆட்சிப் பேரவை அவருக்கு ஆணையிட்டது.

(வியப்புக்கள் தொடரும்....)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

வெளியில இறங்க முடியாமல் வெய்யில் வாட்டுது. வழமையான வெப்பத்தை விடவும் அதிகமான வெப்பமா இருக்கேக்க இழுத்து மூடித் தூங்க ஏலுமே? பழைய துணிமணியை வாங்கிறவையைத் தேடி கொஞ்சம் பழைய கோர்ட்டுகளோட காத்துக்கொண்டிருக்கிறன். கோர்ட் எண்டவுடன கா.பூ. எப்படா கோர்ட்டுப் போட்டுக் கொண்டு திரிஞ்சவன் எண்டு யோசிச்சுப்போடாதயுங்கோ. இதுகளெல்லாம் என்ர கோர்ட்டுகள் இல்லையுங்கோ. கொஞ்ச நாளா வெளிநாட்டுப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறதுக்காக எங்கட கூத்தமைப்பு எம்.பி.மார் தைச்ச துகள். அதுகளைத் தைச்ச புதுசில பார்க்கணுமே. அரிசி மூடைக்கு சொக்காய் போட்ட மாதிரி தொந்தியும் தோரையுமா நக்கல் சிரிப்போட பவுஸாப் போச்சினம். சந்திப்பு சந்திப்பு எண்டு சொக்காயை மாட்டிக்கொண்டு போய் ஓசியில தண்ணி வாத்துப் போட்டு வாறதும் அடுத்த நாள் பத்திரிகைகளுக்கு உணர்ச்சி கொப்பிளிக்க அறிக்கை விடுறதுமாக கொஞ்ச நாள் இவையள் பட்டபாடு. இருக்கே, அப்பப்பா.... அதைப் பற்றிச் சொல்லுற தெண்டால் எனக்கு வயசு போயிடும். சந்திப்புகளுக்குப் போய் செருப்பும் காலும் தேய்ஞ்சு போனவையளும் இருக்கினம். இந்தச் சந்திப்புகளாலை ஒரு பிரயோசனத்தையும் காண முடியவில்லை எண்டதுதான் சோகத்திலும் சோகம். கடைசியா என்ன நடந்தது? சு.ப. எரிக்கைச் சந்திச்சுப் போட்டு தன்ர பரிவாரத்தோட ஐரோப்பாவுக்குப் பறந்தார். போகேக்க கொழும்பில சந்திச்ச அவையின்ர அனுதாபிகளுககு அவர் சொன்னதுதான் வேடிக்கை. "இதுவரை நடந்த சந்திப்புகளில இந்த வெங்கணாந்திகள் வெட்டு ஒண்டு துண்டு ரெண்டு எண்டு பேசியிருந்தால் இந்தப் பயணமே தேவையில்லை. அவையள் வரேக்க இவையை நம்பிக் கதைக்க விட்டுப்போட்டு இப்ப தேடிப் போய்க் கதைக்க வேண்டியதாப் போச்சுது" எண்டாராம்.

"பின்ன ஏன் உவையை இன்னும் பதவிகளில வச்சிருக்கிறியள்? தூக்கிப் போட்டுப் பொருத்தமானவையைப் போடலாந்தானே" எண்டு கேட்டதுக்கு....

ண்டாராம்.

"நினைச்சால் அடுத்த வினாடியே மாற்றஞ் செய்ய முடியும். ஆனா உந்தத் தலையாட்டிகளை வச்சுக்கொண்டிருக்கிறதுக்கு பொலிடிக்களாக இருக்கக்கூடிய இலாபம்தான் காரணம்" எண்டாராம்.

சு.ப. வெளிநாடுகளுக்கு நேரடியாக ஆஜரானதால சந்திப்புகள் இல்லாம ஆக்கள் ஹோம் வேர்க் செய்துகொண்டிருக்கினம். இப்ப அவைக்கு இந்தக் கோர்ட்டுகள் தேவையில்லை. எங்கட சனத்தை இவை அத்தி பூத்தாற் போல எப்பவாவது பாப்பினம். அந்த நேரத்தில இவை கோர்ட்டுப் போட்டுக்கொண்டு போகமாட்டினம். அப்பிடிப் போனால் செத்துப் போன சப்ளின் செருமிக் கொண்டு வாற மாதிரித்தான் இருக்கும். சிரிச்சுச் சிரிச்சு சனத்துக்கு கண்ணீர் வந்தாலும் வந்திடும் எண்டதால அந்த அசிங்கத்தை செய்யிற அளவுக்கு சொரணை இல்லாதவையளில்லை. அதனால இந்தக் கோர்ட்டுகளை பிளாஸ்ரிக் வாளிக்காரனுக்குக் குடுத்துப் போட்டு ஒரு வாளி வாங்கிக் கொள்ளுங்கோ எண்டு சொல்லத்தான் இவையைத் தேடித் திரியிறன். அம்புடுகினமில்லை. ப்ளீஸ்! நல்லவை பெரியவை இவையைப் பற்றி ஏதாவது துப்புக் கிடைச்சால் ஒருக்கால் எனக்குச் சொல்லுங்கோ. அவைக்கு சொல்லுறதுக்காக அட்வைசுகளை சேமிச்சுச் சேமிச்சு என்ர தலை ஓ.்ப்ளோர் ஆகிற சிச்சுவேசனில இருக்கு. தயவு செய்து என்ர தலை வெடிக்க முன்னம் என்னைக் காப்பாத்துங்கோ.

யாவும் கலப்படமற்ற கற்பனை

# இந்த வாரம் உங்கள் பலன்

(31.03.2005 தொடங்கி 06.04.2005 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

மீனம் - சூரியன், புதன், இராகு, மிதுனம் - சனி, கன்னி - வியாழன், கேது
மகரம் - செவ்வாய், கும்பம் - வெள்ளி
சந்திரன் விருச்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நிலை மேன்மை, உயர்ந்த நிலை, காரியானுகூலம், பொருள் பேறு, உறவினர் உபத்திரவம், உத்தியோக அலைச்சல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03.

**இடபம் :** (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, வீண் துயர், பெரியோர் உதவி, குடும்பக் கலகம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)
தொழில் பலிதம், பண வரவு, பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, குடும்ப நன்மை, உத்தியோக முயற்சி, புதிய ஸ்தானம் கிடைத்தல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வியாழன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் நன்மை, பண வரவு, காரிய சித்தி, வீண் பிரயாணம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் அலைச்சல், செலவு மிகுதி, வீண் துயர், தேக சுகம் நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உறவினர் உபத்திரவம், உத்தியோகச் சிக்கல், மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 05.

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் நன்மை, பண வரவு, கௌரவம், அன்னியர் நட்பு, வெளியிட வாழ்க்கை, குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 02.

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)
தொழில் கஷ்டம், பண விரயம், மனக் கலக்கம், உறவினர் உதவி, தேக சுகம் பாதிப்பு, உத்தியோகம் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள் வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)
தொழில் பலிதம், பெரியோர் உதவி, மனக் குறை நீங்கும், இனசன மேன்மை, உத்தியோக மாற்றம், வீண் மனஸ்தாபம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** வெள்ளி
**அதிர்ஷ்ட இலக்கம் :-** 03.

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)
தொழில் பலிதம், பண வரவு, அன்னியர் நட்பு, மனக் குறை நீங்கும், இனசன நன்மை, உத்தியோகம் செல்வாக்கு, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 07.

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)
தொழில் நன்மை, பண வரவு, தூர இடப் பிரயாணம், மனக் குறை நீங்கும், உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** புதன்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 03.

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் நட்டம், பணச் செலவு, வீண் பிரயாணம், தேக சுகம் நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** செவ்வாய்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 04.

**மீனம் :** (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)
தொழில் சிரமம், பணியாளர் தொல்லை, பணச் செலவு, குடும்பக் கஷ்டம், செலவு மிகுதி, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:-** திங்கள்.
**அதிர்ஷ்ட இலக்கம்:-** 01.



## ரம்.... ரம்...... வைரம்

இது வெறும் கல்லல்ல. உலகில் விலைமதிக்க முடியாத வைரங்களில் ஒன்று. வைரங்களுக்குப் பிரசித்திபெற்ற DE BEERS நிறுவனம் உருவாக்கியுள்ள இவ்வைரக்கல் தென்னாபிரிக்காவில் எடுக்கப்பட்ட மிகப் பெரிய வைரங்களில் ஒன்று எனவும், அண்ணளவாக 616 கெரட் எடையுடையதெனவும் கூறப்படுகிறது.

## ஆயத்தம்



சென்ற வருடத்தை உலுக்கிய பேரழிவுகளில் ஒன்றாகிய சுனாமியின் தாக்கத்தினால் இலங்கையின் கரையோரப் பகுதியான அம்பாறை மாவட்டம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது தெரிந்த விடயமே. இங்கு காணப்படுவது, கனடிய அரசாங்கத்தினால் அனுப்பப்படவுள்ள நிவாரணப் பொருட்களின் ஒரு தொகுதியைக் கனடிய இராணுவத்தினர் பொதி செய்யும் காட்சி. பொதி செய்யப்படுவது காலாவதியாகாமல் இருந்தால் சரிதான்.

## நிஜமா?



## ரசனை

இந்தியக் கிரிக்கெட் இரசிகர்கள் உலகில் முற்றாக மாறுபட்ட இரசிகர்களாவர். இரசிப்புத் தன்மைக்காக எதனையும் செய்யக் கூடியவர்கள். அந்த வகையில் அருகில் உள்ள கல்லூரி மாணவி ஒருவர் தனது ஆறுதலை வெளிக்காட்டுமுகமாக இவ்வாறு காட்சியளிக்கிறார்.



## சமாதானமா?

இஸ்ரேல் - பலஸ்தீனம் என்பது ஜென்மப் பகையாளிகளாக மாறிவிட்ட நாடுகள். இவர்களுக்கு இடையில் சமாதானத்தை ஏற்படுத்த பல நாடுகள் முன்வந்தபோதும் கைகூடவில்லை. தற்பொழுது ஒரு சமாதானத்தின் அறிகுறியாக எகிப்து நாடு தலையிட்டு இவ்விரு நாடுகளுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஒன்றை ஜனவரி மாதம் ஏற்படுத்தியது. இப் பேச்சுவார்த்தையின்போது பலஸ்தீன ஜனாதிபதி மொஹமட் அபாஸ், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் இருவரும் நட்பாகக் கைகுலுக்கினர். இது சமாதானத்தின் அறிகுறியா அல்லது.............?



முஸ்லிம் பெண்கள் வீட்டுக்குள் அடக்கப்பட்ட காலம் இப்போது மலையேறிவிட்டது. அவர்களும்கூட ஆயுதங்கள் ஏந்திப் போராடத் தொடங்கிவிட்டனர். அந்த வகையில் ஈரான் நாட்டு பொலீஸ், தற்போது விசேட பெண் பொலீஸ் பிரிவொன்றை ஆரம்பித்துள்ளது. அவர்களின் பட்டமளிப்பு வைபவம் கடந்த வாரம் நடைபெற்றது. அந்நிகழ்வில் ஆயுதங்களைக் கையளிக்கும் காட்சியே இது. இதுவல்லவா பெண் விடுதலை!

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி கரிஷ்மா/02.04.2005

உரும்பிராயைச் சேர்ந்த வசீகரன் - கைதடியைச் சேர்ந்த சுயாவதி தம்பதியினரின் செல்வப் புதல்வி கரிஷ்மா தனது முதலாவது பிறந்தநாளை 02-04-2005 அன்று வசிப்பிடமான சுவிஸ் Magnwil இல் உள்ள தனது இல்லத்தில் எளிமையாகக் கொண்டாடுகிறார்.

இவரை சுவிஸிலுள்ள அன்பு அப்பா - அம்மா, அப்பப்பா - அப்பம்மா, அம்மம்மா - அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், தாத்தாமார், பாட்டிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சகல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல் :- அப்பா வசீகரன்
அம்மா சுயாவதி (சுவிஸ்)



## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

பாஸிர் மரிக்கார் - உன்சுல் நிஷா தம்பதியினரின் செல்வப் புதல்வன் மொஹமட் பர்ஹான் (Mohamed Farhan) தனது மூன்றாவது பிறந்தநாளை 29.03.2005அன்று அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அவரை உம்மா, வாப்பா, வாப்பம்மா, உம்மம்மா, அப்பா, பெரியம்மாமார், சாச்சிமார், மாமாமார், மாமிமார், பாதிர் தம்பி, ஹாதிப் மச்சான், தாத்தாமார், நானாமார், நண்பிகளான மஞ்சு, கம்சா ஆகியோர் அல்லாஹ்வின் அருள் பெற்று நோய் நொடியின்றி நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.



மொஹமட் பர்ஹான்
29.03.2005